தமிழரசு
ஜூன் 2005




விழாக்காலம் – கோ–ஆப்டெக்ஸ் காலம்
கோ-ஆப்டெக்ஸ்
காலத்திற்கேற்ற புதுமையுடனும்
பாரம்பரியப் பெருமையுடனும்...
1935 முதல் மிகச் சிறந்த இரகங்களை
உங்களுக்காகவே வழங்குகிறது.
• காஞ்சிபுரம் அசல் பட்டு சேலைகள்
• சேலம் தரமிக்க பட்டு சேலைகள்
• ஆரணி தரமிக்க பட்டு சேலைகள்
• கோயமுத்தூர் உயர்ரக பருத்தி சேலைகள்
• உறையூர் பருத்தி சேலைகள்
• சேலம் உயர்ரக பருத்தி சேலைகள்
• மதுரை சுங்கடி புடவைகள்
• சென்னிமலை ஏற்றுமதி தரம் வாய்ந்த படுக்கை விரிப்புகள்
• கோவை ஏற்றுமதி தரம் வாய்ந்த ஈரலை துண்டுகள் (டவல்கள்)
• குறிஞ்சிப்பாடி ஏற்றுமதி தரம் வாய்ந்த லுங்கிகள்
• தாத்தையங்கார்பேட்டை வேட்டிகள்
கோ-ஆப்டெக்ஸ்
Visit us at www.tn.gov.in / www.cooptex.com
இவை அனைத்தும் உங்களுக்காக வழங்குகிறது கோ–ஆப்டெக்ஸ்.
வாருங்கள். பாருங்கள். வாங்குங்கள். முழு திருப்தியைக் கண்டு மகிழுங்கள்.
ஆண்டுதோறும் 1,00,000 பட்டு புடவைகள், 3,00,000 பருத்தி புடவைகள், 10,00,000 பருத்தி விரிப்புகள் மற்றும் 10,00,000 டவல்கள் விற்பனை செய்யப்படுகின்றன.
டெல்லி, மும்பாய், கொல்கத்தா, பெங்களூர், அகமதாபாத், கோவை, திருச்சி மற்றும் இந்தியாவின் பிற முக்கிய நகரங்களில் எங்கள் சேவை உங்களுக்காக.

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
வைகாசி – ஆனி
மலர்: 36 இதழ்: 12
ஜூன் 2005
விலை ரூ.10

## இந்த இதழில்...

★ வ.உ.சி அவர்களின் வரலாறு ஒரு தியாக காவியம் *(திருநெல்வேலி மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்* செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் *ஆற்றிய உரை)* ........ 2

★ 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ – மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் ........ 10

★ அண்ணா மேலாண்மை நிலையத்திற்கென கட்டப்பட்டுள்ள புதிய கட்டட வளாகம் ........ 11

★ பிறவிக் குறைபாடு உடைய குழந்தைகளுக்கு அரசின் சார்பில் இலவசச் சீரமைப்பு அறுவை சிகிச்சைத் திட்டம் ........ 12

★ சொந்தமாக ஆட்டோ வாங்க மானியத்துடன் கடன் உதவித் திட்டம் *(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை – 26.5.2005)* ........ 14

★ பதக்கம் வென்ற வனத்துறை விளையாட்டு வீரர்களுக்கு ரொக்கப் பரிசு ........ 16

★ நதிகள் இணைப்புத் திட்டம் – தென்மண்டலப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் உத்வேகம் அளிக்கும் ........ 17

★ மருத்துவம், பொறியியல் மற்றும் ஆசிரியர் பயிற்சி பயிலும் மாணவ, மாணவியருக்கு நிதி உதவி ........ 24

★ தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகை ........ 25

★ பூம்புகார் மாநில விருது ........ 27

★ கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஒய்வூதியம் ........ 28

★ ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ஆட்டோக்கள் ........ 31

★ ஆடவர் ஏறு நடை போடட்டும்! மகளிர் வீறு நடை போடட்டும்! அதனால் தமிழகம் வெற்றி நடை போடட்டும்! ........ 33

★ இந்தியாவிலேயே முதன்முதலாக ஆண்டிபட்டியில் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா *(தேனி மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்* செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் *ஆற்றிய உரை)* ........ 37

★ சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுச் சங்கத்தின் புதிய இணையதளம் ........ 45

★ “என்றென்றும் சென்னை” திட்டத்தின் கீழ் புதிய கட்டடங்கள் ........ 46

★ 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற மாணவ – மாணவியருக்கு ரொக்கப் பரிசு ........ 47

★ ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்களின் பயன்பாட்டிற்காக ஊர்திகள் ........ 49

★ சீர்மிகு சட்டப் பள்ளிக்கான புதிய கட்டடம் ........ 52

★ பெருநகர காவல் நவீனமயமாக்கல் திட்டம் ........ 57

★ ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ – மாணவியருக்கு 100 விடுதிகள் ........ 59

★ நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ மகளிர் தயாரிக்கும் நவீன தொழில்நுட்ப ஓடுகள் ........ 63

★ புதுக்கோட்டை, வாராப்பூர் ஊராட்சியில் விறகு மூலம் மின் உற்பத்திச் சாதனை ........ 68

★ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 13ஆவது அகில இந்திய மாங்கனிக் கண்காட்சி ........ 70

★ ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்ற பெற்றோர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியுதவி ........ 73

★ வறட்சியைத் தாங்கி வளரும் சோற்றுக் கற்றாழை ........ 77

★ பதக்கம் வென்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகை ........ 80

### அட்டைப்பட விளக்கம்

**முதலாம் பக்க அட்டை :** தேனி மாவட்ட அரசு விழா
**மூன்றாம் பக்க அட்டை :** வ.உ.சிதம்பரனார் மணிமண்டபம் திறப்பு விழா
**நான்காம் பக்க அட்டை :** திருநெல்வேலி மாவட்ட அரசு விழா

*ஆசிரியரும் வெளியிடுபவரும்*: **சி. முத்துக்குமாரசாமி**, இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com








# வ.உ.சி. அவர்களின் வரலாறு ஒரு தியாக காவியம்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**தெ**ன்னகத்தின் பண்பாட்டுக் களஞ்சியமான திருநெல்வேலி மாநகரில் என் அன்புக்குரிய தென்பாண்டி மக்களாகிய உங்களைச் சந்தித்து, உங்களோடு கருத்துகளைப் பகிர்ந்துக் கொண்டு, நிறைவேற்றப் பட்டிருக்கும் திட்டங்களைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நலிந்த பிரிவினர்க்கு நலத்திட்ட உதவிகளை வழங்கும் நல்லதொரு வாய்ப்பு இன்று கிடைத்ததற்காக நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பொதிகை மலைத் தொடரில் பொங்கி வழியும் பொருநை ஆற்றங்கரையில் வாழும் நீங்கள் கொடுத்து வைத்தவர்கள்.

தென்றல் பிறந்ததும் பொதிகையில்தான்! செந்தமிழ் பிறந்ததும் பொதிகையில்தான்!

எனவே தென்றலின் மென்மையும், செந்தமிழின் இனிமையும் சேர்ந்த பெருமக்கள் நீங்கள்.

தமிழ் பிறந்த இந்த மண்ணில்தான் தமிழ் வளர்த்த பெரியோர்களும், தமிழர்க்காகப் பாடுபட்ட சான்றோர்களும் பிறந்தார்கள்.

சமயம் பரப்ப வந்த சான்றோர்களும் இந்த மண்ணுக்கு வந்து, தமிழ் மயமாய் ஆனார்கள்.

அயல்நாட்டிலே பிறந்து, இங்கு வந்து தமிழ் கற்று தேம்பாவணி என்னும் தீந்தமிழ்க் காப்பியத்தைத் தந்த வீரமா முனிவர், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் வரைந்த கால்டுவெல்; திருக்குறளையும், திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த G.U.போப்; இணையற்ற தமிழ்த் தொண்டு புரிந்த ரேணியஸ் அய்யர் போன்ற பெருமக்களை எல்லாம் வரவேற்று வாழ வைத்தது நெல்லைச் சீமை அல்லவா?

சேனாவரையர், சிவஞான முனிவர், நம்மாழ்வார், குமரகுருபரர், பரிமேலழகர், உமறுப் புலவர், கிருஷ்ணப் பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார், சோமசுந்தர பாரதியார், அண்ணாமலைரெட்டியார், புதுமைப்பித்தன், ரசிகமணி டி.கே.சி – இப்படி எத்தனை எத்தனை பெருமக்கள் நெல்லைச் சீமையிலே தோன்றி நித்தம் நித்தம் முத்தமிழ் வளர்த்தார்கள்.

வாழையடி வாழை என வந்த அந்த வண்டமிழ் மரபில் வந்தவர்தான் தியாகச் செம்மல் வ.உ.சி. அவர்கள்!

செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழர் என்ற சிறப்புகளுக்குச் சொந்தக்காரரான விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு எழுப்பப்பட்டுள்ள நினைவுமண்டபத்தைத் திறந்து வைக்கும் பேறு எனக்கு இன்று கிடைத்தது குறித்து நான் இறும்பூதடைகிறேன்.



தியாகச் செம்மல் வ.உ.சி. அவர்களின் அறிவுக்கும், ஆற்றலுக்கும், வீரத்துக்கும், தியாகத்துக்கும் தலை வணங்கி நிகழ்காலமும், எதிர்காலமும் அவரை நினைவு கூர வேண்டும் என்பதற்காக தீரர் சிதம்பரனார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க விரும்பி அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு 13.3.2003 அன்று நெல்லையிலே நடைபெற்ற அரசு விழாவில் இம்மணிமண்டபத்துக்கான அடிக்கல்லை நாட்டினேன்.

இன்று அந்த மணிமண்டபத்தைத் திறந்து வைக்கும் மாபெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கி; ஏழை எளிய மக்களுக்காக இலவசமாக வாதாடி; ஆங்கிலேயருக்குப் போட்டியாகக் கப்பல் கம்பெனி தொடங்கி; எழுத்தாலும், பேச்சாலும் சுதந்திர வேட்கையைத் தூண்டி; இரட்டை ஆயுள் சிறைத் தண்டனை பெற்று; சிறையிலே செக்கிழுத்து தியாகத்தின் திருவுருமாய் விளங்கிய சிதம்பரனாரின் வரலாறு ஒரு வீர காவியம்!

செல்வக்குடியிலே பிறந்து, தேச விடுதலைக்காகப் போராடி, வறுமையிலே வாழ்க்கையை முடித்துக் கொண்ட வ.உ.சி. அவர்களின் வரலாறு ஒரு தியாக காவியம்!

செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் அவர்கள் துணிச்சலின் தூய வடிவமாக விளங்கியவர்.

இத்தனைச் சிறப்பையும் மொத்தமாய்ப் பெற்ற அந்தத் தியாக சீலருக்கு ஒரு மாபெரும் மண்டபத்தை நாம் நிறுவி இருக்கிறோம்.

திருநெல்வேலியில், பொருட்காட்சி மைதானத்தில், 1,674 சதுர மீட்டர் பரப்பளவில், 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எழுப்பப்பட்டிருக்கிறது தியாக சீலர் வ.உ.சிதம்பரனார் மணிமண்டபம்.

நூலகம்; வ.உ.சி. அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படக் கண்காட்சி; தியான அரங்கு; தியான அரங்கின் நடுவே வ.உ.சி. அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை; சிறையில் இருந்த போது அவர் இழுத்த எண்ணெய்ச் செக்கின் மாதிரி வடிவம்; நுழைவாயிலில் கப்பல் வடிவிலான நீர் ஊற்று – இப்படி அழகின் அற்புதமாக அமைக்கப் பட்டுள்ளது சிதம்பரனார் மணிமண்டபம்.

மாமனிதர்களின் வாழ்க்கை நாம் விழுமிய வாழ்க்கை வாழ நமக்குத் தூண்டுகோலாக இருக்கும் என்று கூறினார் ஆங்கிலக் கவிஞர் H.W. Longfellow.

"Lives of great men all remind us
we can make our lives sublime"

– என்பது அந்தக் கவிஞரின் வாசகம்.

சான்றோர்களை நினைவு கூர்வதும், அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பதும், "இப்படிப்பட்ட மனிதர் இங்கு வாழ்ந்தார்" என்று அடுத்த தலைமுறைக்கு அடையாளம் காட்டுவதற்காக மட்டும் அல்ல, அவர்களின் வார்த்தையையும், வாழ்க்கையையும் நாம் பின்பற்ற வேண்டும் என்பதற்காகத்தான்!

இந்த இனிய விழாவில் திருநெல்வேலி மாவட்ட மக்கள் பயனடையும் வகையில் 116 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 2,624 பணிகளைத் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தொகுப்பு வீடுகள், அங்கன்வாடி கட்டடங்கள், சாலைகள், பாலங்கள், சமுதாய நலக்கூடங்கள், மகளிர் சுகாதார வளாகங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பணிமனைக் கூடங்கள், பள்ளிக் கட்டடங்கள், மாணவ மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள் முதலானவற்றைத் திறந்து வைத்ததில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், 48 இலட்சம் ரூபாய் செலவில் திருநெல்வேலி சந்திப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள திருநெல்வேலி நகர சட்டம் – ஒழுங்கு, குற்றம், போக்குவரத்து ஆகிய பிரிவுகள் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆகியவை அடங்கிய காவல் நிலையக் கட்டடத்தைத் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தச் சீர்மிகு விழாவில் 107 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட உள்ள 2,203 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதில் உள்ளம் மிக மகிழ்கிறேன். சத்துணவு சமையல் கூடங்கள், விளையாட்டு அரங்கங்கள், பொது விநியோகக் கடைகள், மீன் உலர் களங்கள், பள்ளிக் கட்டடங்கள், சமுதாய நலக் கூடங்கள், ஊராட்சி அலுவலகங்கள், மாணவ மாணவியர் விடுதிக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள், வணிக வளாகங்கள் போன்றவற்றிற்கு அடிக்கல் நாட்டியதில் நான் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

மனித குலம் உயிர் வாழத் தண்ணீர் தேவை. மரங்களும், பயிர்களும் செழித்து வளரத் தண்ணீர் தேவை. அதனால்தான் வள்ளுவப் பெருமான். "நீர் இன்றி அமையாது உலகு" என்று எடுத்துச் சொன்னார். மக்களின் அடிப்படைத் தேவையான குடிநீர் தட்டுப்பாடு இன்றி வழங்கப்படவும்; பயிர்கள் வளர்ந்தோங்கி உற்பத்தி பெருக பாசன வதிகள் மேம்படுத்தப்படவும் எனது அரசு உயரிய முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களை முனைப்புடன் நிறைவேற்றி வருகிறது.

தமிழக மக்கள் அனைவருக்கும் தட்டுப்பாடு இன்றிக் குடிநீர் வழங்கப்பட வேண்டும். நகர்ப்புறங்களில் மட்டும் அல்லாமல் அனைத்துக் கிராமங்களிலும் பாதுகாப்பான குடிநீர் தேவையான அளவுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே உங்கள் அன்புச் சகோதரியின் நோக்கம் ஆகும். இதன் அடிப்படையில் திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 208 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் எனது அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், இந்த இனிய விழாவில் 16 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள பணகுடி, வடக்கு வள்ளியூர் மற்றும் 95 கிராமங் களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; 94 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள ஏர்வாடி நகரச் சிறப்பு ஊராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்; 60 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள கோபாலசமுத்திரம் சிறப்பு ஊராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்; 29 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள ஆர்.நவநீத கிருஷ்ணபுரம் மற்றும் ஆலங்குளம் ஒன்றியத்தில் உள்ள 5 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றைத் திறந்து வைத்ததில் மிகவும் மகிழச்சி அடைகிறேன். மேலும் 5 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் 18 ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப் பட்டுள்ள 100 தனி மின் விசைத் திட்டங்களையும் இந்த இனிய விழாவில் நான் திறந்து வைத்துள்ளேன்.

இவ்வாறு, குடிநீர் வசதி செய்து தருகின்ற அதே நேரத்தில், கைப்பம்புகள் மூலம் குடிநீர் பெறுவதில் மகளிருக்கு ஏற்படுகின்ற சிரமத்தை நீக்கும் வகையில் 2001–2002ஆம் ஆண்டில் எனது அரசு சிறு மின் இறைப்பான் திட்டத்தை ஏற்படுத்தியது. இத்திட்டம் ஊரக மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மாவட்டத்தில் உள்ள 19 ஊராட்சி ஒன்றியங்களில் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ள 450 சிறு மின் விசைத் திட்டங்களையும் இன்று திறந்து வைத்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும் ஒரு இலட்சத்து 86 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில் 29 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட உள்ள அச்சன்புதூர், ஆய்க்குடி, பண்பொழி, வடகரை கீழ்ப்பிடாகை மற்றும் தென்காசி, கீழப்பாவூர், செங்கோட்டை, கடையம் ஒன்றியங்களைச் சார்ந்த 151 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; 78 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில் 16 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட உள்ள பாளையங்கோட்டை, நாங்குனேரி மற்றும் களக்காடு ஆகிய ஒன்றியங்களைச் சேர்ந்த 185 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; மற்றும் 56 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயன்பெறும் வகையில் 5 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட உள்ள திருநெல்வேலி நகராட்சி தச்சநல்லூர்ப் பகுதி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஆகிய குடிநீர்த் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், 3 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட உள்ள 50 தனி மின் விசைத் திட்டங்களுக்கும்; 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட உள்ள 250 சிறு மின் விசைத் திட்டங்களுக்கும் நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இதுவன்றி, 78 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மானூர் மற்றும் 400 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளும், 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வள்ளியூர், ராதாபுரம் மற்றும் நாங்குனேரி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 47 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளும் மிக விரைவாக நடந்தேறி வருகின்றன. எதிர்வரும் செப்டம்பர் மாதத்துக்குள் இப்பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும் என்ற செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் மிகவும் மனமகிழ்வு அடைகிறேன்.

தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு தற்போதுள்ள நீர்வளத்தைப் பாதுகாக்கவும், அவற்றைப் பெருக்கவும், புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கவும் எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் பாசன வசதியைப் பெருக்கி விவசாயிகளின் தேவையை ஈடு செய்ய பல்வேறு பாசனத் திட்டங்களை எனது அரசு மேற்கொண்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர் வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி பாசனப் பரப்பிற்குத் தண்ணீர் விரைந்து செல்லவும்; மடைகள் மற்றும் மதகுகளில் இருந்து தண்ணீர் கசிந்து நீர் விரயமாவதைத் தடுக்கும் வகையிலும்; 11 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

நாங்குனேரி வட்டத்தைச் சார்ந்த 17 கிராமங்களில் உள்ள 5,781 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கின்ற திருக்குறுங்குடி கொடுமுடியாறு அணை 31 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. ராதாபுரம் வட்டம், கோட்டைக் கருங்குளம் கிராமத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள

1,740 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கின்ற நம்பியாறு நீர்த் தேக்கத்தில் வலது மற்றும் இடது புறக் கால்வாய்களை முழுவதும் புனரமைத்து லைனிங் செய்யும் பணி மற்றும் அவற்றின் குறுக்கே அமைந்துள்ள குறுக்குக் கட்டுமானப் பணி ஆகியவை 8 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு நீர் ஆதாரங்களைப் பெருக்கி பாசன வசதிகளை மேம்படுத்த எனது அரசு நடவடிக்கை எடுத்து வரும் அதே வேளையில், பாசன வசதி அற்று தரிசாகக் கிடக்கும் நிலங்களை மேம்படுத்தி வேளாண்மையைப் பெருக்க வேண்டும்; சிறு, குறு விவசாயிகள் வாழ்வில் வளம் சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 2001–ஆம் ஆண்டு விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த நான் ஆணையிட்டேன்.



நாங்குனேரி வட்டம், களக்காடு அருகில் உள்ள மஞ்சுவிளை கிராமத்திற்கு மேற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் வடக்குப் பச்சையாற்றின் குறுக்கே 442 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கம் ஒன்றை அமைக்க எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2.3.1994 அன்று என்னால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட திட்டம் 45 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் 2003ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு 13.3.2003 அன்று என்னால் திறந்து வைக்கப்பட்டது என்பதை நினைவு கூர்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் பாசனப் பகுதி மேன்மைத் திட்டத்தின் கீழ் தாமிரபரணி ஆற்றுப் படுகைத் திட்டம், நுண்ணிய நீர்ப் பாசனத் திட்டம் ஆகிய திட்டங்களின் வாயிலாக கடந்த நான்கு ஆண்டுகளில் 12 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு பாசன மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் பாசனப் பகுதி மேன்மைத் திட்டத்தின் கீழ், கடனா – இராமநதி பாசனத் திட்டம், நம்பியார் ஆற்றுப் படுகைத் திட்டம், பச்சையாறு ஆற்றுப் படுகைத் திட்டம், மணிமுத்தாறு பாசனத் திட்டம் ஆகிய திட்டங்கள் கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்று நடைபெறுகின்ற இனிய விழாவில் 61 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ள அனுமன் நதி பாசனத் திட்டப் புனரமைப்புப் பணிகளைத் திறந்து வைத்ததிலும், 156 ஏக்கர் நிலப்பரப்புக்குப் பாசன வசதி அளிக்கும் வகையில் கங்கை கொண்டான் – ராஜபதி சிற்றூர் அருகே 47 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப் பட்டுள்ள புதிய குளத்தைத் திறந்து வைத்ததிலும் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், 713 ஏக்கர் நிலப்பரப்புக்குப் பாசன வசதி அளிக்கின்ற, நாங்குனேரி வட்டம், திருக்குறுங்குடி கிராமத்தில் உள்ள பெரிய குளத்தை 1 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள அடிக்கல் நாட்டியதிலும் நான் மிக்க மன மகிழ்வு அடைகிறேன்.

இத்திட்டத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 4 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 21,870 ஏக்கர் தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. யாருக்கும் பயன் இன்றித் தரிசாகக் கிடந்த இந்நிலங்களில் பாசன வசதிக்காக 875 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டு 7,35,000 பழச்செடிகளும், 1,65,000 வன மரக் கன்றுகளும் நடப்பட்டு, நாட்டுக்கும் வீட்டுக்கும் வளம் அளிக்கும் பசுமைப் பகுதியாக இந்நிலங்கள் தற்போது மாற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் 3,810 சிறு, குறு விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர் என்பதைத் தெரிவிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசு அலுவலகங்கள் அனைத்தும் ஒரே வளாகத்தில் அமைவது தான், அந்த அலுவலகங்களை நாடிவரும் பொதுமக்கள் சிரமமின்றித் தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், அரசு அலுவலர்கள் தங்களது சேவைகளை மக்களுக்கு விரைவாக அளித்திடவும், வாய்ப்பாக அமையும் என்கின்ற காரணத்தால், அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் ஒரே வளாகத்தில் அமைந்திடும் வகையில் பெருந்திட்ட வளாகங்களை ஏற்படுத்த என்னுடைய அரசு தனி முக்கியத்துவம் அளித்து வருகிறது. தற்போதைய திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்

தலைவர் அலுவலகம் 150 ஆண்டு பழமை வாய்ந்த மிகவும் பழுதுபட்ட கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஒரு சில மாவட்ட அளவிலான அரசு அலுவலகங்கள் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனவே, போதிய இட வசதியுடன் மாவட்ட அளவிலான அனைத்து அரசு அலுவலகங்களும் ஒரே இடத்தில் அமையும் வகையில் 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 87 ஆயிரம் சதுர அடி பரப்பளவுடைய தரைத் தளம் மற்றும் மூன்று மேல் தளங்கள் கொண்ட புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் கட்ட நான் இந்த இனிய விழாவில் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புதிய வளாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும் மற்றும் மாவட்ட அளவிலான 39 அலுவலகங்களும் இடம் பெறும்.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு வளம் சேர்க்கவும், திருநெல்வேலி மாவட்ட மக்கள் வாழ்க்கையில் நலம் கூட்டவும் வகை செய்யும் சில புதிய திட்டங்களை இந்த இனிய விழாவில் அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

* வாகனங்களின் அபரிமிதமான பெருக்கம் காரணமாகவும், திருநெல்வேலி நகர்ப் பகுதி சாலைகளைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை மிக அதிகமாகப் பெருகியதன் காரணமாகவும், திருநெல்வேலி நகரம் மற்றும் திருநெல்வேலி சந்திப்பு ஆகிய இடங்களில் எப்போதும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்கும் வகையில் ஒரு புதிய இணைப்புச் சாலை உருவாக்கப்பட வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையை ஏற்று 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தச்சநல்லூரிலிருந்து ஸ்ரீபுரம், வயல்புரம், தெற்கு மவுண்ட் சாலை மற்றும் திருநெல்வேலி நகரம் வழியாக பேட்டை வரையில் ஒரு புதிய தார்ச் சாலையை உருவாக்க, நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். இந்தப் புதிய சாலையை அமைக்க நன்செய் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்பதால் சம்பந்தப்பட்ட விவசாயிகளின் ஒத்துழைப்புடன் இப்பணி மேற்கொள்ளப்படும். 4.2 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்தச் சாலை அமைவதன் மூலம் திருநெல்வேலி சந்திப்புப் பகுதியைத் தவிர்த்து மதுரை மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களுக்குச் செல்ல முடியும். அதே போல், பேட்டை பகுதியில் வாழ்கின்ற மக்கள் நெல்லையப்பர் கோவில், அமைந்துள்ள நெரிசலான நகர்ப் பகுதியைத் தவிர்த்து பேருந்து நிலையம் மற்றும் ரயில் நிலையத்திற்குச் செல்ல முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில், பாளையங்கோட்டை – நாகர்கோவில் சாலையில், குலவணிகபுரம் மற்றும் மத்திய சிறை ஆகியவற்றின் அருகே தற்போது ஆள் மூலம் இயக்கப்படும் "ரயில்வே கிராசிங்" உள்ளது. இதன் காரணமாக ஒவ்வொரு முறை இந்த இடத்தை ரயில் கடக்கும்போதும் இருபுறமும் ஏராளமான வாகனங்கள் நிற்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு போக்குவரத்து நெரிசலும், பயணிகள் தாங்கள் செல்ல வேண்டிய இடத்திற்குக் குறித்த நேரத்திற்குச் செல்ல முடியாத நிலைமையும் ஏற்படுவதால் இந்த இடத்தில் ஒரு ரயில்வே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும் என்று இப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாகக் கோரி வருகிறார்கள். பொது மக்களின் இந்த வேண்டுகோளினை ஏற்று 2 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு புதிய மேம்பாலத்தினை அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன். இந்தப் புதிய மேம்பாலம் மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில், மத்திய நெடுஞ்சாலைத்துறை மற்றும் ரயில்வே துறை ஆகியவற்றின் ஒப்புதல் பெற்று கட்டி முடிக்கப்படும்.

* இதேபோல, திருநெல்வேலி மாநகராட்சி எல்லைக்குள் மதுரை – கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை மற்றும் பழைய புறவழிச்சாலை சந்திப்பில் அமைந்துள்ள செல்லப்பாண்டியன் சிலை அருகே சுரங்க நடைபாதை ஒன்று அமைத்துத் தர வேண்டும் என்று இப்பகுதி மக்கள் நீண்ட காலமாகக் கோரி வருகிறார்கள். இந்தக் கோரிக்கையை ஏற்று இப்பகுதியில் 1 கோடி ரூபாய் மதிப்பில் சுரங்க நடைபாதை அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன். இந்தச் சுரங்க நடைபாதை தேசிய நெடுஞ்சாலையின் ஊடே அமையும் என்பதால் மத்திய நெடுஞ்சாலைத் துறையின் ஒப்புதல் பெற்று இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

* திருநெல்வேலி மாநகராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதனால் 200 கிலோ மீட்டர் நீளமுடைய சாலைகள் புதுப்பிக்கப்பட வேண்டும். சீரான போக்குவரத்தை மேற்கொள்ளும் வகையில் இந்தச் சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கி செப்பனிட்டுப் புதுப்பிக்க திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறை ஆகியவற்றால் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், இதுவன்றி, திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் பழுதுபட்டுள்ள சுமார் 200 கிலோ மீட்டர் நீளச் சாலைகளையும் சீரமைத்திட தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* அண்மையில், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களைத் திடீரெனத் தாக்கிய சுனாமிப் பேரலைகளால் இம்மாவட்டத்தில் ராதாபுரம் வட்டத்தைச் சார்ந்த பெருமணல், இடிந்த கரை, கூத்தன்குழி, கூட்டப்புளி முதலிய கடலோரக் கிராமங்கள் பாதிக்கப்பட்டன. இக்கிராமங்கள் எதிர்காலத்தில் கடல் அலைகளால் பாதிக்கப் படாதவாறு பாதுகாக்கும் வகையில் "கிராயின்" எனப்படும் கற்சுவர்களைக் கட்டத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நான்

ஆணையிட்டுள்ளேன். இதன்படி இந்தப் பகுதிகளில் சுமார் 2,450 மீட்டர் நீளத்திற்கு "கிராயின்கள்" கட்ட 27 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இதற்கான நிதி உதவி வழங்க வேண்டி மத்திய அரசின் திட்டக் குழுவுக்கு அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. இதனை எதிர்நோக்கி இந்தப் பணியை உடனடியாக மேற்கொள்ள நான் ஆணையிட்டுள்ளேன். இதன் மூலம் மேற்கண்ட கிராமப்பகுதி மக்களுக்கு சுனாமிப் பேரலைகள் மற்றும் கடல் அலைகளின் சீற்றங்களினாலும் ஏற்படும் ஆபத்துகள் முற்றிலுமாகத் தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

* திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டத்தில் உள்ள 185 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட கருப்பாநதி நீர்த்தேக்கத்தில் 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போது மண் அரிப்பு காரணமாகப் பெரிதும் தூர் சேர்ந்து விட்டதால் அதன் கொள்ளளவு 120 மில்லியன் கன அடியாகக் குறைந்து விட்டது என்றும், எனவே இதனைத் தூர் வாரிப் பழைய கொள்ளளவிற்கே கொண்டு வர வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். விவசாயிகளின் இந்தக் கோரிக்கையை ஏற்று இந்நீர்த் தேக்கத்தைத் தூர் வார நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். எனினும், இந்நீர்த்தேக்கத்திலிருந்து தூர்வாரி எடுக்கப்படுகின்ற மண்ணைக் கொட்டுவதற்குத் தகுந்த இடம் தேர்வு செய்யப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு ஒரு புதிய திட்டம் வகுக்கப்பட்டு தூர்வாரும் பணி விரைவில் நிறைவேற்றப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* ஆலந்துறை ஆற்றில் இருந்து திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு 2 கால்வாய்கள் மூலம் 52 ஏரிகளுக்குத் தண்ணீர் எடுத்துச் செல்லப்படுகிறது. இக்கால்வாய்களில் மண் படிந்து இருப்பதாகவும், இதனால் ராதாபுரம், பனங்குடி, வள்ளியூர் மற்றும் சமூகரங்கபுரம் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் தண்ணீரின் அளவு குறைந்துவிட்டதாகவும், எனவே இக்கால் வாய்களைத் தூர்வாரி ஆழப்படுத்த வேண்டும் என்று இப்பகுதி விவசாயிகள் கோரியுள்ளனர். இதனை ஏற்று இந்த இரு கால்வாய்களையும் மற்றும் அவற்றைச் சார்ந்த 40 கிளைக் கால்வாய்களையும் தூர்வாரவும், இக்கால்வாய்களில் உள்ள 142 மதகுகளைப் புதுப்பிக்கவும், 52 ஏரிகளைத் தூர்வாரி செப்பனிடவும் நான் ஆணையிட்டுள்ளேன். நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் 6 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

* திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள ராம நதி நீர்த்தேக்கத்தில் இருந்து கிடைக்கும் உபரி நீரை ஜம்பு நதியில் திருப்பி தென்காசி வட்டத்தில் உள்ள விவசாயிகள் பயன்பெறுமாறு செய்ய வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதனை ஏற்று 4.1 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒரு புதிய இணைப்புக் கால்வாய் அமைத்து அதன் மூலம் ராம நதி நீர்த்தேக்கத்தில் உபரியாகக் கிடைக்கும் 48 மில்லியன் கன அடி தண்ணீரை நாராயணப்பேரி ஏரிக்குக் கொண்டு சென்று அதனுடன் இணைத்து மொத்தம் 7 ஏரிகளுக்குப் பாசனவசதி அளிக்கும் வகையில் பணிகள் மேற்கொள்ள நான் ஆணையிட்டுள்ளேன். நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் 3 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட உள்ள இத்திட்டத்தின் மூலம் 600 ஏக்கர் நன்செய் நிலங்கள் நிலையான பாசனவசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு, தமிழகத்தின் வளர்ச்சிக்காக நான் தளராமல் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன்.

என்னுடைய இந்த முயற்சிகளுக்கெல்லாம் எத்தனை எத்தனை தடைகள்! எந்த மகத்தான திட்டத்தையும் தொடங்க விடாதபடி எத்தனை எத்தனை இடையூறுகள்!

இந்தத் தடைகளைத் தவிடு பொடியாக்கி, இடையூறுகளை முறியடித்து, உங்கள் துணையோடு எல்லா முயற்சிகளிலும் நான் வெற்றி பெற்று வருகிறேன்.

ஆனாலும் தொடர்கின்றன தடைகள்! இடையூறுகள்! என்ன காரணம் என்று சிந்தித்தேன். இப்படி இருக்கலாமோ என்று தோன்றியது.

பழங்காலத்தில் கிரேக்க நாட்டில் ஒரு பழக்கம் இருந்தது. பிடிக்காதவர்களின் பெயர்களை ஓட்டாஞ் சல்லிகளில் எழுதி அவற்றை ஒரு மண் பானையில் போடுவார்கள். யாருடைய பெயர் அதிகமாக எழுதப் பட்டிருக்கிறதோ அவரை நாடு கடத்தி விடுவார்கள்.

ஒரு நாள் கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில் (Aristotle) ஒரு கிராமத்தின் வழியே போய்க் கொண்டிருந்தார். அவரைப் பெரியவர் ஒருவர் வழி மறித்தார்.

'இந்த ஓட்டாஞ் சல்லியில் அரிஸ்டாட்டில் என்று எழுதிக் கொடுங்கள்' என்று அவரைக் கேட்டுக் கொண்டார்.

'எதற்கு ?' என்று கேட்டார் அரிஸ்டாட்டில்.

'அரிஸ்டாட்டிலை நாடு கடத்த வேண்டும். அவருடைய பெயரை ஓட்டாஞ் சல்லியில் எழுதி மண் பானையில் போட வேண்டும். எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆகவே நீங்கள் இதோ இந்த ஓட்டாஞ் சல்லியில் அரிஸ்டாட்டில் என்று எழுதிக் கொடுங்கள்' என்றாராம் பெரியவர்.

'அரிஸ்டாட்டில் எல்லோருக்கும் நன்மையைத் தானே செய்கிறார் ? அவர் உனக்கு என்ன கொடுமை செய்தார் ?

ஏன் நாடு கடத்த வேண்டும் என்கிறாய்?' என்று கேட்டார் அரிஸ்டாட்டில்.

'அவர் ஒரு தீமையும் செய்யவில்லை. எங்கு பார்த்தாலும் அரிஸ்டாட்டிலின் புகழ்தான் பேசப்படுகிறது. அதைக் கேட்கக் கேட்க எனக்குப் பொறாமையாக இருக்கிறது. எனவேதான் அந்த ஆளை நாடு கடத்த வேண்டும் என்கிறேன்' என்றாராம் அந்தப் பெரியவர்.




தமிழ்நாட்டில் அப்படிப் பட்ட பெரிய மனிதர்களுக்குக் குறைவே இல்லை!

அவர்களைப் பொறுத்தவரை, பொறாமைப் படுவதற்கு ஒரு காரணமே தேவையில்லை! அவர்கள் எதைக் கண்டாலும் பொறமைப்படுவார்கள்!

மற்றவர்களுக்குப் புகழ் கிடைத்தால் போதும் – அதைத் தாங்க முடியாத பெரிய மனசுக்காரர்கள் அவர்கள்!

அவர்களால் பொறாமைப்படாமல் இருக்க இயலாது.

எனவேதான் நாள்தோறும் ஏதாவதொரு பிரச்சினையை அரங்கேற்றிக் கொண்டே இருக்கிறார்கள்.

அசூயையின் வடிவமாக விளங்கும் அந்தப் பொல்லாத மனிதர்களின் பொறாமைத் தீ என்னைச் சுட்டுவிடாதபடி உங்கள் அன்பு என்னும் குற்றாலச் சாரல் என்னை எப்போதும் குளிர்வித்துக் கொண்டிருக்கிறது. என் மீது மாசில்லாத அன்பு வைத்துள்ள உங்கள் தூய நெஞ்சங்களின் உறுதுணையோடுதான் தமிழகத்தைப் பல்வேறு துறைகளில் முதன்மை மாநிலமாக நான் உருவாக்கிக் கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த இனிய விழாவிலே இன்றைய தினம் மொத்தம் 6,988 பயனாளிகளுக்கு 3 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை இன்றைய தினம் பயனாளிகள் அனைவருக்கும் என் கையாலேயே வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் நேரம் போதாது என்பதால் இந்த மேடையில் 15 பேருக்கு மட்டும் உதவிகளை நான் வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அதிகாரிகளும் இங்கேயே இப்போதே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளை அடிப்படையாக வைத்து தங்கள் தொழில்களை இன்னும் சிறப்போடு செய்து வாழ்க்கையில் நலமும், வளமும் பெற்றிட வேண்டும் என்று அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அதுல் ஆனந்த் அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் உரித்தாக்கிக் கொண்டு

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!

எனக் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

*23.6.2005 அன்று நடைபெற்ற*
*திருநெல்வேலி மாவட்ட அரசு விழாவில்*
*விடுதலைப் போராட்ட வீரர்*
*வ.உ.சிதம்பரனார் மணிமண்டபத்தைத்*
*திறந்து வைத்து*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி* **ஜெ ஜெயலலிதா** *அவர்கள்,*
*ஆற்றிய உரை*

# அரசு உதவிபெறும் பள்ளிகளில், சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகளில், பயிலும் மாணவ, மாணவியருக்கும் இலவசப் பாடநூல்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 20–5–2005

அறிவுடைமை மிக்க சமுதாயமே, ஆற்றல் மிக்க சமுதாயமாகத் திகழும் என்பதால் தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்கும் அதன் மேம்பாட்டுக்கும் எனது அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது.

அங்கன்வாடிகள், பால்வாடிகள் மற்றும் மழலையர் பள்ளிகளில் தங்களது கல்வியைத் தொடங்கும் சின்னஞ்சிறு தளிர்கள், எவ்விதக் காரணங்களாலும் தங்களது கல்வியை இடையில் நிறுத்தி விடக்கூடாது என்பதை இலட்சியமாகக் கொண்டு, அவர்கள் தொடர்ந்து கல்வி பயிலுவதற்கான அனைத்து வசதி வாய்ப்புகளையும் எனது அரசு ஏற்படுத்தித் தருகிறது.

இதன் அடிப்படையில் தான் சத்துணவு, சீருடை, கல்வி உதவித்தொகை முதலானவற்றை வழங்குவதோடு, மாணவ, மாணவியர் உற்சாகத்துடன் கல்வி கற்க ஏதுவாக, பள்ளிகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் எனது அரசு ஏற்படுத்தி வருகிறது. மேலும், தமிழகத்தில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் 1 கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளேயே தொடக்கப் பள்ளி வசதியையும், 3 கிலோ மீட்டர் தொலைவுக்குள் நடுநிலைப் பள்ளி வசதியையும் எனது அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கல்வி கற்கின்ற மாணவ, மாணவியர் தங்கள் கல்வியை இடையில் நிறுத்தி விடாமல் தொடர்ந்து கற்க ஊக்கம் அளிக்கும் ஒரு பேருதவித் திட்டமாக, அவர்களுக்கு 10–ஆம் வகுப்பு வரை இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த அண்மையில் நான் ஆணையிட்டேன்.

மாணவ, மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குகின்ற இத்திட்டம், ஏழை, எளிய பெற்றோர் தங்களது பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதை சுமையாகக் கருதாமல் சுகமாகக் கருதிட வழிவகை செய்வதாலும், தங்களது கல்வியை இடையில் நிறுத்தி விடாமல் தொடர்ந்து கற்க வேண்டும் என்ற ஆர்வத்தை மாணவ, மாணவியருக்கு ஊட்டுவதாலும், தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய மாணவ, மாணவியரின் நலன் கருதி இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்திட நான் முடிவெடுத்துள்ளேன்.

இதன்படி, அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகள் ஆகியவற்றில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் +2 எனப்படும் 12ஆம் வகுப்பு வரை இலவசப் பாடநூல்களை வழங்கிட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும், அரசு உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப் படுவதால், இவற்றில் பயிலும் 11 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறுவார்கள். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.22.25 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை இலவசமாகப் பாடநூல்கள் வழங்கும் இத்திட்டம், நடப்பு ஆண்டு முதலே, அதாவது, 2005–2006ஆம் ஆண்டில் இருந்தே செயல்படுத்தப்படும்.

தற்போது விரிவாக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம், அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகள் ஆகியவற்றில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை கல்வி பயின்று வரும் 1 கோடியே 8 இலட்சம் மாணவ, மாணவியருக்கு அனைத்து பாடநூல்களும் இலவசமாக வழங்கப்படும். இதற்காக எனது அரசு நடப்பாண்டில் 83 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவிடும். ◆



# 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ-மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
தொடங்கி வைத்தார்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 1 கோடியே 8 இலட்சம் மாணவ-மாணவியருக்கு, இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தினைத் தொடங்கிவைத்தார்கள்.

அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகள் ஆகியவற்றில், 1ஆம் வகுப்பு முதல் +2 எனப்படும் 12ஆம் வகுப்பு வரை பயிலும், அனைத்து மாணவ மாணவியருக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 20.5.2005 அன்று உத்தரவிட்டார்கள். இத்திட்டம் நடப்பு ஆண்டு முதலே அதாவது 2005-2006ஆம் ஆண்டில் இருந்தே செயல்படுத்தப்படும் எனவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள்.



இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் சென்னை - அசோக்நகர், திருவல்லிக்கேணி, எழும்பூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளிலும், கோடம்பாக்கம், சாந்தோம் மற்றும் சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகளிலும் பயிலுகின்ற 18 மாணவ மாணவியருக்கு, இலவசப் பாடப் புத்தகங்களை நேரில் வழங்கி, இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

தமிழகத்திலுள்ள பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 1 கோடியே 8 இலட்சம் மாணவ மாணவியர் இத்திட்டத்தின் கீழ் பயனடைவர். 2005-2006ஆம் கல்வியாண்டில் இதற்கென ரூபாய் 83 கோடியே 70 இலட்சம் மதிப்பிலான பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம், அரசு தலைமைச் செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., கல்வித்துறைச் செயலாளர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திரு.கு.தங்கமுத்து, தமிழ்நாடு பாடநூல் கழக மேலாண் இயக்குநர் திரு.ஸ்வரண் சிங், இ.ஆ.ப., மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. எஸ். பரமசிவன் ஆகியோர் பங்கேற்றனர். ❖



# அண்ணா மேலாண்மை நிலையத்திற்கென கட்டப்பட்டுள்ள புதிய கட்டட வளாகம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ரூ.10 கோடி செலவில் தமிழ்நாடு அரசின் பயிற்சி நிறுவனமான அண்ணா மேலாண்மை நிலையத்திற்கென கட்டப்பட்டுள்ள புதிய கட்டட வளாகத்தை 25.5.2005 அன்று, திறந்து வைத்தார்கள்.

அரசு நிருவாகத்தில் மேலாண்மை உத்திகளைத் திறம்படப் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட, தமிழ்நாடு அரசின் நிறுவனமான அண்ணா மேலாண்மை நிலையம், தமிழக அரசின் பயிற்சிக் கொள்கைகளுக்கு ஆலோசனை வழங்கும் அமைப்பாகவும், அவற்றைச் செயல்படுத்தும் நிறுவனமாகவும் திகழ்கிறது. இந்நிறுவனத்திற்கென்று ரூபாய் 10 கோடி செலவில், 8,700 சதுர மீட்டர் பரப்பளவில் போதிய இடவசதியோடு, அனைத்து அடிப்படை வசதிகளுடனும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புடனும் சென்னை பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலையில் தற்போதுள்ள கட்டடத்தின் அருகில் புதிய கட்டட வளாகம் உருவாக்கப் பட்டுள்ளது.

அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் பயன்பெறும் வகையில் இந்தப் புதிய கட்டட வளாகத்தில் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட 200 இருக்கைகள் கொண்ட அரங்கம், குளிர் சாதன வசதி கொண்ட ஆறு வகுப்பறைகள், மூன்று கணினி அறைகள், குளிர் சாதன வசதி கொண்ட நூலகம், 48 அறைகளுடன் கூடிய விடுதி வளாகம், 4 அறைகள் கொண்ட விருந்தினர் இல்லம் மற்றும் உள் விளையாட்டு அரங்கம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

பயிற்சியாளர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ள அண்ணா மேலாண்மை நிலையத்தின் புதிய கட்டட வளாகத்திற்கு **"மகிழம்பூ"** என்றும், இந்த வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அரங்கத்திற்கு **"பொன்னரங்கம்"** என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.5.2005 அன்று ரிப்பன் வெட்டியும், குத்து விளக்கு ஏற்றியும், கல்வெட்டைத் திறந்து வைத்தும் இந்தப் புதிய கட்டட வளாகத்தைத் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் மற்றும் பயிற்சித் துறை தலைமை இயக்குநர் திரு.மை.பீ.பிராணேஷ், இ.ஆ.ப., பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை அரசு செயலாளர் திரு.க.அருள்மொழி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.★

# பிறவிக் குறைபாடு உடைய குழந்தைகளுக்கு அரசின் சார்பில் இலவசச் சீரமைப்பு அறுவைச் சிகிச்சைத் திட்டம்




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கிவைத்தார்.

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1.6.2005 அன்று சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில், தமிழகத்தில் உள்ள, பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் ஆகிய பிறவிக் குறைபாடு உடைய குழந்தைகள் அனைவருக்கும் அரசின் சார்பில், இலவசச் சீரமைப்பு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளுகின்ற புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் என்பது குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற பிறவிக் குறைபாடு ஆகும். இந்தக் குறைபாடு, குழந்தைகளுக்கு விகாரமான முகத்தோற்றத்தை ஏற்படுத்துவதுடன், பேச்சு சரியின்மை, காது கேளாமை மற்றும் பற்கள் வளர்ச்சியில் குறைபாடு போன்ற மருத்துவக் குறைகளையும் ஏற்படுத்துகிறது. நமது எதிர்கால சந்ததியினர் ஆரோக்கியமான உடல் வளம் படைத்தவர்களாகவும், உறுதியான சிந்தனை உடையவர்களாகவும் திகழவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்துடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், குழந்தைகளுக்கு ஏற்படும் பிறவிக் குறைபாடுகள் அனைத்தையும், பொது சுகாதாரப் பிரச்சினையாகக் கருதி தக்க மருத்துவச் சிகிச்சை அளித்திட கடந்த 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஊட்டியில் நடைபெற்ற அகில இந்திய பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மருத்துவர் சங்க மாநாட்டில் ஆணையிட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து, தமிழகத்தில் உள்ள பிறவிக் குறைபாடு உடைய அனைத்துக் குழந்தைகளையும் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான சிகிச்சை அளிக்கும் வகையில், அதுகுறித்த விவரங்களைத் தொகுத்திட, அனைத்துக் கிராம சுகாதார செவிலியர்கள் மூலம் கணக்கெடுக்கும் பணியை இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 13.8.2004 அன்று தொடங்கிவைத்தார்கள்.

இந்தக் கணக்கெடுப்பில், தமிழகத்தில் 5,534 குழந்தைகள் பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய பிறவிக் குறைபாடு உடைய குழந்தைகள் ஒருவர் கூட சிகிச்சை அளிக்கப்படாமல் விடுபட்டுவிடக் கூடாது என்றும், குறிப்பாக ஏழை, எளிய மக்களின் குழந்தைகள் பொருளாதார வசதியற்ற காரணத்தால் இந்த மருத்துவ வசதியைப் பெறுகின்ற வாய்ப்பை இழந்துவிடக் கூடாது என்ற சீரிய நோக்கத்துடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் உள்ள, அறுவைச் சிகிச்சைக்கு உகந்த குழந்தைகளுக்கு, ஆறு மாத காலத்திற்குள்ளாக அரசு சார்பில் இலவசமாக அறுவைச் சிகிச்சை செய்யும் ஒரு விரிவான திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1.6.2005 அன்று சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில், தமிழகத்தில் உள்ள, பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் ஆகிய பிறவிக் குறைபாடு உடைய குழந்தைகள் அனைவருக்கும், அரசின் சார்பில் இலவசச் சீரமைப்பு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளுகின்ற இந்தப் புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

குத்துவிளக்கு ஏற்றி திட்டத்தைத் தொடங்கிவைத்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள உள்ள 12 குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்களைப் பரிசாக வழங்கி, தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டதுடன் அனைத்து அறுவைச் சிகிச்சைகளும் வெற்றிகரமாக நிறைவேறிட தனது மனமுவந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

இந்தத் திட்டத்தின்படி சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கு அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ மனைகளிலும் 6 மாதங்களுக்குள்ளாக அறுவைச் சிகிச்சை அளிக்கப்படும். வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களைச் சார்ந்த நபர்கள் தனியார் மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டால் மருத்துவ சிகிச்சைக்காக அரசு சார்பில் 25,000 ரூபாய் வழங்கப்படும். அரசு மருத்துவ மனைகளில் இவ்வாண்டு ஜூன் மாதம் முதல் சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படும். சிகிச்சை தேவை என்று கண்டறியப் பட்டுள்ள குழந்தைகளில் 3 மாதங்களுக்கு மேல் உள்ள குழந்தைகளுக்கு அவர்களுடைய உடல் தகுதிக்கு ஏற்ற வகையில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

**பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் உடைய குழந்தைகள் அனைவருக்கும் இலவசச் சீரமைப்பு அறுவைச் சிகிச்சைத் திட்டத்தைத் தொடங்கி உள்ள முதல் மாநிலம் தமிழகம் என்பது மட்டுமல்ல, இத்தகைய திட்டத்தைச் செயல்படுத்துகின்ற ஒரே மாநிலம் நாட்டிலேயே தமிழகம்தான் என்பது குறிப்பிடத்தக்கது.**



**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது ஆணையின்படி செயல்படுத்தப்படும் இந்தப் புதுமைத் திட்டத்தின் மூலம், பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் உடைய, 3 மாதங்களுக்கு மேல் உள்ள அறுவைச் சிகிச்சைக்கு உகந்த குழந்தைகள் அனைவருக்கும் 6 மாத காலத்திற்குள் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிக்கப்படும். இதன் மூலம், இன்னும் 6 மாத காலத்திற்குள் பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் ஆகிய குறைபாடுகள் கொண்ட குழந்தைகளே இல்லாத மாநிலமாகத் தமிழகம் திகழும்.**

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. என். தளவாய்சுந்தரம், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், தலைமைச்செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை செயலாளர் திருமதி ஷீலாராணி சுங்கத், இ.ஆ.ப., மருத்துக்கல்வி இயக்குநர் டாக்டர் பி.விஜயலட்சுமி, மருத்துவம் மற்றும் ஊரக நல்வாழ்வுத் துறை இயக்குநர் டாக்டர் என்.கல்யாணசுந்தரம், பொது சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் பி. முருகன், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் டி.ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். ✶

# சொந்தமாக ஆட்டோ வாங்க மானியத்துடன் கடன் உதவித் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 26.5.2005



தமிழகம் உயர்வு பெற தங்களது உழைப்பை நல்குகின்ற தொழிலாளர்கள், எந்தப் பிரிவில் எவ்வகையான பணி செய்பவர்களாக இருந்தாலும், அவர்களது வாழ்வு வளம் பெற வேண்டும். அவர்களது குடும்பம் நலமுடன் வாழவேண்டும் என்பதே எனது உளமார்ந்த விருப்பம் ஆகும். இதன் அடிப்படையில் தான், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல், விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்துதல், போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தித் தர எனது அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

ஆட்டோ வாகனப் போக்குவரத்து ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு வாழ்க்கை அளிப்பதுடன், நடுத்தர மக்கள் நாடிச் செல்கின்ற போக்குவரத்து வசதியாகவும் திகழ்கின்றது. ஆட்டோ வாகனப் போக்குவரத்தை மேம்படுத்த வேண்டும் என்றும், ஆட்டோ ரிக்ஷா வாகனங்களை ஓட்டுகின்ற தொழிலாளர்களின் வாழ்க்கை மேம்பட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும், ஆட்டோ வாகனத் தொழிலாளர்கள் என்னிடம் கோரிக்கைகள் விடுத்துள்ளனர்.

இரவு பகல் பாராமல், பொதுமக்கள் விரும்புகின்ற எந்தப் பகுதிக்கும் அழைத்துச் செல்கின்ற ஆட்டோ வாகனத் தொழிலாளர்கள் அளித்துள்ள இந்தக் கோரிக்கைகளை மிகுந்த பரிவுடன் பரிசீலனை செய்து, அவர்களது ஒட்டுமொத்த நலன் கருதி கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

பழைய மோட்டார் வாகனங்களினால் ஏற்படும் புகை சுற்றுப்புறத் தூய்மைக்கு மிகப்பெரும் கேடு விளைவிப்பதால், அவ்வாறு சுற்றுப்புறத்தை மாசுபடுத்துபவர் அதற்கென ஒரு வரியைச் செலுத்த வேண்டும் என்னும் அடிப்படையில் பசுமை வரி (Green Tax) என்னும் ஒரு வரி அனைத்துப் பழைய மோட்டார் வாகனங்களுக்கும் விதிக்கப்படுகிறது. போக்குவரத்து வாகனம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 7 ஆண்டு காலம் முடிவடைந்த பின்னரும் உபயோகத்தில் இருந்தால், பசுமை வரியாக ஆண்டு ஒன்றுக்கு 500 ரூபாய் வசூலிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வசூலிக்கப்படுகின்ற தொகை தங்களுக்கு ஒரு சுமையாக

இருப்பதாக ஆட்டோ ஓட்டுநர்கள் தெரிவித்து அதனைக் குறைக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை ஏற்று, 7 ஆண்டுகளுக்கு மேலான ஆட்டோ வாகனங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு விதிக்கப்படும் பசுமை வரியை 500 ரூபாயிலிருந்து 200 ரூபாயாகக் குறைக்க நான் ஆணையிட்டுள்ளேன். இந்த வரிக்குறைப்பு, நடப்பு நிதியாண்டிலிருந்தே, அதாவது 2005–2006ஆம் ஆண்டில் இருந்தே அமல்படுத்தப்படும்.

சென்னை மாநகரில் வசித்து வரும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள், தங்களது போக்குவரத்துத் தேவைக்கு ஆட்டோக்களையே பெரும்பாலும் பயன்படுத்தி வருகின்றனர். இந்தத் தேவையை ஈடுகட்டும் வகையில் தற்போது இயங்கிவரும் ஆட்டோக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆட்டோக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் அதேநேரத்தில், அதன் மூலம் சுயவேலை வாய்ப்பு ஏற்படுத்தவும் இது வகை செய்யும் என்பதையும் கருத்தில் கொண்டு, சென்னை மாநகரில் கூடுதலாக 5,000 புதிய ஆட்டோ அனுமதிகளை வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இது நடுத்தரக் குடும்பங்களின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்வதோடு, 5,000 குடும்பங்கள் வாழ்வாதாரம் பெறவும் ஏதுவாக அமையும். இந்தப் புதிய ஆட்டோ அனுமதிகள் உரிமையாளரே ஓட்டுநராக இருக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்கப்படும். மேலும், எரிவாயு திரவத்தின் (LPG) மூலம் இயக்கப்படும் ஆட்டோக்களுக்கு மட்டுமே இந்தப் புதிய அனுமதி அளிக்கப்படும்.

சென்னை மாநகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கும், வசிப்பிடங்கள் மற்றும் வணிக மையங்களுக்கும் அருகில் ஆட்டோ நிறுத்தங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, பெருகி வருகின்ற இத்தகையக் குடியிருப்புகளின் எண்ணிக்கையைக் கருதி, அவற்றின் அருகில் புதிய ஆட்டோ நிறுத்தங்கள் அமைத்திட, அனுமதி அளிக்கவேண்டும் என்ற கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து, போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத வகையில் ஆட்டோ நிறுத்தம் அதிகம் தேவைப்படும் இடங்களை ஆய்வு செய்து, அவற்றிற்கு அனுமதி வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இவ்வகையில், சென்னையில் சுமார் 100 புதிய ஆட்டோ நிறுத்தங்கள் அமைத்திட அனுமதி வழங்கப்படும்.

ஆட்டோக்களில் தற்போது அதிகபட்சமாக 3 பேர் மட்டுமே பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளுக்கு மாணவ மாணவியரை ஏற்றிச்செல்லும் ஆட்டோக்களுக்கும் இதே விதிமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. பள்ளிகளுக்கு மாணவ மாணவியரை ஏற்றிச் செல்லும் ஆட்டோக்களில் கூடுதலாக மாணவ மாணவியரை ஏற்றிச்செல்ல அனுமதிக்க வேண்டும் என்று ஆட்டோ ஓட்டுநர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை ஏற்கின்ற அதேநேரத்தில், மாணவ, மாணவியரின் பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு, 14 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர் 5 பேர் வரை ஒரு ஆட்டோவில் பயணம் செல்ல அனுமதி வழங்கிட நான் உத்தரவிட்டுள்ளேன்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் சுயதொழில் மேற்கொள்ள ஒரு வாய்ப்பாக ஆட்டோ ஓட்டும் தொழில் அமைந்துள்ளது. இவ்வாறு ஆட்டோ ஓட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ளோரும், புதிதாக ஆட்டோ ஓட்டும் தொழிலை மேற்கொள்ள விரும்புவோரும், தங்களுக்கே சொந்தமாக ஆட்டோ பெற்றிட ஏதுவாக எளிதில் கடனுதவி கிடைக்கப்பெறவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, புதியதாக மானியத்துடன் கூடிய கடன் உதவித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன். இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் / வங்கிகள் மூலம் கடன் உதவி வழங்கப்படும். ஆட்டோ வாகனத்தின் மதிப்பில் 25 சதவிகிதத் தொகையை மானியமாக தமிழக அரசு வழங்கும். அவ்வாறு வழங்கப்படும் மானியம் அதிகபட்சமாக 25,000 ரூபாயாக இருக்கும். இவ்வாறு கடன் உதவி பெறும் நபருக்கு ஆண்டு வருமானம் 36,000 ரூபாய்க்கு மிகாமல் இருக்க வேண்டும். இவ்வாறு வாங்கப்படும் ஆட்டோக்களின் உரிமையாளரே ஓட்டுநராகவும் இருக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் கடனுதவி வழங்கப்படும்.

இந்த அறிவிப்புகளின் பயனாக ஆட்டோ வாகன போக்குவரத்துத் தொழில் பெரிதும் மேம்படும் என்பதுடன், பெருமளவில் இளைஞர்கள் கடன் உதவி பெற்று ஆட்டோ ஓட்டுநர் – உரிமையாளர் என்ற உயர்வைப் பெறவும், பொதுமக்களின் போக்குவரத்துத் தேவை நிறைவு பெற்றிடவும் வழிவகை செய்யும்.

* * *



# பதக்கம் வென்ற வனத்துறை விளையாட்டு வீரர்களுக்கு ரொக்கப் பரிசு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் கோவா மாநிலம் பனாஜியில் நடைபெற்ற 12ஆவது அகில இந்திய வனத்துறை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்ற தமிழக வனத்துறை விளையாட்டு வீரர்களுக்கு மொத்தம் 3 இலட்சத்து 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கான ரொக்கப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

10.2.2004 முதல் 14.2.2004 முடிய கோவா மாநிலம் பனாஜியில் நடைபெற்ற 12ஆவது அகில இந்திய வனத்துறை விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற வனத்துறை விளையாட்டு வீரர்களுக்கான ரொக்கப் பரிசுகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்கள்.

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம், திருச்சியைச் சேர்ந்த திரு.கே.செல்லதுரை, வனக்காவலர், திரு.பி.செந்தில்குமார், காவலர், திரு.டி.கே.ராஜசேகரன், வனச்சரகர், திரு.ஏ.மணிமாறன், காவலர், திரு.வி.முர்ரத், காவலர், திரு.பி.சரவணன், காவலர், திரு.கே.ஜெயமணி, வனச்சரகம், திருச்சி வட்டம், திரு.எஸ்.கோபி, பணியாளர், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர், திரு.ஆர்.சக்திவேல், காவலர், கோயம்புத்தூர் வட்டம், மற்றும் திரு.கே.கந்தசாமி, இ.வ.ப., கோட்ட வன அலுவலர், நாமக்கல் ஆகியோருக்கு ரொக்கப் பரிசுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். ரொக்கப் பரிசுகளைப் பெற்றுக்கொண்ட விளையாட்டு வீரர்கள் தங்களது நன்றியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.ஆர்.வைத்திலிங்கம், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறைச் செயலாளர் திரு.சுர்ஜித் கே.சௌத்ரி, இ.ஆ.ப., முதன்மை வனப் பாதுகாவலர் திரு.ஜே.சி. காலா ஆகியோர் பங்கேற்றனர்.

* * *

# நதிகள் இணைப்புத் திட்டம் தென்மண்டலப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் உத்வேகம் அளிக்கும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை




**வ**ரலாற்றுச் சிறப்புமிக்க புதுச்சேரி நகரில், இன்று நடைபெறும் இந்த 23ஆவது தென்மண்டலக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஏறக்குறைய எட்டு ஆண்டு கால நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடைபெறும் இக்கூட்டத்தில் பங்கேற்க வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது உரையின் நகல் வழங்கப் பட்டுள்ளது. அதனைக் கருத்திற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். எழுத்து மூலமான என்னுடைய உரையில் இடம் பெற்றுள்ள முக்கியமான சில கருத்துகளை உங்களோடு நான் இங்கே பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

கடைசியாக திருவனந்தபுரத்தில் 1997ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டத்தில் விவாதத்தின் போது எழுப்பப்பட்ட முக்கியமானதொரு பிரச்சினையை, அதாவது, இம்மண்டலத்தில் புனல்மின் திட்டங்களின் முன்னேற்றத்திற்குப் பரஸ்பர ஒத்துழைப்பு நல்குவது பற்றிய பிரச்சினையை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர நான் விழைகிறேன். சென்ற ஆண்டில், நாம், கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளோம் என்பதும் தேசிய புனல் மின்சக்தி நிறுவனத்தின் ஆதரவுடன் நிலை–1 சிவசமுத்திரம், ஒகேனக்கல் புனல்மின் திட்டங்கள், நிலை–II ராசிமணல், மேகதத்து புனல்மின் திட்டங்கள் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்து வதற்குரிய ஒப்பந்தம் தயாரிக்கின்ற அளவுக்கு நெருங்கி விட்டோம் என்பதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இது ஒரு மாபெரும் சாதனையாகும். இதனால், இம்மண்டலத்தில் மின் சக்தி கிடைப்பது அதிகரிக்கும். கர்நாடக அரசு, இத்திட்டங்களின் விஷயத்தில் காட்டிய அதே ஒத்துழைப்பைக் காவிரி நதிநீர்த் தகராறுகள் குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பைச் செயல்படுத்துவதிலும் காட்டவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தென்கிழக்குப் பருவ மழை தொடங்கியவுடன் புதிய வேளாண் பருவமும் தொடங்கிவிடும். எனவே, உச்சநீதிமன்ற ஆணைக்கு ஒப்பான காவிரி நதி நீர் தகராறுகள் நடுவர் மன்றத்

தீர்ப்பைச் செயற்படுத்த வேண்டுமென கர்நாடக மாநில அரசுக்கு நினைவூட்டுவதற்கு இதுவே சரியான தருணம் என நான் கருதுகிறேன்.

புனல்மின் திட்டங்களைத் தொடங்குவதில் மாநிலங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு குறித்து பேசுகின்ற இவ்வேளையில், நீண்ட நெடுங்காலமாகப் பரிசீலனையில் இருந்துவருகிற பாண்டியாறு – புன்னம்புழா மற்றும் சோளத்திப்புழா திட்டங்களையும், தற்போது தயாரிக்கப்பட்டு கேரள அரசுக்குத் தனியாக அனுப்பப்பட்டு வருகின்ற திருத்தியமைக்கப்பட்ட விரிவான தொழில்நுட்ப அறிக்கையின் அடிப்படையில், புதிதாகப் பரிசீலிக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தையும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மீண்டும் உயிர்ப்பு அளிக்கப்படவேண்டிய முக்கிய மானதொரு தேசியத் திட்டமான நதிநீர் இணைப்புத் திட்டத்தை, மத்திய உள்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விழைகிறேன். குறிப்பாக, காவிரி நதியுடன், மகாநதியையும் பின்னர் குண்டாறு நதியையும் இணைக்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்பதில் நான் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளேன். இந்த நதிகள் இணைப்புத் திட்டம் தென்மண்டலப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் உத்வேகம் அளிக்கும் என்பதால் மத்திய உள்துறை அமைச்சர் இத்திட்டத்தைச் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மண்டலத்தில் சுற்றுலா மேம்பாட்டுக்கான கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதில் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரிக்கும், இம்மண்டலத்தைச் சேர்ந்த மாநிலங்கள் ஆகியவற்றிற் கிடையே நல்ல ஒத்துழைப்பு நிலவுவது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். தென்னிந்திய சுற்றுலா மன்றம் ஒரு நல்ல முயற்சி ஆகும். இதனை நாம் மேலும் முன்னெடுத்துச் செல்லலாம். "தி பேலஸ் ஆன் வீல்ஸ்'' போன்ற சிறப்பு சுற்றுலா ரயில்களை இயக்குதல், கடற்கரைப் பகுதி நெடுக ஆடம்பர கடல் உலாவுக்கு ஏற்பாடு செய்தல் போன்ற புது முயற்சிகளை மேற்கொள்ள காலவரையறைக்குட்பட்ட செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

இம்மண்டலத்திலுள்ள மாநிலங்களுக்கும் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிக்குமிடையேயான பெரிய அளவிலான பொருளாதார ஒத்துழைப்புப் பற்றிய கோட்பாடு குறித்தும் நாம் இங்கே விரிவாகப் பேச வேண்டியது அவசியமாகிறது. குறிப்பாக, கூட்டுத் திட்ட முயற்சியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டிய கட்டமைப்பு வசதி மேம்பாடு குறித்து, இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இது, சாலைகள், உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து, இரயில் போக்குவரத்து ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம். தென்னக எரிவாயுக் கட்டமைப்புக் கோட்பாட்டை மீண்டும் உயிர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. சென்னை, இம்மண்டலத்தின் மையமாக அமைந்திருப்பதால், எண்ணூர் துறைமுகத்தில் பெரிய அளவிலானதொரு திரவ இயற்கை எரிவாயு (எல்என்ஜி) முனையத்தை ஏற்படுத்துவது குறித்துத் திட்டமிடலாம். இது தென்னக எரிவாயுக் கட்டமைப்பின் முக்கிய மையமாக விளங்கும். அடிப்படைக் கட்டமைப்பு வசதியில் முதலீடு செய்வதற்கு ஏதுவாக, மாநிலங்களின் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் அவற்றுக்கு நிபந்தனையற்ற நிதி ஒதுக்கீடு செய்வது குறித்துக் கருதிப் பார்க்கவேண்டும் என்று மாண்புமிகு உள்துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துராஜ் நிறுவன அமைப்பில் மாற்றங்கள் செய்வது குறித்து எனது அரசு சில கருத்துகளைத் தெரிவித்துள்ளது. இந்த அமைப்பு, கூட்டாட்சி முறையிலான இரண்டடுக்கு அமைப்பாக இருக்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பமாகும். அதுதான் நமது சமுதாயப் பண்பமைதிக்கு மிகவும் பொருத்த மானதாக இருக்கும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் பொருந்தக்கூடிய நீக்குப் போக்கான விருப்புரிமையை அளிப்பதற்கு வகை செய்து அரசியலமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் கொண்டுவர ஏதுவாக இது குறித்துப் புதிதாக, முழுமையாகப் பரிசீலனை செய்ய வேண்டுமாய் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்குத் தற்போது அளிக்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டு அளவைப் பாதுகாத்துக் கொள்ள மாநிலங்களை அனுமதிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யும் முக்கியப் பிரச்சினை குறித்து தற்போது நான் குறிப்பிட விரும்புகிறேன். முன்பு நான் முதலமைச்சராக இருந்தபோது, அப்போது நடைமுறையில் இருந்துவந்த 69 சதவிகித இடஒதுக்கீட்டினைப் பாதுகாத்திடவேண்டி, மாநில சட்டமன்றத்தில் தனிச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. தமிழ்நாடு சட்டம் 45/1994 என்ற இச்சட்டம் 69 சதவிகித இடஒதுக்கீட்டிற்குப் பாதுகாப்பு அளித்தது. இச்சட்டத்திற்கு அரசியலமைப்புச் சட்ட பாதுகாப்பு அளித்திடுவதற்காக 1994ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்ட எழுபத்தியாறாவது திருத்தத்தின் மூலம், அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் இது சேர்க்கப்படுவதை நான் உறுதி செய்தேன். தமிழ்நாடு சட்டம் 45/1994ஐ எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கு இன்னும் விசாரணையில் இருந்து வருகிறது. இதற்காக, அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதுதான் மிகவும்

பொருத்தமாக இருக்கும்; அப்போதுதான் தமிழ்நாட்டில் 69 சதவிகித இட ஒதுக்கீடு போன்ற முந்தைய இடஒதுக்கீட்டு அளவைத் தக்கவைத்துக்கொள்ளும் அதிகாரத்தை மாநிலங்கள் பெறமுடியும். தற்போது உருவாகியுள்ள முரண்பாடான நிலைமைக்கு இதுதான் சரியான தீர்வாக அமையும்.

அடுத்ததாக, 15.4.2005 அன்று புதுடெல்லியில் மாண்புமிகு பிரதமர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம்–ஒழுங்கு குறித்த மாநாட்டில் ஏற்கெனவே விவாதிக்கப்பட்டுள்ள பல பொருள்களை உள்ளடக்கிய கூடுதல் பொருள்நிரல் பற்றிப் பேச விரும்புகிறேன்.

பெண்களையும், சிறுவர், சிறுமியரையும் இழி தொழிலில் ஈடுபடுத்துகிற பிரச்சினை கவலை அளிப்பதாக உள்ளது. தமிழ்நாட்டில், அத்தகைய குற்றவாளிகள் மீது வழக்குப் பதிவு செய்ய உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1956ஆம் ஆண்டு விபச்சார (தடுப்பு) சட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய குற்ற ஆவணப் பிரிவின் (NCRB) அண்மைக்கால அறிக்கை குறிப்பிடுகிறது. இந்தப் பிரச்சினையைக் கையாள்வதில் நாம் கொண்டுள்ள உறுதிப்பாட்டினையே இது சுட்டிக் காட்டுகிறது. என்னுடைய அரசு இது தொடர்பான நடைமுறையில் குறிப்பிடத்தகுந்த மாற்றத்தை ஏற்படுத்தி இந்தச் சமூகக் கேடு தொடர்வதற்கு முக்கியக் காரணமாக இருக்கின்ற குற்றவாளிகளான பெண் தரகர்கள் மற்றும் இழி தொழிலில் ஈடுபடுத்துவோர் கண்காணிக்கப்படுவதை என்னுடைய அரசு உறுதி செய்தது. பெண்தரகர்கள் மற்றும் இழி தொழிலில் ஈடுபடுத்துவோருக்கு எதிரான நடவடிக்கைக்கு வகை செய்யும் மேற்படி சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, 2001–ஆம் ஆண்டில் 12 ஆக இருந்து 2004ஆம் ஆண்டில் 85 ஆக உயர்ந்துள்ளது. இப்பிரச்சினையை அது வேர்விடும் நிலையிலேயே கிள்ளி எரிவதற்கான சிறப்பு முயற்சியில் அரசு சாரா அமைப்புகளையும், ஈடுபடுத்துவதற்காக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் (Swadhar Scheme) நிதியுதவி அளிப்பதற்காக, மொத்தம் ரூ.1.76 கோடி செலவு ஆகக் கூடிய 13 செயற்குறிப்புகளை என்னுடைய அரசு அனுப்பியுள்ளது. இச் செயற்குறிப்புகளுக்கு விரைவில் அனுமதியளிக்கப்பட வேண்டுமென்று இத்தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

குற்ற நிகழ்வுகளைத் தடுப்பதற்காக குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்கிற கருத்து உண்மையிலேயே மிகவும் பொருத்தமானதே. சென்னையில் மாநில குற்ற ஆவணப் பிரிவை, அண்மையில் நான் தொடங்கி வைத்துள்ளேன் என்பதை இது தொடர்பாக இங்கே அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். முற்றிலும் கணினிமயமாக்கப் பட்டுள்ள இப்பிரிவு, மாநில அளவில் குற்றங்களை விரைவில் ஒப்புமைப்படுத்திச் சரிபார்க்க உதவுகிறது. அனைத்திந்திய அளவில் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தத்தக்க அளவில் இம்முயற்சியை நாம் முன்னெடுத்துச் செய்வது மிகவும் இன்றியமை யாததாகும். குற்றம் பற்றிய தகவல்களை மாநிலங்களுக்கிடையே பரிமாறிக் கொள்ள உதவுகின்ற திட்டம் ஒன்றை உள்துறை அமைச்சகம் முன்னின்று உருவாக்கும் என்று நான் நம்புகிறேன்.

குற்றம் பற்றிய புள்ளிவிவரத் தகவலை உடனுக்குடன் அளிப்பது பற்றி மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். தமிழ்நாடு, 2004ஆம் ஆண்டுக்கான குற்றம் பற்றிய புள்ளிவிவரத் தகவலை, தமிழக அரசு தேசிய குற்றப் பதிவுப் பிரிவிற்கு அளித்துள்ளது என்ற தகவலை இது தொடர்பாக தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறைகளை நவீனமயமாக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார். ரூ.77 கோடி செலவில் புழலில் கட்டப்பட்டு வருகின்ற எங்களுடைய புதிய மற்றும் நவீனச் சிறை வளாகம், 2005 நவம்பர் திங்களில் ஆயத்தமாகிவிடும் என்பதை இது தொடர்பாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

டெல்லியில், 15.4.2005 அன்று நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு பற்றிய மாநாட்டில் நான் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், காவல் படையை நவீனமயமாக்கும் திட்டத்தின் ஒரு துணைத் திட்டமாக மகாநகரங்களின் காவலுக்கான திட்டத்தை, உடனடியாக அறிவித்தமைக்காக மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். கடலோரப் பாதுகாப்பு பற்றிய எங்களுடைய செயற்குறிப்புகளை, மத்திய அரசு பரிசீலித்து வருகிறது என்றும், அந்தக் குறிப்புகளில் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், கடலோரப் பாதுகாப்பிற்கென தனிப்படை அணி ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஆதரவு அளிக்க வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சரின் சிறப்புக் கவனத்திற்குக் கொண்டுவர நான் விழைகிறேன். இச் செயற்குறிப்பு 26.5.2005 அன்று விவாதிக்கப்பட்டது என்றும் தேவையான பணியாளர்களுக்கான தொடரினச் செலவை, மாநில அரசு ஏற்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டதை நான் அறிகிறேன். பணியாளர்களுக்கான சம்பளங்கள் வகையிலான செலவு உட்பட முழுச் செலவையும் 5 ஆண்டுகளுக்காவது மத்திய அரசு ஏற்க வேண்டும்.

எங்களுடைய செயற்குறிப்பில் திட்டமிட்டுள்ளவாறு, துணைச் சாதனங்களுடன் காவல் படையணியை, உடனடியாக ஏற்படுத்திட ஏதுவாக இதில் தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சரை நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய கருத்தை ஏற்று மத்திய உள்துறை அமைச்சர் நக்ஸலைட்டுகளால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒருங்கிணைப்புக் குழுவில் தமிழ்நாடு முதலமைச்சரையும் சேர்த்துள்ளதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பின்தங்கிய மாவட்ட சிறப்பு முயற்சிகள் என்பது, தற்போது பின்தங்கிய வட்டார மானிய நிதி என்பதன் கீழ் புதிய திட்டமாக மாற்றியமைக்கப்பட்டு வருகிறது என்று நான்அறிகிறேன். முந்தைய திட்டத்தில், நக்ஸலைட்டு பிரச்சினையால் பாதிக்கப்பட்ட 55 மாவட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்தன. தமிழ்நாட்டிலிருந்து எந்தவொரு மாவட்டமும் இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. 2005–2006ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டு வரும் திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டைச் சேர்ந்த தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய மாவட்டங்களை நக்ஸலைட்டு பாதிப்பு மாவட்டங்களாகச் சேர்க்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடக மாநிலங்களின் எல்லைகளை ஒட்டி அமைந்துள்ள இம்மூன்று மாவட்டங்களுக்கும் பின்தங்கிய வட்டார நிதியிலிருந்து சிறப்பு நிதி கிடைக்கச் செய்ய வேண்டும்.

தேசிய அளவிலும் மாநில அளவிலும் பேரிடர் மேலாண்மை குறித்ததொரு சட்டம் இயற்றுவதற்கான செயற்குறிப்பை நான் வரவேற்கிறேன். பேரிடர் ஏற்படும் நேர்வில் அது தொடர்பான உடனடி நிவாரண நடவடிக்கை எடுக்கும் அமைப்பை நிறுவன ரீதியானதாக்க இது உதவும். ஆழிப் பேரலைகள் (சுனாமி) தமிழ்நாட்டை தாக்கியபோது அரசு இயந்திரம் ஒருங்கிணைந்து சிறப்பாகச் செயல்பட்டமை உலக அளவில் பாராட்டைப் பெற்றுள்ளது. இனி இத்தகைய நெருக்கடி ஏற்படும் போது, இதனைக் கையாளுவதற்கு உரிய முறையான நிறுவன அமைப்பை ஏற்படுத்துவது குறித்து கருதிப் பார்க்க வேண்டியது அவசியமாகும். வரைவு சட்டமுன் வடிவின் விவரங்களை ஆராய்ந்து, எங்களுடைய பதிலை அளிப்போம். தேசிய பேரிடர் நிவாரணப் பணிக் குழுக்கள் எட்டு படைப் பிரிவுகளுடன் அமைக்கப்பட்டுள்ளதாக நான் அறிகிறேன். இது போன்ற மாநில அளவிலும் நிவாரணப் பணிக் குழுக்கள் அமைக்கப்படலாம் என்றும் சாதாரணமாக இயற்கைச் சீற்ற நிவாரண நிதி முழுவதும் நடப்பு இயற்கைச் சீற்றங்களைச் சமாளிப்பதற்கே செலவிடப்பட்டுவிடுவதால் இந்நிதியிலிருந்து செலவு செய்யுமாறு மாநிலங்களைக் கேட்டுக் கொள்வதற்குப் பதிலாக இக்குழுக்களை அமைக்க சிறப்பு நிதி அளித்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் நான் கருதுகிறேன்.

ஊரக ஏழைக் குடும்பம் ஒவ்வொன்றிலும், உரிய வயதடைந்த ஒவ்வொருவருக்கும் ஓராண்டில் குறைந்தது 100 நாட்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வகை செய்யும் வேலைவாய்ப்பு உத்தரவாதக் கோட்பாட்டை நான் வரவேற்கிறேன். அறிவிக்கப்பட்ட இத்திட்டத்தினை மாற்றியமைக்க வேண்டிய சில அம்சங்கள் உள்ளன. வேலைவாய்ப்பின்மை உதவித்தொகை (Unemployment Allowance) அளிக்கவேண்டிய பொறுப்பு மாநில அரசைச் சார்ந்தது என்று இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய வேலை வாய்ப்பின்மை உதவித் தொகைக்கும் மத்திய அரசே முழுமையாக நிதியுதவி அளிக்க வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும். அறிவிக்கப்பட்ட இத்திட்டத்தில், திட்டச் செலவில் 25 சதவிகிதத்தை மாநில அரசு ஏற்க வேண்டும் என்று வகை செய்யப்பட்டுள்ளது. இது மாநில அரசுக்குப் பெருத்த நிதிச்சுமையை ஏற்படுத்தும். மாநில அரசின் பங்களிப்பு 10 சதவிகிதமாகக் குறைக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பயனடைவோரில் குறைந்தது 50 சதவிகிதத்தினர் பெண்களாக இருக்க வேண்டும் என்பது சட்டப்படி கட்டாயமானதாக்கப்படவேண்டும். இதன்கீழ் பல்வேறு ஊரகப் பணிகளும் சேர்க்கப்பட்டு வேலைவாய்ப்பின் தன்மை விரிவாக்கப்பட வேண்டும். உத்தேச வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டத்தின் இக் கருத்துகளையும் இணைக்க வேண்டியது அவசியமாகும்.

2004ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தமிழ்நாடு கடற்கரையைக் கடும் சீற்றத்துடன் தாக்கிய "சுனாமி" ஆட்கொல்லிப் பேரலைகள் ஏற்படுத்திய அளப்பரிய அழிமானங்களைப் பற்றி மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் நன்கு அறிவார். உடனடி நிவாரணம் அளிப்பதற்கான தொடக்கப் பணிகள் முடிவடைந்து விட்ட நிலையில், நீண்டகால மறு மீள் உருவாக்கப் பணிகளை நாங்கள் தற்போது மேற்கொண்டு வருகிறோம். புதிய வீடுகளைக் கட்டித்தருவதற்கும், வாழ்வாதாரங்களை புதுப்பிப்பதற்கும் தேவையான அனைத்தையும், நாங்கள் செய்து வருகிறோம் என்றாலும், சுனாமி ஆட்கொல்லிப் பேரலைகள் தமிழ்நாட்டில் உள்ள பல கடற்கரை மாவட்டங்களில் பொருளாதாரத்தையே சீரழித்து விட்டன. எனவே, இந்த மாவட்டங்களில் தொழில்களில் முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலம் புதிய வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்க வேண்டியது அவசியமாகிறது.

2001ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் ஏற்பட்ட பெருத்த நில நடுக்கத்தினால் கடும் நாசத்திற்குள்ளான குஜராத்தின் கச் பகுதியில் தொடங்கப்பட்ட புதிய தொழில் பிரிவுகள் உற்பத்தி செய்த ஆயத்தீர்வை விதிக்கத்தக்க

பொருட்களுக்கு, இந்திய அரசின் நிதி அமைச்சகம், வருவாய் துறையின் 31.7.2001ஆம் நாளிட்ட 39/2001ஆம் எண் மத்திய ஆயத்தீர்வை அறிவிக்கையின்படி ஆயத் தீர்வை செலுத்துவதினின்றும் விலக்களிக்கப்பட்டதை மத்திய உள்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். அதேபோல, இமாச்சலப்பிரதேசம் மற்றும் உத்தராஞ்சல் ஆகிய மாநிலங்களில் தொழில் பிரிவுகள் ஏற்படுத்தப் படுவதற்கும் மத்திய அரசு இவ்வாறு ஆயத்தீர்வை விலக்களிக்கிறது. இதைப்போன்றே அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் ஏற்படுத்தப்படும் புதிய தொழில் பிரிவுகளால் உற்பத்தி செய்யப்படும் ஆயத் தீர்வை விதிக்கத்தக்க பொருட்கள் அனைத்திற்கும், அத்தகைய தொழில் பிரிவுகள் வணிக ரீதியாக உற்பத்தியைத் தொடங்கும் நாளிலிருந்து பத்தாண்டுக் காலத்திற்கு ஆயத்தீர்வை விதிப்பதினின்றும், விலக்களித்து அறிவிக்கை ஒன்று வெளியிடப்படவேண்டும். இந்த அறிவிக்கை, தமிழ்நாட்டில் சுனாமி பாதித்த மாவட்டங்களையும் உள்ளடக்க வேண்டும். விரைவில் தேவையான அறிவிக்கை வெளியிட இயலும் வகையில் இந்தப் பிரச்சினையை அவசரமாகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சரை நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், சுனாமி துயரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டுதல் உட்பட பெருமளவில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. தமிழ்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும் எஃகு, சிமிட்டி, குழாய்கள் மற்றும் ஏனைய கட்டுமானப் பொருட்கள்/சாதனங்கள் மீது மூன்றாண்டு கால அளவிற்கு ஆயத்தீர்வை விதிப்பதினின்றும், மத்திய அரசு விலக்களிக்க வேண்டும்.

இங்கு எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்குப் பயனுள்ள தீர்வுகள் காண்பதற்கு இந்த விவாதங்கள் வழி வகுக்கும் என்ற நம்பிக்கையிலும், மண்டலங்களுக்கிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான புதிய அணுகுமுறைகளை வகுப்பதற்கு உறுதுணையாக அமையும் என்ற நம்பிக்கையிலும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமானப் பொருட்கள் குறித்து என்னுடைய கருத்துகளை இங்கு சுருக்கமாக நான் எடுத்துரைத்துள்ளேன். நம்மைப் போன்ற ஓர் கூட்டாட்சி அமைப்பைக் கொண்ட ஒரு நாட்டில், ஒவ்வொரு மாநிலமும், வெவ்வேறு அரசியல் கட்சிகளால் அமைக்கப்பட்ட அரசைக் கொண்டிருக்கலாம் என்றாலும், பரஸ்பரம் பயனளிக்கும் தீர்வுகளைக் காண்பதுதான் எப்போதுமே நமது தலையாய நோக்கமாக இருக்க வேண்டும். தேசிய அளவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ள சில பிரச்சினைகளையும் நான் எழுப்பியுள்ளேன். இங்கு எடுத்துரைக்கப்பட்ட கருத்துரைகளை விரைந்து செயற்படுத்த ஏதுவாக, மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் இவற்றை விரைந்து பரிசீலிக்க நடவடிக்கை எடுப்பார் என்று நான் நம்புகிறேன்.

தமிழக அரசின் கருத்துகளுக்கு மதிப்பளித்து அவற்றை உள்வாங்கிக் கொள்வதில் ஆர்வமும், அக்கறையும் காட்டிய மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிற அதே நேரத்தில், மத்திய–மாநில அரசுகளுக்கிடையே தொடர்ந்து ஒரு உறுத்தலாக இருந்து வருகிற ஒரு விஷயத்தைப் பற்றி இங்கே குறிப்பிட விழைகிறேன். நம்மைப் போன்ற கூட்டாட்சி அமைப்பைக் கொண்ட ஒரு நாட்டில், ஒரு மாநிலத்தில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், பரஸ்பர புரிந்துணர்வு கொள்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது மத்திய அரசுதான். ஆனால், தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் சிலரிடையே, மாநில அரசை அறவே உதாசீனப்படுத்துகிற அல்லது தேசிய நலனைப் பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல் மாநில அரசைக் கடுமையாகச் சாடுகின்ற போக்கு காணப்படுகிறது. இத்தகைய போக்கு விட்டொழிக்கப்பட வேண்டும். மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி சில அடிப்படையான நாகரிகம் கூட இல்லாமல், கண்ணியமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைக் கண்டித்து அடக்கி வைப்பார் என நான் நம்புகிறேன்.

மண்டலக் குழுக் கூட்டத்தை நடத்துவதற்கான இடத்தைத் தேர்வு செய்வதில் சுழற்சி முறை பின்பற்றப்படுவதாலும் இக் கூட்டங்கள் அபூர்வமாகவே நடத்தப்படுவதால், அடுத்த வாய்ப்பு, சென்னைக்கு வெகு காலத்திற்குப் பிறகே வரும் என்றும் அறிகிறேன். எனவே, இந்தக் கூட்டங்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கும் பரஸ்பர ஒத்துழைப்பிற்கும் பயனுள்ள களமாகப் பரிமளிக்க வேண்டுமாயின், இக்கூட்டத்தை, குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறையேனும் நடத்தி, கூடிய விரைவில் இக்கூட்டத்தை நடத்துவதற்கான வாய்ப்பையும், மகிழ்ச்சியையும் எங்களுக்கு நல்கிட வேண்டுமென்ற கருத்தை வைத்து எனது உரையை நிறைவு செய்கிறேன்.

புதுச்சேரியில் 31–5–2005 அன்று நடைபெற்ற
23ஆவது தென்மண்டலக் குழுக்கூட்டத்தில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

# காப்பீட்டுத் திட்டத்தில் மேலும் 50 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் சேர்க்கப்படுவார்கள்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 22.6.2005

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர, அவர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெறவும், கணிசமான வருவாய் ஈட்டிடவும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், நலத்திட்டங்களையும், என்னுடைய தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

கடந்த ஆண்டில், அதாவது 2004–2005இல் "புங்கர் பீமா யோஜனா" (Bunkar Bima Yojana) என்ற பெயரில் புதிய காப்பீட்டுத் திட்டத்தை இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் (Life Insurance Corporation of India) இணைந்து செயல்படுத்திட நான் ஆணையிட்டேன். இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உறுப்பினராகவுள்ள நெசவாளர்ஒவ்வொருவருக்கும், மத்திய அரசின் பங்காக ரூ.150, ஆயுள் காப்பீட்டுக் கழகப் பங்காக ரூ.100, நெசவாளர்களின் பங்காக ரூ.130, ஆகமொத்தம் ரூ.380 பிரீமியத் தொகையாக செலுத்தப்படவேண்டும். கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி, ஒவ்வொரு நெசவாளரும் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையான ரூ.130ஐ தமிழக அரசே செலுத்திட நான் ஆணையிட்டேன். இதன்படி, முதல் கட்டமாக, கடந்த ஆண்டில் (2004–2005) 76,096 கைத்தறி நெசவாளர்கள் செலுத்த வேண்டிய மொத்த பிரீமியத் தொகையான 98 இலட்சத்து 92 ஆயிரத்து 480 ரூபாயைத் தமிழக அரசே செலுத்தியது. கைத்தறி நெசவாளர்கள் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையை அவர்களது சார்பாகத் தமிழக அரசே செலுத்தி விடுவதால், நெசவாளர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் பயனடைய தனியாக பிரீமியத் தொகை எதுவும் செலுத்த வேண்டிய தேவை இல்லை என்று நான் அறிவித்தேன்.

கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு அளித்து, அவர்தம் துயர்துடைக்கும் இந்த "புங்கர் பீமா யோஜனா" காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, நெசவாளர்களின் நலனை முன்னிட்டு, இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த நான் ஆணையிட்டுள்ளேன். இந்த ஆண்டில், அதாவது 2005–2006இல் கூடுதலாக 50,000 நெசவாளர்களை இந்தத் திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், நெசவாளர் ஒவ்வொருவருக்கும் ரூ.130 வீதம், 50,000 நெசவாளர்களுக்கு இந்த ஆண்டில் (2005 – 2006) செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையான ரூ.65 இலட்சமும், மற்றும் ஏற்கெனவே, இந்தத் திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ள 76,096 நெசவாளர்களுக்கு, இந்த ஆண்டில் (2005 – 2006) செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ரூ.98,92,480 ஆக மொத்தம் ரூ.1,63,92,480ஐ தமிழக அரசே செலுத்த நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், மொத்தம் 1,26,096 நெசவாளர்கள் பயனடைவார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கைத்தறி நெசவாளர்கள் 60 வயதுக்கு முன்னர் இயற்கையாக இறக்க நேரிட்டால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.50,000 வழங்கப்படும். விபத்தில் மரணம் அடைந்தால் ரூ.80,000, விபத்தில் முழுவதும் செயல் இழக்க நேரிட்டால் ரூ.50,000, பகுதி செயல் இழப்பு ஏற்படின் ரூ.25,000 இழப்பீட்டுத்தொகையாக வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை, அதிகபட்சமாக 4 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு காலாண்டுக்கும் ரூ.300 கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

* * *

# சென்னைப் பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடங்கள்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8-6-2005 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னைப் பல்கலைக் கழகத்தின் தரமணி, கிண்டி வளாகங்களில் கட்டப்பட்டுள்ள மொத்தம் ரூ.2.63 கோடி மதிப்பிலான புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து, கிண்டி, தரமணி, சேத்துப்பட்டு, சேப்பாக்கம் ஆகிய வளாகங்களில் மொத்தம் ரூ.14.85 கோடி மதிப்பில் புதிதாகக் கட்டப் படவுள்ள கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8-6-2005 அன்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் தரமணி வளாகத்தில் விலங்கு அறிவியல் நெறிமுறைகளைப் பின்பற்றி புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள், தடுப்பூசிகள், மரபு வழி நோய்களின் காரணம் அறிதல் ஆகியவற்றை ஆய்வு செய்ய ரூ. 1 கோடியே 53 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள விலங்கக வசதி மையம், நோய் பரப்பிகளாகச் செயல்படும் பூச்சிகளை அழிப்பதற்கான பூச்சிக் கொல்லிகளை ஆய்வு செய்ய ரூபாய் 60 இலட்சம் மதிப்பில் கிண்டி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள பூச்சிகள் வளர்ப்பு மையம், 500 கிலோவாட் மின்திறன் கொண்ட 'தனி மின்னாக்கி' மற்றும் அதே வளாகத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள மாணவர் நல மையம் ஆகிய புதிய கட்டடங்களை திறந்துவைத்தார்கள்.

மேலும், இதே நிகழ்ச்சியில், சேப்பாக்கம் வளாகத்தில் ரூ.6.83 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள, தொலை வழிக் கல்விக்கான படப்பிடிப்பகம்; செயற்கைக்கோள் வழி கல்வி ஆய்வுக்கூடம்; இணைய வகுப்பறைகள்; தொலைவழிக்கல்வி பாட உருவாக்கக்கூடம் மற்றும் கருத்தரங்கம் ஆகியவை அமைந்த தொலைவழிக்கல்வி கட்டடம்; ரூ.2 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள தரவு மூலமையம்; மின் ஊடக ஆய்வுக்கூடம்; காட்சி கேட்புப் படத் தயாரிப்பகம் ஆகியவற்றைக் கொண்ட தகவல் இயல், தரவியல் மற்றும் அறிவூட்டவியல் மையம்; கிண்டி வளாகத்தில், ரூ.1 கோடியே 95 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள, உயிர் வேதியியல் மற்றும் உயிர் தொழில் நுட்பவியல் துறைகளுக்கான தனிக் கட்டடம்; சென்னைப் பல்கலைக் கழகத்தில் இயற்பியல் துறையை நிறுவியதோடு 1954இல்



'கொலாஜன்' அமைப்பைக் கண்டுபிடித்து உலகப் புகழ்பெற்ற பேராசிரியர் மறைந்த டாக்டர் ஜி.என்.இராமச்சந்திரன் அவர்கள் பெயரில் அமைந்துள்ள நவீன கருவியக வசதிக் கட்டடம்; தரமணி வளாகத்தில் ரூ.1 கோடியே 29 இலட்சம் மதிப்பில் கட்டப் படவுள்ள நுண்ணுயிரியல் கட்டடப் பிரிவு; ரூ.73 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள மாணவியர் விடுதி; சேப்பாக்கம் வளாகத்தில், மின் தடை ஏற்படுகின்றபோது மின்வசதி அளிக்கும் வகையில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பில் ஏற்படுத்தப்படவுள்ள, 500 கிலோ வாட் மின்திறன் கொண்ட மின்னாக்க வசதி கொண்ட கட்டடம்; சேத்துப்பட்டு வளாகத்தில், நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்காக, தற்காலிகமாகத் தங்கிச் செல்லும் வகையில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள, மாணவ விளையாட்டு வீராங்கனைகளுக்கான தங்கும் வசதி கொண்ட கட்டடம் ஆகியவற்றிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம், தலைமைச்செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., உயர்கல்வித்துறைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப.,சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ச.ப.தியாகராசன் ஆகியோர் உடனிருந்தனர். ❖

# மருத்துவம், பொறியியல் மற்றும் ஆசிரியர் பயிற்சி பயிலும் மாணவ, மாணவியருக்கு நிதிஉதவி





**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், போதிய நிதிவசதி இல்லாது தவிக்கும் மருத்துவம் (M.B.B.S.), பொறியியல் (B.E) ஆகிய பட்டப்படிப்புகளில் பயிலும் 4 பேருக்கு தலா 25 ஆயிரம் வீதமும், ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்பு பயிலும் மாணவ, மாணவிகள் 13 பேருக்கு ரூபாய் 5,000 வீதமும், ஆகமொத்தம் ரூபாய் 1 இலட்சத்து 65 ஆயிரத்திற்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கினார்கள்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் பயிலும் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.வி.ராமன், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் பயிலும் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.டி.பழனி ஆகியோர், தொடர்ந்து மருத்துவக் கல்வி (M.B.B.S.) பயிலவும், சென்னை குரோம்பேட்டை எம்.ஐ.டி.யில் பயிலும் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த திரு.ஆர். அருண்குமார், கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி என்.பிரேமாவதி ஆகியோர், தொடர்ந்து பொறியியல் கல்வி (B.E) பயிலவும் மற்றும் ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்பு பயிலும் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.எம்.சௌந்திரபாண்டியன், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி ஏ. வளர்மதி, தேனி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி டி.தனலட்சுமி, திரு.எம்.ரமேஷ், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த செல்வன் ஆர்.சுரேந்தர், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி எம்.அமுதலட்சுமி, எம்.ஆணைக்குட்டி, திரு.எம்.இளங்கோவன், திரு.ஏ ஜெயக்குமார், செல்வி வி. கவிதா, செல்வன் பி.வானுந்தர், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி ஜி. சிவசங்கரி, விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி ஜி. மகாலட்சுமி ஆகியோர் தங்களது கல்விச் செலவுக்கென நிதியுதவி கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடத்தில் கோரிக்கை மனு கொடுத்திருந்தனர்.

இவர்களது கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், போதிய நிதிவசதி இல்லாமல் தவித்த மருத்துவக்கல்வி மற்றும் பொறியியல் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு தலா ரூ.25,000 வீதமும், ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்பு பயிலும் மாணவ – மாணவிகளுக்கு ரூபாய் 5 ஆயிரம் வீதமும் மொத்தம் 1 இலட்சத்து 65 ஆயிரத்திற்கான தொகையினை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டு அதற்கான காசோலைகளை 8.6.2005 அன்று அந்த மாணவ மாணவிகளிடம் நேரில் வழங்கினார்கள்.

நிதிஉதவியைப் பெற்றுக்கொண்ட மாணவ மாணவிகள் அனைவரும் தங்களது குடும்பச் சூழ்நிலையை அறிந்து தக்கநேரத்தில் நிதிஉதவி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

❖ ❖ ❖

# தேசிய விளையாட்டுப் போட்டிகளில்
# பதக்கம் வென்ற வீரர் மற்றும்
# வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகை

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 6.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், ஆந்திர மாநிலம் ஐதராபாத் மற்றும் விசாகப் பட்டினம் ஆகிய நகரங்களில் நடைபெற்ற 32ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற்று தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்ற 44 தமிழக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு மொத்தம் ரூபாய் 12 இலட்சத்து 15 ஆயிரத்தை ஊக்கத் தொகையாக வழங்கிப் பாராட்டினார்கள்.





மேலும், சதுரங்க விளையாட்டில் 2003 மற்றும் 2004 ஆகிய ஆண்டுகளில் 'கிராண்ட் மாஸ்டர்' (Grand Master) பட்டம் பெற்ற சென்னையைச் சேர்ந்த திரு.ஆர்.பி. ரமேஷ் மற்றும் செல்வி எஸ். மீனாட்சி ஆகியோருக்கு தலா ரூபாய் 5 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 10 இலட்சம் சிறப்பு ஊக்கத் தொகையினை நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

**32ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றோருக்கு ஊக்கத்தொகை**

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்திவரும் இந்திய ஒலிம்பிக் சங்கம், 32ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளை 2002ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஐதராபாத் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் நடத்தியது. இந்தப் போட்டிகளில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர் மற்றும் வீராங்கனைகள் தனித்திறன் போட்டிகளிலும், குழுப் போட்டிகளிலும் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர். இவர்கள், கூடைப்பந்து (ஆண்கள்), கால்பந்து (ஆண்கள்), கையுந்துப் பந்து (ஆண்கள் மற்றும் பெண்கள்), சேபக் டக்ரா (Sepak Takraw), பீச் வாலிபால் (ஆண்கள் மற்றும் பெண்கள்), மேசைப்பந்து (ஆண்கள்), பளு தூக்குதல் (ஆண்கள்), படகுப்போட்டி (ஆண்கள்), நீச்சல் மற்றும் தடகளம் ஆகிய போட்டிகளில் மொத்தம் 105 பதக்கங்களை வென்று தமிழகத்திற்கு பெயரும், புகழும் பெற்றுத் தந்துள்ளனர்.

ஆந்திர மாநிலம் ஐதராபாத், விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் நடைபெற்ற 32ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 6–6–2005 அன்று தலைமைச்செயலகத்தில், சென்னை, சைதாப்பேட்டையைச் சேர்ந்த திருமதி மஞ்சுளா என்பவருக்கு அவரது கண்பார்வையற்ற மற்றும் மனவளர்ச்சிக்குன்றிய இருமகன்களின் சிகிச்சை மற்றும் பராமரிப்புச் செலவுக்காக ரூபாய் 50,000–த்திற்கான காசோலையினை முதலமைச்சர் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 6–6–2005 அன்று தலைமைச்செயலகத்தில், கிணற்று வேலை செய்தபோது இரு கைகளின் விரல் பகுதிகளையும் இழந்த விழுப்புரம் மாவட்ட சவரியார்பாளையத்தைச் சேர்ந்த திரு. அந்தோணி என்பவருக்கு நிவாரண உதவியாக ரூபாய் 50,000–த்திற்கான காசோலையினை முதலமைச்சர் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கினார்கள்.



தமிழகத்தின் சார்பில் பங்கேற்று தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வென்ற 44 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகையாக மொத்தம் 12.15 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 6.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு வழங்கிப் பாராட்டினார்கள்.

**சதுரங்கத்தில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்றோருக்கு சிறப்பு ஊக்கத்தொகை**

சென்னை வடபழனியைச் சேர்ந்த சதுரங்க விளையாட்டு வீரர் திரு.ஆர்.பி.ரமேஷ் மற்றும் மேற்கு கே.கே.நகரைச் சேர்ந்த சதுரங்க விளையாட்டு வீராங்கனை செல்வி எஸ். மீனாட்சி ஆகியோர், தேசிய அளவிலும், உலக அளவிலும் பல்வேறு சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்று 2003 மற்றும் 2004ஆம் ஆண்டுகளில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்றுள்ளனர். இவர்களது திறமைகளைப் பாராட்டி, சதுரங்க விளையாட்டில் மேலும் சாதனைகள் படைக்க ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு ஊக்கத் தொகையாக தலா 5 இலட்சம் ரூபாய் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன்படி, சதுரங்க விளையாட்டில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்ற திரு.ஆர்.பி.ரமேஷ் மற்றும் செல்வி எஸ். மீனாட்சி ஆகிய இருவருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 6.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் தலா ரூபாய் 5 இலட்சத்திற்கான காசோலைகளை நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

ஊக்கத் தொகையினைப் பெற்றுக் கொண்ட விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

* * *



# பூம்புகார் மாநில விருது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், பல்வேறு கைத்திறன் தொழில்களில் சிறப்புமிகு திறமை பெற்றுள்ள 20 கைவினைஞர்களுக்கு "பூம்புகார் மாநில விருது"களை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்தில் கைத்திறன் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் திறமையினை வெளிக்கொணர்ந்து அவர்களை ஊக்குவித்துப் பாராட்டுவதோடு பரிசும் வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் கைத்தொழில் திறமை, கைத்தொழில் வளர்ச்சிக்கு ஆற்றிய பணி, மற்றவர்களுக்கு அவர் அளித்த பயிற்சி ஆகியவற்றின் அடிப்படையில் 5 கைவினைஞர்கள் "பூம்புகார் மாநில விருது" பெறத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இதன்படி, திரு.வி.நாகராஜன் (தஞ்சாவூர் ஓவியம்), திரு.கே.நாகசாமி (நூக்க மர பதிப்பு), திரு.என்.சண்முகசுந்தரம் (மூங்கில் வேலைப் பாடு), திரு.எம். செண்பகராமன் (சணல் நார்), திரு.எஸ்.வரதராஜன் (பஞ்சலோகம்), திரு. வி. ஹரிகிருஷ்ணன் (கற்சிற்பம்), திரு.ஜெயா குரூஸ் (கோக்கனட் சிப்ஸ் மாலை), திரு.கே.என்.பாலு மணி (நெட்டிவேலை), திரு. வி.பாலசுப்ரமணியன் (தஞ்சை ஓவியம்), திரு.என்.பக்கிரிசாமி (நெட்டி வேலை), திரு.ஜே.ரா.ஜவான் ஷெல்லி (தீக்குச்சிகளால் செய்யப்பட்ட ஓவியம்), திரு.ஜி. செல்வம் (மட்பாண்டம்), திரு.டி.நாகராஜன் (சுட்ட களிமண்), திரு.கே.அருள் (மரச் சிற்பம்), திரு. சுப்பிரமணியம் (மாவுக்கல்), திரு.என்.துரைராஜ் (மரச் சிற்பம்) திரு.கே.பி.உமாபதி மற்றும் திரு.கே.பி.விழிநாதன் (தகட்டுவேலை), திரு.ப.சாம்போஜி போன்ஸ்லே (தஞ்சாவூர் ஓவியம்), திருமதி.க.வாசுகி (களிமண்) ஆகியோருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பூம்புகார் மாநில விருதுகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

இந்த விருது பெறும் கைவினைஞர்களுக்கு ரூபாய் 5,000 ரொக்கப்பணம், வெள்ளிப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும், இந்த விருது பெற்றவர்கள் 60 வயதை அடைந்தவுடன் மத்திய அரசு வழங்கும் மாத ஓய்வூதியமான ரூபாய் 1,000 பெறவும் தகுதி உடையவர்களாகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து விருதுகளைப் பெற்றுக் கொண்ட இந்த கைவினைஞர்கள் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி, தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகத் தலைவர் திரு.எம்.ரவிச்சந்திரன், கைத்தறித்துறைச் செயலாளர் திரு.ஏ.இளங்கோவன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

# கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மாதம் ரூபாய் 200 ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ், 12 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகை உட்பட ஓய்வூதியம் மொத்தம் 70 ஆயிரத்து 307 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைக்கு ஏற்ப 30.11.1994 அன்று கட்டுமானத் தொழில்களில் ஈடுபட்டுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களின் நலனுக்காக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்தினால் உயிரிழந்தாலோ, விபத்தினால் உடல் உறுப்பு இழப்பு அல்லது பகுதி முடக்கம் ஏற்பட்டாலோ காப்பீட்டுத்தொகை வழங்கவும், ஓய்வூதியம் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்ட ஒவ்வொரு தொழிலாளியும் 60 வயதினைப் பூர்த்தி செய்து பதிவு பெற்ற தொழிலாளியாகத் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் இருப்பவர்கள் இந்த ஓய்வூதியத்திற்குத் தகுதியுடையவராவார்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் தகுதியுடைய கட்டுமானத் தொழிலாளர்களுக்கு 2000 – 2001 ஆம் ஆண்டிலிருந்து ரூ.200 மாத ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும், 2000 – 2001ஆம் ஆண்டு முதல் ஓய்வூதிய நிலுவைத் தொகை வழங்கப்படும் என்றும், 29.3.2005 அன்று சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள்.

இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், தற்போது 409 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் தொகை வழங்க



உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சென்னையைச் சேர்ந்த ஜி.சண்முகம், ஆர்.பச்சையப்பன், எஸ். நடராஜன், எம்.ஆர்.சாமி, வி.பெருமாள், சி.எஸ்.முருகேசன், வி.துரைராஜ், குப்பம்மாள், வேலூரைச் சேர்ந்த எம். முனுசாமி, கே. கேசவன், சேலத்தைச் சேர்ந்த கே.கோவிந்தன், சி.அம்மனியம்மாள் ஆகிய 12 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு 9.6.2005 அன்று தலைமைச்செயலகத்தில், நிலுவைத் தொகை உட்பட ஓய்வூதியத்திற்கான காசோலைகளை வழங்கி இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு.பி.அண்ணாவி, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைச் செயலர் திரு. என்.கோவிந்தன், இ.ஆ.ப., தொழிலாளர் நல ஆணையாளர் திரு.எம்.சாய்குமார், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

# ஊனமுற்றோருக்கான விருதுகள்



ஊனமுற்றோரில் சிறந்த முறையில் பணிபுரிந்த நபர்களுக்கும், ஊனமுற்றோர்களுக்காகச் சிறப்பாகச் சேவை புரிந்தவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கும் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின் மூலம் ஆண்டுதோறும் மாநில விருதுகள் மற்றும் இந்திய அரசால் தேசிய விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**தேசிய விருது (National Award)**

அ) அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் ஆகியோருக்கான சிறந்த பணியாளர் (Best Employee) மற்றும் சிறந்த சுயதொழில் செய்யும் பணியாளர் (Best Self Employed) ஆகியோருக்காக மொத்தம் 25 விருதுகளும்,

ஆ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தோர் ஆகியோரை அதிக அளவில் பணியமர்த்திய அரசு நிறுவனங்கள், அரசு சார்ந்த பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சிறந்த தனியார் தொழிலதிபர் களுக்காக என 18 விருதுகளும்,

இ) ஊனமுற்றோரை அதிக அளவில் வேலைக்கு அமர்த்திய பணியமர்த்தும் அலுவலர் (Placement Officer) நான்கு நபர்களுக்கும்,

ஈ) ஊனமுற்றோருக்குச் சிறப்பாகச் சேவை புரிந்த ஐந்து தனி நபர்களுக்கும் (Best Individual Award),

உ) ஊனமுற்றோருக்குச் சிறப்பாகச் சேவை புரியும் ஆறு தொண்டு நிறுவனங்களுக்கும் (Best Institution Award),

ஊ) ஊனமுற்றோரின் மறுவாழ்விற்காக உதவும் நவீன சாதனங்களைக் கண்டுபிடித்த சிறந்த தொழில் நுட்ப சாதனைக்காக (Best Technological Innovations Award) 3 விருதுகளும்,

எ) இலக்கியம், கலாச்சாரம் போன்ற துறைகளில் புதிய படைப்புகளை உருவாக்கிய ஊனமுற்ற நபருக்கு ஒரு விருதும்,

ஏ) ஊனமுற்றோர் தடையின்றி சென்றுவர சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கட்டடத்திற்காக மூன்று விருதுகளும்,

ஐ) ஊனமுற்றோரில் அவர்கள் சார்ந்த துறையில் சாதனை புரிந்து சிறந்த முன் மாதிரியாக விளங்கும் ஊனமுற்ற நபர்கள் 5 பேர்களுக்கும் (Role Model Award),

ஒ) மறுவாழ்வுப் பணிகள் சிறப்பாக வழங்கும் மாவட்டத்திற்கு ஒரு விருதும்,

ஓ) தேசிய அறக்கட்டளையின் சிறந்த உள்ளூர் குழுவிற்கு ஒரு விருதும் என மொத்தம் 72 தேசிய விருதுகளுக்காக மாநில அரசு தகுந்த விண்ணப்பங்களை மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்யும்.



**மாநில விருதுகள் (State Award)**

அ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர் ஆகியோரை அதிக அளவில் பணியமர்த்திய அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சிறந்த தொழிலதிபர்களுக்கான 2 விருதுகளும்,

ஆ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களுள் சிறந்த பணியாளர்களுக்கான ஒவ்வொரு பிரிவிலும் ஒருவருக்கென 5 விருதுகளும்,

இ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தவர்களுக்குச் சிறந்த முறையில் பயிற்சி அளித்தல் மற்றும் கல்வி போதித்தமைக்கான சிறந்த ஆசிரியர்களுள் 5 நபர்களுக்கும்,

ஈ) ஊனமுற்றோருக்கு சிறப்பாகச் சேவை புரிந்த தொண்டு நிறுவனங்களுக்கு 2 விருதுகளும்,

உ) ஊனமுற்றோருக்கு அருஞ்சேவையாற்றிய ஒரு சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கும்,

ஊ) ஊனமுற்றோருக்குச் சிறப்பாக மருத்துவ உதவிகள் செய்த சிறந்த மருத்துவர் அல்லது இணை மருத்துவ நிபுணர்கள் (Para Medical Personnel) என ஒரு நபருக்கும்,

எ) ஊனமுற்றோருக்கு சேவையாற்றிய 2 சமூகப் பணியாளர்களுக்கும்,

ஏ) மகளிர் நலத்திற்குத் தொண்டாற்றிய ஒரு மகளிர் நிறுவனத்திற்கும் ஒரு சமூகப் பணியாளருக்கும் என மொத்தம் 20 விருதுகள் வழங்கப்படும்.

மேற்கண்ட 20 விருதுகளில் பின்வரும் ஆறு விருதுகள் சுதந்திர தின விழாவின்போது வழங்கப்படும்.

1) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயினால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்த நபர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பளித்த ஒரு தன்யார் தொழிலதிபருக்கும்,

2) ஊனமுற்றோர் உயர்வுக்குச் சிறப்பாகப் பணியாற்றிய ஒரு நிறுவனத்திற்கும்,

3) மகளிர் உயர்வுக்கு அருஞ்சேவையாற்றிய ஒரு மகளிர் நிறுவனத்திற்கும்,

4) ஊனமுற்றோருக்கு அருஞ்சேவையாற்றிய ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும்,

5) ஊனமுற்றோருக்கு சிறப்பாக மருத்துவ உதவிகள் செய்த ஒரு மருத்துவருக்கும்,

6) ஊனமுற்றோருக்குச் சேவையாற்றிய ஒரு சிறந்த சமூகப் பணியாளருக்கும்

என மொத்தம் ஆறு விருதுகள் சுதந்திர தினத்தன்றும், இதர 14 விருதுகள் 3.12.2005ல் நடைபெறும் "அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாள்" அன்றும் வழங்கப்படும். ❖




# ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ஆட்டோக்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 10–6–2005 அன்று சென்னை மாநிலக் கல்லூரி விளையாட்டுத் திடலில், ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள இளைஞர்களுக்கு தாட்கோ மூலம் சுயதொழில் தொடங்க நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், 50 பெண்களுக்கும், 250 ஆண்களுக்கும் ஆகமொத்தம் 300 ஆட்டோக்களை வழங்கினார்கள்.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள இளைஞர்களுக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சுயதொழில் தொடங்க நிதியுதவி வழங்கும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இலவசமாக ஆட்டோ ஓட்டுநர் பயிற்சி வழங்கப்படுவதுடன் மானியம் மற்றும் வங்கிக் கடனுடன் சொந்தமாக ஆட்டோ ரிக்ஷா வாங்க நிதியுதவியும் வழங்கப்படுகிறது.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு சுயவேலைவாய்ப்பை உருவாக்கி அவர்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த வழியமைத்துத் தரும் நோக்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் தாட்கோ நிறுவனத்தின் சார்பாக, சென்னை தரமணியிலுள்ள சாலைப் போக்குவரத்துப் பயிற்சி நிறுவனத்தால் ஆட்டோ உரிமம் இல்லாத 50 பெண்கள், 100 ஆண்கள், ஆட்டோ உரிமம் உள்ள 150 ஆண்கள் ஆகமொத்தம் 300 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களில், ஆட்டோ உரிமம் இல்லாதவர்களுக்கு சாலைப்



போக்குவரத்துப் பயிற்சி நிறுவனத்தில் 6 வார கால இலவச ஆட்டோ ஓட்டுநர் பயிற்சியும், ஆட்டோ ஓட்டுநர் உரிமம் உள்ளவர்களுக்கு 2 வார கால சிறப்புப் பயிற்சியும் வழங்கப்பட்டது. இதனையடுத்து, ஆட்டோ ரிக்ஷா வாகனங்களைப் பெற்று சுயதொழில் வாய்ப்பை உருவாக்கிக் கொண்டு வாழ்க்கை நடத்த ஏதுவாக தலா ரூபாய் 25,000 மானிய உதவியுடன், ரூபாய் 80,000 வங்கிக் கடன்



ஏற்பாட்டுடன் இந்த 300 பயனாளிகளுக்கும் ஆட்டோக்கள் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன்படி, சென்னை மாநிலக் கல்லூரி விளையாட்டுத் திடலில், 10.6.2005 அன்று நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த 15 பெண் ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் 15 ஆண் ஆட்டோ ஓட்டுநர்கள் ஆகியோருக்கு ஆட்டோ வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்கள். இவ்விழாவிலேயே, மேலும் 35 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கும், 235 ஆண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் ஆட்டோக்கள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 10-6-2005 அன்று வழங்கப்பட்டுள்ள இந்த 300 ஆட்டோக்களும் மாசுக் கட்டுப்பாடு அம்சங்களுடன் கூடிய எரிவாயு வசதியுடன் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு.சொ.கருப்பசாமி, தலைமைச் செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் திருமதி. வி. சரோஜா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஜெ.மா.பாலமுருகன், இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர். ❖

**ஆடவர் ஏறு நடை போடட்டும்!**
**மகளிர் வீறு நடை போடட்டும்! அதனால்**
**தமிழகம் வெற்றி நடை போடட்டும்!**




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

மகளிர் சிறப்புக் காவல் அணியின் முதலாம் துவக்க நாள் கொண்டாடப்படுகின்ற இந்த மகிழ்ச்சிகரமான வேளையில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் உவகை அடைகிறேன். உங்களுக்கு என் உளமார்ந்த வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இன்றைய நிகழ்ச்சிகளைக் காண்கிற போது, பூக்களுக்குள்ளா இத்தனை புரட்சி ஒளிந்து கிடந்தது? மலர்களுக்குள்ளா இத்தனை மகிமை மறைந்து கிடந்தது? என்ற வியப்பு எவருக்கும் ஏற்படும். ஆனால் எனக்கு அந்த வியப்பு இல்லை! காரணம், இவற்றைச் சாதிக்கின்ற வல்லமை உங்களுக்கு உள்ளது என்பதை நான் அறிவேன் – இதற்கு மேல் சாதிக்கின்ற வல்லமையும் உங்களுக்கு உண்டு என்பதையும் அறிவேன்.

தமிழகத்துப் பெண்மையின் மீது நான் வைத்திருக்கும் நம்பிக்கை அப்படிப்பட்டது.

அந்த நம்பிக்கைக்குக் கிடைத்திருக்கிற வெற்றியாகவே உங்களது சாதனையை நான் மதிக்கிறேன்.

கடந்த ஆண்டு ஜனவரித் திங்கள் 30–ஆம் நாள் உங்களிடையே பேசுகிறபோது நான் கூறிய ஒரு வாசகம் உங்களுக்கு நினைவிருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

"பெண்கள் ஆண்களுக்குச் சமமாக மட்டும் அல்ல, வாய்ப்புக் கிடைத்தால் ஆண்களை விடச் சிறப்பாகவும் பணி ஆற்ற வல்லவர்கள்" என்று நான் கூறினேன்.

**நான் கண்ட கனவு**

அந்தக் கூற்றை நீங்கள் மெய்ப்பித்திருப்பது எனக்கு மெத்த மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரு தாயின் நிலையில்

இருந்து வீராங்கனைகளாகிய உங்களைப் பார்த்து நான் பெருமிதம் அடைகிறேன்! பெருமகிழ்ச்சி கொள்கிறேன்!

பெண்களைப் பொறுத்தவரை அன்றைக்கும் ஒரு கேள்வி கேட்கப்பட்டது – இன்றைக்கும் ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. ஆனால், இரண்டு கேள்விகளுக்கும் இடையேதான் எவ்வளவு வேறுபாடு?

"என்ன முடியும் பெண்களால்?" – இது அன்று கேட்கப்பட்ட கேள்வி!

"என்ன முடியாது பெண்களால்?" – இது இன்று கேட்கப்படுகிற கேள்வி!

இரண்டு கேள்விகளுக்கும் இடையே கடலளவு வேறுபாடு அல்லவா காட்சி அளிக்கிறது!

மகளிரின் நிலை மாற்றம் மட்டுமா?

சமூகத்தின் மன மாற்றமும் அல்லவா தெரிகிறது!

இந்த மாற்றம் தற்செயல் விளைவா?

இல்லை!

நான் நீண்ட காலமாகக் கண்ட கனவு!

உங்கள் நிலை உயர நான் வகுத்த திட்டங்கள் – அவற்றைச் செயல்படுத்த உங்கள் உயர் அதிகாரிகளும் நீங்களும் எடுத்த முயற்சிகள் – இவற்றுக்குக் கிடைத்த நியாயமான பரிசுதான் இந்த மாற்றம்!

எந்த மாற்றமும் தானாக வராது. மாற்றம் என்பது, தானே ஏற்படுவது அன்று! ஏற்படுத்தப்படுவது!

'தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா!' என்பது மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் எழுதிய கருத்துக் கவிதை! புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடிய புதுமைப் பாடல்!

காவல் துறையின் நோக்கிலும் போக்கிலும் மாறுதல்களைக் கொண்டு வர விரும்பிய நான் அதை நவீனப்படுத்தி வலிமைப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

## புரட்சிப் பெண்களாகவும் ஆகவேண்டும்

ஏனைய துறைகளில் பெண்கள் வெற்றிக் கொடி நாட்டி வருவதைப் போல காவல் துறையிலும் பெண்கள் வெற்றிக் கொடி நாட்ட வேண்டும் என்று விரும்பினேன்.

அந்த விருப்பத்தின் விழுமிய வெளிப்பாடுதான் இந்தியாவிலேயே முதன் முதலாக நாம் உருவாக்கிய 'பெண் போலீஸ் கமாண்டோ படை'!



2.6.2003 அன்று நடைபெற்ற பயிற்சி நிறைவு விழா மற்றும் முதல் பெண் போலீஸ் கமாண்டோ குழுமத்தின் தொடக்க விழாவில் நான் கலந்து கொண்டேன்.

பெண்கள் பாரதி கண்ட புதுமைப் பெண்களாக இருந்தால் மட்டும் போதாது – புரட்சிப் பெண்களாகவும் ஆக வேண்டும் என்னும் என்னுடைய அவாவை அதிரடிப்படை வீராங்கனைகள் நிறைவேற்றி இருக்கிறார்கள் என்று அன்று நான் சொன்னேன்.

அந்தப் புரட்சி வரலாறு மேலும் தொடரும் விதமாக பெண் போலீஸ் கமாண்டோ பிரிவை உள்ளடக்கிய மகளிர் சிறப்புக் காவல் அணியை 30.1.2004 அன்று நான் தொடங்கி வைத்தேன்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முதல் பெண் காவல் அணி தமிழகத்தில் தொடங்கப்பட்ட அந்த நாளைத் தமிழகக் காவல் துறை வரலாற்றிலே பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நாள் என்று நான் குறிப்பிட்டேன்.

முற்றிலும் மகளிரையே கொண்ட அந்தக் காவல் மகளிர் அணி தனது முதல் ஆண்டை வெற்றிகரமாக நிறைவு செய்து இன்று விழாவைக் கொண்டாடுகின்றது.

சாதனைகளைப் படைப்பதில் ஆண் என்றோ, பெண் என்றோ பாகுபாடு கிடையாது என்பது என்னுடைய

அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த நம்பிக்கையை நிறைவேற்றி உள்ள உங்கள் அனைவரையும் இந்தத் திருநாளில் நான் பாராட்டுகிறேன்.

## முதன்மை இடம் பெறும் காவல்துறை

வீர சாகசங்களையும், வீரச் செயல்களையும் அரங்கங்களில் நிகழ்த்திக் காட்டுகிற நீங்கள் சமூகம் எதிர்பார்க்கின்ற கடுமையானப் பணிகளை மேற்கொள்வதிலும் வீராங்கனைகளாகவே விளங்கி வருகிறீர்கள் என்பதை அறிந்து நான் அக மகிழ்கிறேன்.

கும்பகோணம் மகாமகப் பணி ஆகட்டும் – நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தல் பாதுகாப்புப் பணி ஆகட்டும் – ஆழிப் பேரலை தாக்கிய வேளையில் சென்னை, கடலூர், நாகப்பட்டினம் போன்ற இடங்களில் மேற்கொண்ட மீட்பு மற்றும் நிவாரணப் பணி ஆகட்டும் – ரயில்வே காவல் பிரிவினருடன் இணைந்து ரயில் நிலையங்களில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்புப் பணிகள் ஆகட்டும் – கனரக வாகனங்களை ஓட்டுகின்ற பணி ஆகட்டும் – இப்படி எல்லாவற்றிலும் ஆக்கப்பூர்வமானப் பணிகளை நீங்கள் ஆற்றி வருவது, உங்கள் அணிக்குப் பெருமை சேர்க்கிறது.

அது மட்டும் அல்லாமல், இசைக்குழு மற்றும் விளையாட்டுக் குழுக்கள் மூலமாகவும் உங்கள் திறனை நீங்கள் வெளிப்படுத்தி வருவதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவிலேயே தமிழகக் காவல் துறை முதன் முதல் என்னும் தகுதிகள் பலவற்றைப் பெற்றதோடு அல்லாமல் முதன்மை இடம் பெறும் காவல்துறையாகவும் விளங்குகின்றது.

தமிழ்நாடு காவல் துறை மேம்பட்ட சாதனைகளை மேலும் படைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை நான் எடுத்துள்ளேன்! தொடர்ந்து எடுத்து வருகிறேன்.

## காவல்பணிக்குத் தனியே திட்டம்

உலக நாடுகளுக்கு இந்தியாவின் கிழக்கு வாயிலாக சென்னை மாநகர் அமைய வேண்டும் என்பது எனது தொலைநோக்குத் திட்டம் ஆகும். இந்த நோக்கத்தை எய்தும் வகையில் சென்னைப் பெருநகரின் ஒட்டு மொத்த வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வரும் நான் மிக விரைவாக வளர்ந்து வரும் சென்னைப் புறநகர்ப் பகுதிகள் சென்னை மாநகரின் அங்கமாக வளர்ந்துள்ளதால் ஏற்படும் சவால்களையும், பிரச்சினைகளையும் திறம்படச் சமாளித்து மக்களுக்கு பாதுகாப்பையும், அமைதியையும் வழங்கிட சென்னைப் பெருநகர் காவல் துறையின் அதிகார எல்லைக்குள் செங்கை (கிழக்கு) காவல் மாவட்டம் முழுவதையும் உள்ளடக்கி விரிவுபடுத்தும் ஒரு திட்டத்தை அறிவித்தேன். இவ்வாறு விரிவாக்கப்பட்ட சென்னைப் பெருநகர் காவல் ஆணையரகம் இந்தியாவில் உள்ள மிகப்பெரும் மாநகர் காவல் ஆணையரகங்களில் ஒன்றாக அமைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

புது டெல்லியில் நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம் – ஒழுங்கு பற்றிய மாநாட்டில், காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் பெருநகரங்களில் காவல் பணிக்கு என்று தனியே திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று எடுத்துக் கூறினேன். இதனை ஏற்று பெருநகர காவல் பணிக்கென ஒரு துணைத் திட்டத்தை ஏற்படுத்த மத்திய அரசு முன் வந்துள்ளது என்பது முன்னோடித் திட்டங்களை வகுப்பவர்கள் நாம் என்பதற்கு மற்றும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

## தமிழகத்தின் சாதனை

கடற்கரை சார்ந்த மற்றும் கடல் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், பாதுகாப்பை மேம்படுத்தவும் கடலோரக் காவல் படை என்ற தனிப்படையை உருவாக்க 1994–ஆம் ஆண்டில் நான் ஆணையிட்டேன். இந்தக் கடலோரக் காவல் படையில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் இருந்து 1,050 காவலர்கள் சுழற்சி முறையில் அயற்பணியில் பணியாற்றி வருகிறார்கள். கடலோரப் பாதுகாப்புப் படைக்கென தனியே காவலர்கள் இருந்தால்தான்



சிறப்புறப் பணியாற்ற இயலும் என்பதால் கடலோரப் பாதுகாப்புப் படைக்கெனத் தனி அணி ஒன்று ஏற்படுத்தப் படும் என்று 15.3.2005 அன்று சட்டமன்றப் பேரவையில் நான் அறிவித்தேன். அகில இந்திய அளவில் இதனைச் செயல்படுத்த மைய அரசு பரிசீலித்து வருகிறது என்னும் செய்தி, காலத்துக்கு ஏற்ற திட்டத்தை வகுப்பதிலும் முன் நிற்பவர்கள் நாம் என்னும் பெருமைக்குக் கட்டியம் கூறி நிற்கிறது.



குற்ற எண்ணிக்கையைக் குறைத்து, குற்றங்களைக் கண்டுபிடிக்கும் சதவிகிதத்தை உயர்த்தி, குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி, அவர்களுக்கு உரிய தண்டனையை, விரைந்து பெற்றுத் தருவதில் தமிழகம் சாதனை படைத்து வருகிறது. கொலைக் குற்ற வழக்கில் வழக்குப் பதிவு செய்த நாளில் இருந்து 16 நாட்களில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்புப் பெறப்பட்ட சாதனை படைக்கப்பட்டது தமிழகத்தில்தான் என்பதை இங்கே நான் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எனது அன்புக்கட்டளை**

அனைத்துத் துறைகளின் வளர்ச்சியும் சட்டம் – ஒழுங்கு நிலை நிறுத்தப்படுவதைப் பொறுத்தே அமையும். ஆகவே, காவல் துறையை முழுமையாக வலுப்படுத்த காவல் துறையினருக்கு நவீன தொழில் நுட்ப வசதிகள் வழங்கப்படுவதோடு, அவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கப்பட வேண்டியது அவசியத்திலும் அவசியம் என்பதால், காவல் துறையை நவீனப்படுத்த, பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை நாளும் எடுத்து வருகிறேன். இந்தச் சீரிய நடவடிக்கைகளின் பயனாகத் தமிழகக் காவல் துறை இன்னும் பல சாதனைகளைப் படைக்கும் என்பது என் எதிர்பார்ப்பு – படைக்க வேண்டும் என்பது எனது அன்புக் கட்டளை.

இன்று, முதல் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் மகளிர் சிறப்புக் காவல் அணி புதிய வெற்றிகளைக் குவிக்கட்டும்.

இன்னொன்றையும் நான் இங்கு உள்ளவர்கள் மூலமாக எல்லோருக்கும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பெண்கள் உரிமை பெறுவது ஆண்களின் உரிமைகளுக்கு எதிரானது அல்ல!

பெண்கள் பெருமை பெறுவது ஆண்கள் பெருமை பெறுவதற்குத் தடையானதும் அல்ல!

ஆடவர் ஏறு நடை போடட்டும்!
மகளிர் வீறு நடை போடட்டும்!
அதனால் தமிழகம் வெற்றி நடை போடட்டும்!

மகளிர் சிறப்புக் காவல் அணியினருக்கு எனது பாராட்டுகளையும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டு, இந்த விழா சீரோடும், சிறப்போடும் அமைய பாடுபட்ட டி.ஜி.பி. அலெக்ஸாண்டர் அவர்களுக்கும், அவரோடு ஒத்துழைத்த காவல் துறை அதிகாரிகள் அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டு, உங்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டு, My dear Girls, Women of Tamil Nadu Police, I am proud of you, என்று கூறிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

எனக் கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

(13–6–2005 அன்று சென்னையில்
நடைபெற்ற தமிழ்நாடு மகளிர்
சிறப்புக் காவல் அணியின்
முதலாம் துவக்க நாள் விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை).

# இந்தியாவிலேயே முதன்முதலாக ஆண்டிபட்டியில் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா!

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்




தேன் போல் இனிக்கும் தென்தமிழ் பேசும் தேனி மாவட்டத்தில், என் அருமைத் தொகுதியாகிய ஆண்டிபட்டித் தொகுதியில், என் அன்புக்குரிய ஆண்டிபட்டியில் இன்று நடைபெறும் அரசு விழாவில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வானத்தில் ஒளி வீசும் வட்ட நிலாவை எத்தனை முறை பார்த்தாலும் அலுப்புத் தட்டாது.

கண் எட்டும் வரைக்கும் நீண்டு பரந்திருக்கும் நீலக் கடலை எத்தனை முறை பார்த்தாலும் அலுப்புத் தட்டாது.

நிமிர்ந்து நிற்கும் நீல மலைத் தொடரை எத்தனை முறை பார்த்தாலும் அலுப்புத் தட்டாது.

அதைப்போலத்தான், என் அன்புக்குரிய ஆண்டிபட்டித் தொகுதி மக்களாகிய உங்களைத் திரும்பத் திரும்பச் சந்தித்தாலும் தித்திக்குமே ஒழிய, அது திகட்டவே திகட்டாது.

நான் ஆண்டிபட்டித் தொகுதிக்கு வரும் போதெல்லாம் என் உள்ளத்தில் குதூகலம் கோலோச்சிக் கொண்டு இருக்கும்.

தமிழகத்தில் எல்லாத் தொகுதியும் என் தொகுதியே என்றாலும், எனது தாய்த் தொகுதி ஆண்டிபட்டித் தொகுதி அல்லவா! ஆகவேதான், மற்ற தொகுதிகளை விட ஆண்டிபட்டித் தொகுதிக்கு நான் அதிக முறை வந்திருக்கின்றேன்.



**ஆண்டிபட்டிதான் என் அன்னை**

ஒவ்வொரு முறையும் நான் ஆண்டிபட்டிக்கு வரும்போது அலை கடலாய்ப் பெருகி வரும் உங்கள் அன்புப் பெருக்கில் நான் உள்ளம் திளைக்கிறேன். ஆர்வம் ததும்பும் உங்களைச் சந்திப்பதும், உங்களோடு சேர்ந்து சிந்திப்பதும் எப்போதும் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது.

நான் சென்னைக் கோட்டையில் இருந்து ஆட்சி நடத்தவில்லை. ஆண்டிபட்டித் தொகுதி அன்பு நெஞ்சங்களே, உங்கள் இதயத்தில் இருந்துதான் நான் ஆட்சி நடத்துகின்றேன். இது தான் உண்மை!

நான் இருப்பது சென்னை!

ஆனால், ஆண்டிபட்டிதான் என் அன்னை!

இந்த இனிய விழாவில், தேனி மாவட்டத்து மக்கள் பயனடையும் வகையில் 39 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 1,822 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இதில் ஆண்டிபட்டித் தொகுதியில் மட்டும் 13 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 634 பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன என்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

14 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் நெடுஞ்சாலைத் துறை மூலம் செய்து முடிக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாலங்கள் கட்டுதல் ஆகிய 41 பணிகளைத் திறந்து வைத்ததில் நான் அக மிக மகிழ்கிறேன்.

பொதுப்பணித் துறை, கல்வித் துறை, தாட்கோ, ஊரக வளர்ச்சித் துறை, சுகாதாரத் துறை, பிற்பட்டோர் நலத்துறை மற்றும் நகராட்சி நிருவாகத் துறை மூலமாகக் கட்டி முடிக்கப்பட்ட சமுதாயக் கூடங்கள், வகுப்பறைக் கட்டடங்கள், தீயணைப்பு நிலையம், மருத்துவமனைக் கட்டடங்கள், கூட்ட அரங்கம், மகளிர் சுய உதவிக் குழு கட்டடங்கள், மகளிர் சுகாதார வளாகங்கள், திருமண மண்டபங்கள், வணிக வளாகம், விளையாட்டு அரங்கங்கள் மற்றும் மாவட்டப் பெருந்திட்ட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்ததில் நான் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தச் சீர்மிகு விழாவில், 160 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2,615 பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதில், ஆண்டிபட்டித் தொகுதியில் மட்டும் 122 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 943 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

மேலும் 10 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 17,458 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஏற்றுமதி விற்பனை உயர்வு**

தமிழகத்தில் உள்ள நெசவாளர்கள் தங்களது நெசவுத் தொழிலில், உயர் தொழில்நுட்பத்தைப் புகுத்தி, உலகச் சந்தையில் போட்டியிடும் திறன் படைத்ததாக மேம்பட்ட தரத்துடன் புதிய வடிவமைப்புகளுடன் தங்களது துணிகளை உற்பத்தி செய்திட எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில்தான் தமிழக கைத்தறி நெசவாளர்கள் தயாரிக்கின்ற துணி வகைகள் உலகச்

சந்தையுடன் போட்டியிடும் வண்ணம் புதிய வடிவமைப்பு மற்றும் வண்ணங்களுடன் கூடிய ரகங்களை உற்பத்தி செய்திட, அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம் மற்றும் இதர நிறுவனங்கள் மூலம் 1,300 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டன. மேலும் 2,000 புதிய வடிவமைப்புகள் உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைத்தறித்துணி வகைகளின் விற்பனையைப் பெருக்கிட என்னுடைய அரசு மேற்கொண்ட முனைப்பான நடவடிக்கைகளின் காரணமாக கடந்த நான்கு ஆண்டுகளில் 2,406 கோடி ரூபாய்க்கு கைத்தறித் துணி வகைகள் விற்பனை செய்யப்பட்டன. 2000–2001ஆம் ஆண்டில் 92 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே இருந்த ஏற்றுமதி விற்பனை 2004–2005ஆம் ஆண்டில் 304.02 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்தது.

**வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா**

இவ்வாறு, கைத்தறி நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெற்றிடவும் அதிக ஊதியம் பெற்றிடவும் ஏதுவாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளுகின்ற அதே வேளையில், தமிழகத்தில் விசைத்தறித் தொழில் மேம்படவும், அத்தொழிலை நம்பியுள்ள மக்கள், நலம் பெற்று வாழ்க்கை வளம் பெறவும் எனது அரசு உரிய கவனம் செலுத்தி வருகிறது.

தாராளமயம் ஆக்கப்பட்ட பன்னாட்டுச் சந்தையில் பங்கேற்று உலகச் சந்தையில் போட்டியிடும் வகையில் உலகத் தரம் வாய்ந்த துணிகளை உற்பத்தி செய்திட உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய நாடா இல்லாத விசைத்தறிகளை நிறுவுவது மிக அவசியமானதாகும் என்பதால், விசைத்தறித் தொழில் முனைவோர்கள் பயன்பெறும் வகையில் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்கள் அமைக்கப்பட வேண்டும். இதன்படி, எனது ஆணையின்பேரில், இத்தகைய உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்கள் தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டி; கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல்லடம்; ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு; மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் குமாரபாளையம் ஆகிய இடங்களில் மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன் அமைக்கப்படும் என்று 2003–2004 ஆம் ஆண்டு கைத்தறித் துறையின் மானியக் கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. தற்போது, இதில் ஆண்டிபட்டி, பல்லடம், குமாரபாளையம் ஆகிய மூன்று பகுதிகளில் உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்காக்கள் அமைத்திட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில், ஆண்டிபட்டியில் அமையவுள்ள 'வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காவுக்கு' இந்த இனிய விழாவில் நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டிபட்டிக்கு அருகில் உள்ள டி.சுப்புலாபுரம் என்ற இடத்தில் 40.86 ஏக்கர் நிலப்பரப்பில் 96.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இந்த உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா அமைக்கப்படும். 108 சிறு விசைத்தறி தொழில் முனைவோர்களால் தொடங்கப்படவுள்ள இப்பூங்காவில் 630 நாடா இல்லாத விசைத்தறிகள் மற்றும் 3 சைசிங் ஆலைகள் ஆகியவை நிறுவப்படும். அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளான குடிநீர் மற்றும் வடிகால் வசதி, சாலை மேம்பாடு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், மாற்று மின் வசதி, குழந்தைகள் காப்பகம், தொழிலாளர் பயிற்சி நிலையங்கள், ஆய்வகம், கணினி வடிவமைப்பு மையங்கள், கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடங்கள், தொலைத் தொடர்பு வசதிகள் மற்றும் சுகாதார மையங்கள் ஆகிய அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக இப்பூங்கா திகழும். இந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்தத் தேவையான நிதியுதவி மத்திய, மாநில அரசுகளால் வழங்கப்படும்.

**ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு**

இந்த உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா அமைவதற்குத் தேவையான 40.86 ஏக்கர் இடம் 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், அடிப்படை வசதிகள் 20.04 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், விசைத்தறிகளை நிறுவுவதற்கான தொழிற்கூடங்கள் 12.52 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், அதி நவீன உயர் தொழில்நுட்பம் வாய்ந்த நாடா இல்லாத விசைத்தறிகள் 63.32 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம், 96.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இப்பூங்கா உருவாக்கப்படும்.

இப்பூங்கா மூலம் சுமார் 1,500 நபர்களுக்கு நேரடியாகவும், 15,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதையும் இப்பூங்கா மூலம் ஆண்டிற்கு சுமார் 360 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதித் தரம் வாய்ந்த துணிகள் உற்பத்தி செய்யப்படும் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று, நான் அடிக்கல் நாட்டியுள்ள வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காவின் உள்கட்டமைப்புப் பணிகளை உடன் துவங்கும் வகையில் 4.37 கோடி ரூபாயை இங்கே வழங்கியதில் நான் பெருமகிழ்ச்சி

அடைகிறேன். இப்பூங்கா அமையவுள்ள நிலத்தினைப் பதிவு செய்ய 50 சதவிகித முத்திரைத்தாள் கட்டணச் சலுகை வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன். வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா அமைக்கும் பணி ஓராண்டு காலத்திற்குள் நிறைவு செய்யப்பட்டு உற்பத்தி துவக்கப்படும் என்பதையும் இப்பூங்கா மூலம் ஆண்டுதோறும் சுமார் 225 கோடி ரூபாய் மதிப்பிற்கு அன்னியச் செலாவணி ஈட்டப்படும் என்பதையும் மிகுந்த மனமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விசைத்தறித் தொழிலின் மேம்பாட்டிற்காக, உயர் தொழில்நுட்பம் வாய்ந்த நெசவுப் பூங்கா இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முதலாக அமைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்.

இவ்வாறு, மாநில மக்கள் அனைவர் வாழ்விலும் எவ்வாறு வளம் சேர்ப்பது என்பதை நாள்தோறும் சிந்தித்து, புதிய புதிய திட்டங்களை நான் அறிவித்து வருகிறேன்.

**கல்விக்கு அரசு அளிக்கும் வசதிகள்**

மனிதவள ஆற்றலை மேம்படுத்தி தமிழகத்தைத் தலைசிறந்த மாநிலமாக உருவாக்குவதில் கல்வி இன்றியமையாத பெரும் பங்கு வகிக்கும் காரணத்தால் தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் நான் மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறேன். மழலையர் வகுப்பில் தங்களது கல்வியைத் தொடங்கும் மாணவ, மாணவியர் எந்தக் காரணத்தைக் கொண்டும் இடையில் நின்றுவிடக் கூடாது, கல்வி கற்பதை நிறுத்திவிடக் கூடாது என்பதை இலட்சியமாகக் கொண்டு அவர்கள் தொடர்ந்து கல்வி பயில்வதற்கான அனைத்து வசதிகளையும், வாய்ப்புகளையும், எனது அரசு ஏற்படுத்தித் தருகிறது. தமிழகத்தில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள்ளேயே தொடக்கப்பள்ளி வசதிகளையும், மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்குள் நடுநிலைப் பள்ளி வசதியையும், எனது அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மாணவ, மாணவியர் உற்சாகத்துடன் கல்வி கற்பதற்கு ஏதுவாக சத்துணவு, சீருடை, கல்வி உதவித் தொகை, இலவச பாடப் புத்தகங்கள், இலவச சைக்கிள்கள் என ஒல்லும் வகையெல்லாம் உதவிகளை வழங்குவதோடு மாணவ, மாணவியருக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் எல்லாப் பள்ளிகளிலும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு ஏற்படுத்தித் தருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில், தேனி மாவட்டத்தில் 29 புதிய துவக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 36 துவக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 10 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 17 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், தரம் உயர்த்தப்பட்டுள்ளன. NABARD வங்கிக் கடன் உதவி மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலமாக 313 கூடுதல் வகுப்பறைகளும், 9 ஆய்வகங்களும் கட்டப்பட்டு, கழிவறைகள், குடிநீர் வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.




எனது அரசு செயல்படுத்திய கல்வி வளர்ச்சிப் பணிகளால் எத்தகைய மாற்றம் தேனி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது தெரியுமா? 2002ஆம் ஆண்டில் 88 சதவிகிதமாக இருந்த மாணவ, மாணவியர் சேர்க்கை வீதம் தற்போது 98.1 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. தேனி மாவட்டத்தில், 2001–2002ஆம் ஆண்டில், 2,06,096 மாணவ, மாணவியரே கல்வி பயின்ற நிலை மாறி, 2004–2005ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 2,42,891 ஆக உயர்ந்துள்ளது. எனது தலைமையிலான தமிழக அரசு மேற்கொண்டுள்ள கல்வி வளர்ச்சிப் பணிகள் எந்த அளவுக்குப் பயன் அளித்துள்ளன என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

**தேனி அரசு மருத்துவக் கல்லூரி**

தேனி மாவட்டத்தில், குறிப்பாக, ஆண்டிபட்டியிலும் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள கிராமப்புற இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் தரமான உயர் கல்வியை வழங்கி

பின்தங்கிய இந்தப் பகுதியை முன்னேறிய பகுதியாக மாற்றிட வேண்டும் என்ற நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை, நான் மேற்கொண்டு வருகிறேன்.

இதன் அடிப்படையில்தான், ஆண்டிபட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற இளைஞர்களும், இளம் பெண்களும் உயர் கல்வியைப் பெறும் வகையில் கல்லூரி ஒன்று ஆண்டிபட்டியில் 2002ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. மகளிர் தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்று 2004ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.

மேலும், ஆண்டுதோறும் 100 மாணவ, மாணவியர் மருத்துவக் கல்வி பயில வாய்ப்பாக, அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய தேனி அரசு மருத்துவக் கல்லூரி ஆண்டிபட்டியில் அமையும் வகையில் அதன் முன்னோடி நடவடிக்கையாக மருத்துவக் கல்லூரி மருத்துவமனையையும், மருத்துவக் கல்லூரிக்கான கட்டடங்களையும் 2004ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நான் தொடங்கி வைத்தேன்.

இத்தகைய முனைப்பான நடவடிக்கைகளின் பயனாக, தேனி மாவட்டம், குறிப்பாக ஆண்டிபட்டி தொகுதி கல்வி வளர்ச்சியில் முன்னிலை பெற்று, மாநிலத்தில் உள்ள வேறு எந்த இடத்தோடும் போட்டிபோடும் அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி மாவட்டத்தில், தொடர்ந்து செயல்படுத்தப்படும் கல்வி வளர்ச்சிப் பணிகளுக்காக, 3 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், விளையாட்டுத் திடல்கள், விளையாட்டு அரங்கங்கள், வகுப்பறைக் கட்டடங்கள், அறிவியல் கூடங்கள் முதலான 44 பணிகளைத் திறந்து வைத்ததிலும்; 16 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பிலான வகுப்பறைக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், முதலான 149 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

என்னுடைய சிந்தனைகள் எப்பொழுதும் மக்களைச் சுற்றியே இருக்கின்றன. என்னுடைய செயல்பாடுகள் அனைத்தும் மக்களின் நன்மை ஒன்றையே கருத்தில் கொண்டு அமைகின்றன.

இந்த நேரத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை அனைவரின் கவனத்திற்கும் நான் கொண்டுவர விரும்புகிறேன்.

தேனி மாவட்ட மக்கள் மருத்துவக் கல்வி மற்றும் மேம்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகளைப் பெறுகின்ற மேம்பாட்டுத் திட்டமாக, ஆண்டிபட்டியில் புதிய மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உருவாக்கப்படும் என்று 2002ஆம் ஆண்டில் நான் அறிவித்து இருந்தேன். புதிய மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்கும் பணிகளை உடனடியாகத் தொடங்கிடும் வகையில் இதற்கான அரசாணை 2002ஆம் ஆண்டு செப்டம்பரில் வெளியிடப்பட்டது. இத்திட்டத்திற்கு முதற்கட்டமாக 12 கோடி ரூபாயும், இரண்டாவது கட்டமாக 46.93 கோடி ரூபாயும், அதன் பின்னர் 15.39 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குரிய மொத்த நிதி ஒதுக்கீடான 74.32 கோடி ரூபாயையும் எனது அரசு முழுமையாக ஒதுக்கீடு செய்துள்ளது. இது தவிர, ஆண்டு தொடரும் செலவினமாக 8.77 கோடி ரூபாய் செலவில் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறாக 300 படுக்கைகள் கொண்ட அதிநவீன மருத்துவ மனையையும், ஆண்டுதோறும் 100 மாணவ–மாணவியர் பயிலும் மருத்துவக் கல்லூரியையும் நிறுவுவதற்கான முழுத் தொகையையும் எனது அரசு ஒதுக்கியுள்ளது. ஆண்டிபட்டியில் அமைந்துள்ள தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை நான் 8.12.2004 அன்று துவக்கி வைத்தேன். இம்மருத்துவமனை நல்ல முறையில் இயங்கி வருவதை அனைவரும் நன்கு அறிவர். இம்மருத்துவமனையில் நாள்தோறும் ஏறத்தாழ 1,000 புறநோயாளிகள் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இவ்வளவு சிறப்பாக இந்த மருத்துவமனை இயங்கி வருகின்ற வேளையில் மருத்துவக் கல்லூரியைத் துவங்குவதற்கான அனுமதியை இந்திய மருத்துவக் குழுமம் (Medical Council of India) வழங்காமல் நிறுத்தி வைத்திருப்பது உள்ளபடியே வருந்தத்தக்கதாகும்.

தேனி மருத்துவக் கல்லூரிக்குத் தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு உபகரணங்களும் பொருத்தப்பட்டுள்ளன. மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகிய அனைவரும் நியமிக்கப்பட்டு இந்த மருத்துவமனையில் பணியாற்றி வருகின்றனர். மாணவ–மாணவியருக்கான தங்கும் விடுதிகள் கட்டும் பணி விரைவாக நடைபெற்று

வருகிறது. இது மிக விரைவில் முடிக்கப்படும். இந்நிலையில் இந்திய மருத்துவக் குழுமம் (Medical Council of India) வேண்டும் என்றே மாணவ–மாணவியர் தங்கிப் பயில தற்காலிக மாற்று விடுதிக் கட்டடங்கள் இருந்தபோதிலும், புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படவில்லை போன்ற காரணத்திற்காக மருத்துவக் கல்லூரியைத் துவக்குவதற்கான ஒப்புதலை வழங்காமல் உள்ளது, உள்ளபடியே தமிழக மக்களுக்கு, குறிப்பாக, தேனி மாவட்ட மக்களுக்கு இழைக்கப்படும் மிகப் பெரிய அநீதியாகும். எனவே, இதனை மறுபரிசீலனை செய்து, தேனி மருத்துவக் கல்லூரிக்கான ஒப்புதல் உடன் வழங்கப்பட வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.




சிந்தித்துப் பார்க்க வேண்டும். மக்கள் வாக்களித்து, நாடாளுமன்ற உறுப்பினர்களாக வெற்றி பெற்று, மத்திய அரசில் இன்று பதவி வகிக்கும் 12 அமைச்சர்கள், 12 மத்திய அமைச்சர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால், எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டு, வேண்டுமென்றே இத்தனை இலட்சம் மக்களுக்குப் பயன்படக்கூடிய இந்த மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி வழங்காமல் இருக்கிறார்கள் என்று சொன்னால், இது எவ்வளவு பெரிய அநீதி? மக்கள் சம்பந்தப்பட்ட இத்தகையப் பிரச்சினைகளில் அரசியல் புகுத்தப்படக்கூடாது என்பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. ஆகவே, தமிழகத்தில் இருந்து டெல்லிக்குச் சென்ற, மத்திய அரசில் பதவி வகிக்கின்ற 12 அமைச்சர்கள் இப்போதாவது இதில் உரிய கவனம் செலுத்தி எந்த நியாயமான காரணமும் இல்லாமல் இந்த தேனி மருத்துவக் கல்லூரியைத் திறந்து வைப்பதற்கான அனுமதியை வழங்காமல் இருப்பதை உடனடியாக அவர்கள் கவனித்து, தேவையான அனுமதியைப் பெற்றுத் தர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக மீண்டும் ஒரு முறை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**புதிய திட்டங்கள்**

குழந்தையின் பசி அறிந்து உணவு அளிக்கும் தாய்மை உணர்வுடன் மக்களின் தேவையை அறிந்து திட்டங்களைத் தீட்டும் நல்லரசாக எனது அரசு விளங்குகிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். தேனி மாவட்ட மக்களின் தேவை அறிந்து, ஆண்டிபட்டி மக்களின் ஆவலை உணர்ந்து, அவர்களின் கோரிக்கைகள் என்னென்ன என்று ஆய்ந்தறிந்து, அவற்றை எப்படி எல்லாம் நிறைவேற்றலாம் என்று முனைந்து நான் செயல்பட்டு வருகிறேன். அந்த வகையில் தேனி மாவட்ட மக்கள் வாழ்வில் வளமும் நலமும் சேர்க்கும் சில புதிய திட்டங்களை இந்த இனிய விழாவில் அறிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆண்டிபட்டி, ஜக்கம்பட்டி, மற்றும் டி.சுப்புலாபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் மேம்படுத்தப்பட்ட நெசவுத் தறிகள் தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர். இந்தக் கோரிக்கையை ஏற்று இந்தப் பகுதி கைத்தறி நெசவாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட நெசவுத் தறிகளை, அதாவது Handloom with Jacquard வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன். இதன்படி, ஒவ்வொன்றும் 12,000 ரூபாய் மதிப்புள்ள மேம்படுத்தப்பட்ட நெசவுத் தறிகள் சுமார் 1,500 கைத்தறி நெசவாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப் படும்.

தேனி மாவட்டத்தில் உள்ள சில தொலை தூர மற்றும் மலைப் பகுதி குக்கிராமங்களில் தற்போது மின் வசதி இல்லை. வனப் பகுதிகளின் வழியாக மின் கம்பிகள்

அமைப்பதில் தடைகள் உள்ளன. எனவே, அரசரடி, பொம்மராஜபுரம், குழிக்காடு, நொச்சி ஓடை, இந்திரா நகர், அஞ்சராப்பள்ளி, ராஜீவ் நகர், மற்றும் வெள்ளிமலை எஸ்டேட் ஆகிய குடியிருப்புகளில் சூரிய மின் சக்தியைப் பயன்படுத்தி வீடுகளுக்கு மின்வசதியும், தெருவிளக்கு வசதியும் உடனடியாகச் செய்து தர நான் ஆணையிட்டுள்ளேன். இப்பணிகள் ஆறு மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திராட்சை விவசாயிகளுக்குப் பயனளிக்கும் தொழிற்சாலைகள்**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ராயப்பன்பட்டி மற்றும் கம்பம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காமைய கவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி ஆகிய இடங்களில் அதிக அளவில் திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் திராட்சைகளின் மதிப்பைக் கூட்டுகின்ற வகையில், திராட்சையை அடிப்படையாகக் கொண்டு புதிய தொழிற்சாலைகள் அமைவது திராட்சை விவசாயிகளுக்கு பெரும் நன்மை பயக்கும் என்பதால், பதப்படுத்தப்பட்ட திராட்சை பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் உலர் திராட்சை தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவற்றை புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கும்படி நான் ஆணையிட்டுள்ளேன்.

**மாம்பழ சேகரிப்பு மையம்**

தேனி, மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மாம்பழங்கள் பெருவாரியாக விளைகின்றன. இம்மாவட்டங்களில் 73,697 ஏக்கர் பரப்பளவில் ஏறத்தாழ 1 இலட்சத்து 58 ஆயிரம் மெட்ரிக் டன் மாம்பழங்கள் விளைகின்றன. இதில், தேனி மாவட்டத்தின் பங்கு மட்டும் 28 ஆயிரம் மெட்ரிக் டன்களாகும். இவற்றை ஏற்றுமதி செய்திட ஏதுவாக இம்மாவட்டங்களை உள்ளடக்கி மாம்பழத்திற்கான வேளாண் ஏற்றுமதி மண்டலம் – Agri Export Zone – ஏற்படுத்தப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்தேன். இத்திட்டம் 24 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் மாநில அரசின் பங்கு 4 கோடியே 13 இலட்சம் ரூபாய் ஆகும். இத்திட்டத்தின் கீழ், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் மாம்பழங்களைப் பதப்படுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. பெரியகுளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் விளையும் மாம்பழங்களை எளிதில் கொள்முதல் செய்யும் வகையில், பெரியகுளத்தில் ஒரு மாம்பழ சேகரிப்பு மையம் 25 இலட்சம் ரூபாய் செலவில் தனியார் தொழில் முனைவோரால் அமைக்கப்படும். பெரியகுளத்தில் அமைந்துள்ள தோட்டக்கலைக் கல்லூரி, தேனி மாவட்ட மாம்பழ விவசாயிகளுக்கு மாம்பழம் பயிரிடுவதிலும், அறுவடைக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய வேளாண்மை குறித்தும் தொடர்ந்து பயிற்சிகள் வழங்கும். இதன்மூலம் தேனி மாவட்டத்திலுள்ள மாம்பழ விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள்.

குமுளி பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்த்திடவும், பேருந்துகளைப் பயன்படுத்துகின்ற பொது மக்களின் வசதியை மேம்படுத்திடவும் நமது மாநில எல்லைக்குள் அமைந்துள்ள குமுளி லோயர் கேம்ப் (Kumuli Lower Camp) பகுதியில் ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஆகும். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் சுமார் 1 ஏக்கர் பரப்பளவில் வனத் துறையின் அனுமதி பெற்று புதிய பேருந்து நிலையம் ஒன்று விரைவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சாலைகள் சீரமைப்பு**

மாநிலத்தில் தொழில் வளம் பெருக வேண்டுமானால், மேம்பட்ட சாலை வசதிகளுடன் அந்த மாநிலம் இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு சாலைகளை மேம்படுத்தவும், இணைப்புச் சாலைகள் உருவாக்கவும், பாலங்கள் கட்டவும் நான் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறேன். இதன் அடிப்படையில், தேனி மாவட்டத்தில், கடந்த நான்கு ஆண்டுகளில், பல்வேறு திட்டங்களின் கீழ், 70 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பில் 220க்கும் மேற்பட்ட சாலை மற்றும் பாலப் பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இந்த இனிய விழாவில், 15 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பில் சாலை அமைத்தல், சாலை மேம்படுத்துதல் முதலான பல்வேறு பணிகளைத் திறந்து வைத்து, 28 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட உள்ள 492 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன். இவ்வாறு, முழு முனைப்புடன் சாலை அமைத்தல் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பழுதடைந்த சாலைகளையும், சீரமைத்துத் தர வேண்டும் என்று மக்களிடம் இருந்து எனக்கு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. இதனை ஏற்று முதலமைச்சரின்



சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு 30 கோடி ரூபாய் செலவில் தேனி மாவட்டத்தில் உள்ள பழுதடைந்த சாலைகள் சீரமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி மாவட்டத்தில், போடிநாயக்கனூரில் இருந்து தேனி வழியாக வைகை ஆற்றில் சேருகின்ற கோட்டக்குடி ஆற்றின் தண்ணீர் வீணாகாமல் தேக்கி வைத்து அதனை பாசனத்திற்குப் பயன்படுத்தும் வகையில் குரங்கனி அருகே ஒரு நீர்த் தேக்கம் கட்டப்பட வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் கோரிக்கை ஆகும். பொதுமக்களுடைய இந்தக் கோரிக்கையை ஏற்று, இத்திட்டத்தை உடனடியாக ஆய்வு செய்து செயலாக்கம் செய்திட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு பொதுப் பணித்துறை உயர் அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

தேனி மாவட்டத்தில் 2,354 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியை உறுதி செய்யும் வகையிலும், 2,350 ஏக்கர் நிலத்திற்குப் புதிய பாசன வசதி அளிக்கும் வகையிலும் தொடங்கப்பட்ட 18ஆம் கால்வாய் திட்டம் நிலம் கையகப்படுத்துவது உள்ளிட்ட சில பிரச்சினைகள் காரணமாக நிறைவேறாமல் உள்ளது என்பது எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இத்திட்டப் பணிகளை விரைவுபடுத்தி, விரைந்து முடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு பொதுப் பணித் துறை உயர் அதிகாரிகளுக்கு நான் ஆணையிட்டுள்ளேன் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை இன்றைய தினம் பயனாளிகள் அனைவருக்கும் என் கையாலேயே வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், நேரம் போதாது என்பதால் 15 பேருக்கு மட்டும் இந்த மேடையில் நான் உதவிகளை வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும் இப்போதே இங்கேயே உரிய உதவிகளை வழங்குவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளை அடிப்படையாக வைத்து தங்கள் தொழில்களை இன்னும் சிறப்போடு செய்து வாழ்க்கையில் நலமும், வளமும் பெற்றிட வேண்டும் என்று அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜேஷ் லக்கானி அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!

எனக் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

**16.6.2005 அன்று ஆண்டிபட்டியில்**
**நடைபெற்ற தேனி மாவட்ட**
**அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**
**ஆற்றிய உரை**



# சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுச் சங்கத்தின் புதிய இணையதளம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுச் சங்கம் சார்பில் உருவாக்கப் பட்டுள்ள புதிய இணையதளத்தினைத் தொடங்கி வைத்தார்கள். இந்த இணைய தளத்தின் முகவரி www.capacs.org ஆகும்.

எய்ட்ஸ் நோயைத் தடுப்பதில் தீவிரக் கவனம் செலுத்தி முனைப்புடன் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு, இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த ஆதரவும், இலவச மருத்துவச் சிகிச்சையும் அளித்திட உறுதி பூண்டுள்ளது. இதன் அடிப்படையில் தான், சென்னை மருத்துவக் கல்லூரி பொது மருத்துவமனை, எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனை, மதுரை மருத்துவக் கல்லூரி பொது மருத்துவமனை மற்றும் நாமக்கல் அரசு பொது மருத்துவமனை ஆகியவற்றில் இதற்கான இலவச மருத்துவச் சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டு எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசின் தீவிர நடவடிக்கையால் 2001ஆம் ஆண்டில் கருவுற்ற தாய்மார்களுக்கு 1.5 சதவிகிதமாக இருந்த எச்ஐவி/எய்ட்ஸ் நோய், தற்போது 0.17 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

எச்ஐவி/எய்ட்ஸ் நோய் இல்லா தமிழகம் உருவாக, தமிழக அரசு பல்வேறு விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மூலமாகத் தடுப்பு நடவடிக்கைகளையும், நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தக்க ஆதரவையும் வழங்கி, இந்த நோயைத் தடுப்பதில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக விளங்கி வருகின்றது. இவ்வாறு, தமிழக அரசு மற்றும் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கம் பொதுமக்களுக்கு அளித்து வரும் பல்வேறு நலத்திட்டங்களை மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில், சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுச் சங்கம் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள புதிய இணையதளத்தை 8.6.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.

இந்த இணையதளத்தின் மூலம் சென்னையில் இயங்கிவரும் அரசு இரத்த வங்கிகள், குடும்பநல மருத்துவ மையங்கள், தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள், பால்வினை நோய் சிகிச்சை மற்றும் 24 மணி நேர தொலைபேசி ஆலோசனை மையம் ஆகியவற்றின் சேவைகள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளவும், பயன்பெறவும் இயலும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், சென்னை மாநகர துணை மேயர் திரு.கராத்தே ஆர்.தியாகராஜன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் திருமதி. எம்.ஷீலா ப்ரியா, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.எம்.பி. விஜயகுமார், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி இணை ஆணையர் டாக்டர்.க.மணிவாசன் இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

* * *





# “என்றென்றும் சென்னை” திட்டத்தின் கீழ் புதிய கட்டடங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் திறந்து வைத்தார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.6.2005 அன்று தலைமைச்செயலகத்தில், சென்னை மாநகராட்சி மூலதன நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் கீழ், ரூபாய் 1 கோடியே 69 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள், மருந்தகங்கள், பூங்கா மற்றும் தண்டையார்பேட்டை அரசு புறநகர் மருத்துவ மனையில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 50 படுக்கைகளுடன் கூடிய கூடுதல் கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்.

சென்னை நகரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ள, “என்றென்றும் சென்னை” என்னும் திட்டத்தின் கீழ், சாலைகள், விளக்குகள், பூங்காக்கள் முதலியன மேம்படுத்தப்படுவதோடு, மக்கள் பயன்பெறும் வகையில், புதிய மருத்துவமனைகள், பள்ளிக் கட்டடங்கள், பள்ளி ஆய்வகங்கள் ஆகியவற்றைச் சென்னை மாநகராட்சி கட்டி வருகிறது.

இதன்படி, சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து மொத்தம் ரூ.82.79 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள சென்னை மாநகராட்சிப் பூங்கா, அறிவியல் ஆய்வகம், கூடுதல் வகுப்பறைக் கட்டடம், உடற்பயிற்சிக் கூடம், உயர் மின் கோபுர விளக்கு ஆகியவற்றையும், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.59.44 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் சலவைத் தொழிலாளர் ஓய்வறைக் கட்டடங்கள் ஆகியவற்றையும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.சந்திரன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.11.34 இலட்சம், மற்றும் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.கே.சேகர்பாபு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15.52 இலட்சம் ஆகமொத்தம் ரூ.26.86 இலட்சம் மதிப்பில் ஜெ.ஜெ.நகரில் கட்டப்பட்ட மருந்தகம் ஆகியவற்றையும், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மூலம் அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைந்த தண்டையார்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனையில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 50 படுக்கைகளுடன் கூடிய கூடுதல் கட்டடத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு செய்தி – விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. என். தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர் திருமதி. ஷீலாராணி சுங்கத், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் திருமதி.ஷீலா ப்ரியா,இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி துணைமேயர் கராத்தே திரு.ஆர்.தியாகராஜன், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.எம்.பி.விஜயகுமார், இ.ஆ.ப., ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் டி.ரவீந்திரன் ஆகியோர் உடனிருந்தனர். ✶



# 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற மாணவ - மாணவியருக்கு ரொக்கப் பரிசு

பள்ளி இறுதி வகுப்பான 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்விலும், +2 எனப்படும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்விலும், தமிழை முதல் மொழிப்பாடமாகக் கொண்டு மாநிலத்திலேயே அதிக மதிப்பெண்கள் பெற்று, முதல் மூன்று நிலைகள் பெறுகின்ற மாணவ, மாணவியரின் திறமையைப் பாராட்டி, அவர்களை ஊக்குவிக்கும் வகையில், ரொக்கப் பரிசு அளிக்கும் புதிய திட்டம் (Award Scheme) ஒன்றைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இத்திட்டத்தின்படி, 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழை முதல் மொழிப்பாடமாகக் கொண்டு, மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று, முதல் மூன்று நிலைகளைப் பெறுகின்ற மாணவ, மாணவியருக்கு முதல் நிலைக்கு 7,000 ரூபாய், இரண்டாம் நிலைக்கு 6,000 ரூபாய், மூன்றாம் நிலைக்கு 5,000 ரூபாய் ரொக்கப் பரிசாக வழங்கிடவும், 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழை முதல் மொழிப்பாடமாகக் கொண்டு, மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று, முதல் மூன்று நிலைகளைப் பெறுகின்ற மாணவ, மாணவியருக்கு முதல் நிலைக்கு 15,000 ரூபாய், இரண்டாம் நிலைக்கு 12,000 ரூபாய், மூன்றாம் நிலைக்கு 10,000 ரூபாய் ரொக்கப் பரிசாக வழங்கிடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்படி, இந்த ஆண்டு தமிழ்நாட்டில் பள்ளி இறுதித் தேர்வான 10ஆம் வகுப்பில் தமிழை முதற்பாடமாகப் பயின்று, 500க்கு 490 மதிப்பெண்கள் பெற்று முதல்நிலையில் தேறிய அருப்புக்கோட்டை, சாத்தூர் SHN ஈத்தல் ஹார்வி பெண்கள் மேனிலைப்பள்ளி மாணவி செல்வி ஏ.ரம்யா அவர்களுக்கு 7,000 ரூபாய்,

தூத்துக்குடி ஹோலிகிராஸ் பெண்கள் மேனிலைப் பள்ளியில் பயின்று, 489 மதிப்பெண்களுடன் இரண்டாம் நிலையில் தேர்ச்சி பெற்ற வி.மகராசி அவர்களுக்கு 6,000 ரூபாய் மற்றும் 488 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் நிலையில் தேர்ச்சி பெற்ற நாகர்கோயில் செயின்ட் ஜோசப் கான்வென்ட் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி என்.சிந்து, தூத்துக்குடி ஸ்பிக்நகர் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி கே. ஷர்மிளா தேவி, மற்றும் செல்வி ஜி.ஷிர்லி, திருச்சி காட்டூர் செயின்ட் ஆண்டனி உயர்நிலைப்பள்ளி மாணவன் செல்வன் டபிள்யு. ஆலிவர் சாம்சன் ராய், மன்னார்குடி செயின்ட் ஜோசப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி ஜி.கஸ்தூரி ஆகியோருக்கு தலா 5,000 ரூபாயையும் ரொக்கப் பரிசாக மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.6.2005 அன்று நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

தொடர்ந்து, இவ்வாண்டு 12ஆம் வகுப்புத் தேர்வில் தமிழை முதல்மொழிப் பாடமாக ஏற்று, 1200க்கு 1,185 மதிப்பெண்கள் பெற்று, முதல் நிலையில் தேர்ச்சி பெற்ற நாமக்கல் காவெட்டிப்பட்டி குறிஞ்சி மேனிலைப்பள்ளி மாணவி செல்வி ஜி.சத்யாவுக்கு 15,000 ரூபாயும், 1,183 மதிப்பெண்கள் பெற்று, இரண்டாம் நிலையில் தேர்ச்சி பெற்ற திருநெல்வேலி பாளையங்கோட்டை ரோஸ்மேரி மெட்ரிகுலேஷன் மேனிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவி செல்வி எம். ஆஷா பெனாசிருக்கு 12,000 ரூபாயும், 1,181 மதிப்பெண்கள் பெற்று, மூன்றாம் நிலையில் தேர்ச்சி பெற்ற கிருஷ்ணகிரி ஊத்தங்கரை எஸ்.வி.மந்திர் மெட்ரிகுலேஷன் மேனிலைப்பள்ளி மாணவி செல்வி எஸ்.ஏ.ஆயிஷா, நாமக்கல் ராசிபுரம் எஸ்.ஆர்.வி. ஆண்கள் மேனிலைப்பள்ளி மாணவன் செல்வன் ஆர்.ஸ்ரீநாத் ஆகியோருக்கு தலா 10,000 ரூபாயையும் ரொக்கப் பரிசாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கிப் பாராட்டினார்கள். மேலும், அந்த மாணவ, மாணவிகள் ஊக்கமுடன் கல்வி பயின்று வாழ்க்கையில் முன்னேறுவதோடு தமிழ்நாட்டிற்குப் பெருமைச் சேர்க்க வேண்டும் என்று வாழ்த்தினார்கள்.

ரொக்கப் பரிசுக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட இந்த மாணவ, மாணவிகள் அனைவரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தற்போது வழங்கப்பட்டுள்ள இந்த ரொக்கப் பரிசுத் தொகை அன்றி, 10ஆம் வகுப்பில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று நிலைகளைப் பெற்றுள்ள மாணவ மாணவியர் தங்களது மேல்நிலைக் கல்வியைத் தொடர்ந்து பயில, ரூபாய் 1,500ம், 12ஆம் வகுப்புத் தேர்வில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று நிலைகளைப் பெற்றுள்ள மாணவ, மாணவியர் தங்கள் கல்வியைத் தொடர, அரசு விதிமுறைகளின்படி உயர்கல்விக் கட்டணங்கள், விடுதிக் கட்டணங்கள் மற்றும் புத்தகச் செலவினத்தையும் அரசு வழங்கும்.

* * *



கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்களது 110–ஆவது பிறந்த நாளினையொட்டி அவரது நினைவிடத்தில், 5.6.2005 அன்று, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மலர்ப் போர்வை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்களின் பயன்பாட்டிற்காக ஊர்திகள்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 10.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் 31 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மொத்தம் 1 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் 31 நோயாளர் ஊர்திகளையும் (Ambulance) 15 வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுக்களின் பயன்பாட்டிற்காக 65 இலட்சத்து 61 ஆயிரத்து 735 ரூபாய் செலவில் 15 சீருந்துகளையும் வழங்கினார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கிராமப்புற மக்களுக்குத் தரமான மருத்துவச் சிகிச்சை அளிக்கும் பொருட்டு, மேம்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகளற்ற ஊராட்சி ஒன்றியங்களில் மருத்துவ மனைகள் அமைக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தியதன் அடிப்படையில், தமிழ்நாட்டில் இதுவரை 105 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 30 படுக்கை வசதிகள், அறுவைச் சிகிச்சை அரங்கம், எக்ஸ்ரே, இ.சி.ஜி., அல்ட்ராசோனோகிராம், கூடுதல் ஆய்வக வசதி மற்றும் ஆம்புலன்ஸ் வசதி போன்றவை செய்து தரப்பட்டுள்ளன.

மேம்படுத்தப்பட்ட 105 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஏற்கெனவே 76 நோயாளர் ஊர்திகள் வழங்கப்பட்டுவிட்டன. தற்போது, மீதமுள்ள 29 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட வருசநாடு, தடிக்காரன்கோணம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட மொத்தம் 31 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூபாய் 1 கோடியே 58 இலட்சம் செலவில் 31 வாகனங்களை வாங்கி வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன்படி, தேனி மாவட்டம் தேவதானப்பட்டி, கன்னியாகுமரி மாவட்டம் இடைக்கோடு, சேலம் மாவட்டம் வாழப்பாடி, காஞ்சிபுரம் மாவட்டம் திருப்புக்குழி, திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே.பேட்டை, விழுப்புரம் மாவட்டம் மைலம் ஆகிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உரிய வாகனங்களின் சாவிகளை அந்தந்த வாகன ஓட்டுநர்களிடம் 10.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நேரில் வழங்கினார்கள். மீதமுள்ள 25 வாகனங்களும் அந்தந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டு சாவிகள் வாகன ஓட்டுநர்களிடம் அளிக்கப்பட்டன.

இதேபோன்று, வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தேனி, திண்டுக்கல், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய 15 மாவட்ட வேளாண் விற்பனைக் குழுக்களின் பயன்பாட்டுக்காக மொத்தம் 65,61,735 ரூபாய் செலவில் 15 சீருந்துகளை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன்படி 10.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, ஈரோடு, திண்டுக்கல், திருநெல்வேலி, திருவண்ணாமலை ஆகிய 6 மாவட்ட வேளாண் விற்பனைக் குழுக்களுக்கான ஊர்திகளின் சாவிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அந்தந்த வாகன ஓட்டுநர்களிடம் நேரில் வழங்கினார்கள். இவ்விழாவிலேயே, மேலும் 9 வேளாண் விற்பனைக் குழுக்களுக்கான சீருந்து வாகனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. என்.தளவாய் சுந்தரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.கே. பாண்டுரங்கன், மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் திருமதி.ஷீலாராணி சுங்கத், இ.ஆ.ப., வேளாண்மைத் துறைச் செயலாளர் செல்வி லீனா நாயர், இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியத் தலைவர் திரு. ஆர்.முருகையாபாண்டியன் ஆகியோர் பங்கேற்றனர். ★

# சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு மேலும் ரூ.12.5 கோடி நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை 17.6.2005



விவசாயிகள், கைவினைஞர்கள், ஊரக ஏழை எளியோர் ஆகியோர் தங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள வாய்ப்பாக அவர்கள் கடன் உதவி நிறுவனங்களை எளிதில் அணுகி, கடன் வசதி பெற்றிடவும், அவர்களின் வாழ்க்கை நிலை உயர்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தரவும், என்னுடைய அரசு, எப்போதுமே அவர்களுக்கு ஆதரவான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளுக்குக் கட்டுப்பாடு விதித்தது மிகவும் துரதிர்ஷ்டவசமானது என்று ஏற்கெனவே, அதாவது 10.4.2005 அன்றே நான் சுட்டிக்காட்டி இருந்தேன். அதுவும் கடந்த மூன்று ஆண்டுகளாக மாநிலம் தொடர்ந்து வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த நிலையில், இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டிருப்பது இன்னும் மோசமானதாகும். சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், மத்திய நிதி அமைச்சகம் 1949ஆம் ஆண்டு வங்கிப் பணிகள் முறைப்படுத்தல் சட்டத்தின் 11(1) பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட விதிவிலக்கைத் தொடர்ந்து அளிக்காமல் அதற்கு மாறாக, அவ்வங்கியின் செயல்பாடுகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி கட்டுப்பாடு விதித்துள்ளது. இதனால், அடுத்த வேளாண்மைப் பருவம் தொடங்கவிருக்கும் நிலையில், விவசாயிகள், கைவினைஞர்கள் மற்றும் ஊரக ஏழை, எளியோர் பாதிக்கப் பட்டுள்ளனர். 31.3.2005ஆம் நாள் அன்றுள்ளவாறான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் கருத்திற் கொள்ளப்பட்டால், அன்றைய நிலவரப்படி சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிடம் உள்ள நிகர மதிப்பு (Net worth) 2.35 கோடி ரூபாய் என்பதையும், எனவே, அவ்வங்கி, 1949ஆம் ஆண்டு வங்கிப் பணிகள் முறைப்படுத்தல் சட்டத்தின் 11(1) பிரிவை நிறைவு செய்கிறது என நான் முன்னரே சுட்டிக்காட்டியிருந்தேன். எனவே, 31.3.2005ஆம் நாளன்று நிலவரப்படியான நிலைமை கருத்தில் கொள்ளப்பட்டு, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளுக்குக் கட்டுப்பாடு விதித்துப் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் திரும்பப்பெறப்பட வேண்டும் என நான் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநருக்குக் கடிதம் எழுதினேன்.

இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டிக் குறிப்புகளின்படி, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கணக்குகள் விரிவாகத் தணிக்கை செய்யப்பட்டதில், 31.3.2005ஆம் நாள் நிலவரப்படி, அவ்வங்கியின் நிகர மதிப்பு (Net worth) 2.36 கோடி ரூபாய் எனத் தெரியவந்துள்ளது. நடைமுறையிலுள்ள வழிகாட்டிக் குறிப்புகளின்படி பார்த்தால், சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி அனைத்து விதிமுறைகளையும் கடைப்பிடித்து வருகிறது என்று தெளிவாகிறது. எனவே, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளுக்குக் கட்டுப்பாடு விதித்துப் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளைத் திரும்பப் பெற வலுவான முகாந்திரம் இருப்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இன்னும் சொல்லப் போனால் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின்படி, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, 2004–2005ஆம் ஆண்டில் 28.13 கோடி ரூபாய் ஆதாயம் ஈட்டியுள்ளது. தற்போது "நபார்டு" வங்கி மிகவும் கண்டிப்பான நிலைப்பாட்டை மேற்கொண்டு, மிகக் கடுமையான சில அளவுகோல்களுடன் மேலும், கடுமையான நெறிமுறைகளை விதித்துள்ளது. வங்கியின் தணிக்கை முடியும் முன்னர் பெறப்பட்ட தொகைகளைக் கணக்கில் கொள்ளாமலும் மாற்றியமைக்கப்பட்ட வட்டியினைச் செயல்படாச் சொத்துகளாகக் கருதவேண்டுமென வலியுறுத்தியும் நபார்டு வங்கி உண்மை நிலையைத் திரித்து

மோசமான நிதிநிலை நிலவுவதைப்போல ஒரு தோற்றத்தைச் சித்தரிக்க விழைந்துள்ளது. எனவே, 'நபார்டு' வங்கி இந்தப் புதிய, கடுமையான வழிகாட்டிக் குறிப்புகளின் அடிப்படையில் சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டை மதிப்பீடு செய்து புதிதாக ஒரு அறிக்கை அளித்துள்ளது. ஆனால், நபார்டு வங்கியின் இந்த அறிக்கையின்படி பார்த்தால்கூட, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, 2004– 2005 ஆம் ஆண்டில் 6.19 கோடி ரூபாய் நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது. அப்படி இருக்க ஏன் இந்தக் கடும் நடவடிக்கை?

முந்தைய தி.மு.க அரசால் 1999ஆம் ஆண்டில் சீரழிக்கப்பட்ட சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் நிதி நிலைமையைச் சீரமைத்திட தமிழ்நாடு அரசு அசாதாரண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளபோதிலும், இந்திய ரிசர்வ் வங்கி, விவசாயிகள், கைவினைஞர்கள் மற்றும் ஊரக ஏழை எளியோர் ஆகியோருக்குக் கடனுதவி கிடைத்திட ஏதுவாக பரிவுடன் நடவடிக்கை எடுக்காதது எனக்கு வியப்பைத் தருகிறது. இது விவசாயிகளுக்கும், கைவினைஞர்களுக்கும், ஊரக ஏழை எளியோருக்கும் கடனுதவி மிகவும் தேவைப்படுகின்ற ஒரு காலகட்டமாகும். இந்த நேரத்தில் முட்டுக்கட்டை போடுகின்ற கொள்கையைப் பின்பற்றுவது நல்லதல்ல. ஒட்டுமொத்தக் கூட்டுறவுக் கடன் அமைப்பையும் மறுசீரமைத்துப் புத்துயிர் ஊட்ட வேண்டியது இன்றியமையாதது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. இது தொடர்பாக மத்திய அரசால் நியமிக்கப்பட்ட பணிக்குழு அதன் அறிக்கையை அண்மையில்தான் அளித்துள்ளது. நாட்டில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தையும் பெரிய அளவில் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று அந்த அறிக்கையில் இருந்து நமக்குப் புலனாகிறது. பணிக்குழுவின் அறிக்கை இன்னும் பரிசீலிக்கப்பட்டு, செயல்படுத்தப்படாத நிலையில், சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் நிதி நிலைமையைச் சீரமைத்து அதற்குப் புத்துயிர் ஊட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் என்னுடைய அரசு மேற்கொண்டு, அதன் பயனாக, அந்த வங்கி உள்ளபடியே, தற்போது நன்கு செயல்பட்டு வருகிற நேரத்தில், அதன் செயல்பாட்டை முடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை.

இப்பிரச்சினையை மீண்டும் புதிதாகப் பரிசீலிக்க வேண்டும் என நான் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநருக்கு ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்துள்ளேன். நபார்டு வங்கியின் மதிப்பீட்டைக் கருத்திற்கொண்டு தற்போது இந்திய ரிசர்வ் வங்கி, மாநில அரசு, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்குப் புதிதாக நிதி உதவி அளித்திட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளது. அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தொடர்பாக இதுவரை செயல்படுத்தப்பட்டு வருகின்ற வழிகாட்டிக் குறிப்புகளைக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அகற்றி அதனை முழுவீச்சில் செயல்பட உடனடியாக அனுமதிக்கலாம் என்பதே எங்களுடைய கருத்தாகும். விவசாயிகளும், ஊரகப் பொருளாதாரமும் வறட்சியின் பிடியில் இருந்து மீண்டு வந்துகொண்டு இருக்கின்ற இந்தத் தருணத்தில், இந்த வங்கியின் நேர்வில் மட்டும் ஒரு வேறுபட்ட வழிகாட்டிக் குறிப்புகள் பின்பற்றப்படுவது ஏன் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இது மிகவும் துரதிர்ஷ்டவசமானதாகும்.

இருப்பினும், விவசாயிகள், கைவினைஞர்கள், ஊரக ஏழை, எளியோர் ஆகியோரின் நலனைக் கருத்தில் கொண்டு, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு உடனடியாக, மேலும் 12.50 கோடி ரூபாய் நிதியுதவி அளித்திட நான் முடிவு செய்துள்ளேன். இத்தொகையில் 5 கோடி ரூபாய் நேரடி மானியமாக வழங்கப்படும். 7.50 கோடி ரூபாய் பங்கு மூலதன உதவியாக வழங்கப்படும். 1.4.2005ஆம் நாளுக்குப் பிறகு, இந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியால் பெறப்பட்ட தொகையான 12.23 கோடி ரூபாய் மற்றும் தற்போது வழங்கப்படும் இந்த உதவித் தொகை ஆகியவற்றைக்கொண்டு இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு வங்கி ஆகியவற்றால் தற்போது விதிக்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டிக் குறிப்புகளை இவ்வங்கி பெரும்பாலும் நிறைவு செய்திடும். என்னுடைய அரசால், தற்போது புதிதாக அளிக்கப்பட்டுள்ள உதவியைக் கருத்திற்கொண்டு, இந்திய ரிசர்வ் வங்கி, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளுக்குக் கட்டுப்பாடு விதித்துப் பிறப்பித்த ஆணைகளை ரத்து செய்து, அவ்வங்கி நடப்பு வேளாண்மைப் பருவத்தில் இயல்பாகச் செயல்பட்டு, விவசாயிகள், ஊரக கைவினைஞர்கள், ஏழை, எளியோர் ஆகியோருக்குக் கடன் உதவி அளித்திட உடனடியாக அனுமதிக்கும் என்று நான் நம்புகிறேன்.

* * *




# சீர்மிகு சட்டப் பள்ளிக்கான புதிய கட்டடம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.5.2005 அன்று சென்னை பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள பூம்பொழில் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "சீர்மிகு சட்டப் பள்ளிக்கான" (School of Excellence in Law) கட்டடத்தை குத்துவிளக்கு ஏற்றித் திறந்து வைத்தார்கள்.

19.4.2002 அன்று நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக முதல் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று விழாப் பேருரை ஆற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு அரசால் "சீர்மிகு சட்டப் பள்ளி" உருவாக்கப்படும் என்றும், பல்கலைக் கழகமே அதனை நேரடியாக நடத்தும் என்றும் தெரிவித்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தவாறு 21.11.2002 அன்று சீர்மிகு சட்டப் பள்ளியை தொடங்கி வைத்தார்கள். தொடர்ந்து இப்பள்ளிக்கான புதிய கட்டடம் கட்டுவதற்கு 9.6.2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் 2 தளங்களுடன் சீர்மிகு சட்டப் பள்ளி குறிப்பிட்ட கால அளவிற்குள் கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டடத்தின் ஒவ்வொரு தளமும் 559.14 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். கீழ்த்தளத்தில் 4 வகுப்பறைகள், ஆசிரியர் அறைகளும் மற்றும் மாணவியரின் பொது அறையும் அமைந்துள்ளன. முதல் தளத்தில் நூலகம், முதல்வர் அறை, அலுவலக அறை, ஆசிரியர்கள் அறை, வகுப்பறைகள் மற்றும் மாதிரி நீதிமன்ற அறை ஆகியவை அமைந்துள்ளன.

மாணவ – மாணவியருக்கும், ஆசிரியர்களுக்கும் மற்றும் உள்ள பணியாளர்களுக்கும் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளோடும் மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்போடும் உருவாக்கப்பட்டுள்ள சீர்மிகு சட்டப் பள்ளியின் புதிய கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.5.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பன்னாட்டுச் சட்டம் மற்றும் அறிவார்ந்த சொத்துரிமைச் சட்டம் ஆகிய இரண்டு புதிய முதுகலை சட்ட மேற்படிப்புகளைத் தொடங்கி வைத்தார்கள்.

**2005 – 2006 ஆம் ஆண்டு முதல் செயல்பட உள்ள இந்த முதுநிலை சட்ட மேற்படிப்புகளின் ஒவ்வொரு பிரிவிலும் 20 மாணவ–மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

**இதே நிகழ்ச்சியில், பூம்பொழில் வளாகத்தில் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 3 தளங்களுடன் கூடிய நிருவாக அலுவலகம் மற்றும் முதுநிலை சட்ட மேற்படிப்புத்துறை கட்டடத்தைக் கட்டுவதற்கும், செங்கல்பட்டு சட்டப் பல்கலைக்கழக சட்டக் கல்லூரியில் 1 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், சென்னையில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் 1 கோடி ரூபாய் மதிப்பிலும், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் கூடுதல் வகுப்பறைகள், நூலகம், விடுதி மற்றும் விளையாட்டு மைதானங்கள் ஆகியவை கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டினார்கள்.**

**இதுவன்றி, இந்திய வழக்குரைஞர் மாமன்றம், பல்கலைக்கழக மானிய ஆணையம் மற்றும் சட்டப் பல்கலைக்கழக கல்விக் குழுமங்கள் அனைத்தும் ஏற்றுக் கொண்டுள்ள பாடத் திட்டத்தின்படி வடிவமைக்கப்பட்டுத் தமிழில் எழுதப்பட்டுள்ள 27 சட்டப் பாட நூல்களையும், 40 மையச் சட்டங்கள் மற்றும் 41 தமிழ்நாடு சட்டங்களின் தமிழாக்க நூல்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார்கள். மேலும், அகில இந்திய அளவில் சட்டக் கல்லூரிகளுக்கு இடையே நடைபெற்ற சட்ட நுணுக்கங்கள் தொடர்பான பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ–மாணவிகளுக்குப் பரிசுகளை வழங்கினார்கள்.**

**இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திரு. எஸ்.எஸ்.பி. தர்வேஷ், சட்டத்துறைச் செயலாளர் திரு. எல். ஜெயசங்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

---

# கட்டடக் கலையின் அற்புத அழகு

தருமபுரியில் நுளம்ப பல்லவர் காலத்துச் கலையைப் புலப்படுத்தும் ஒரு கோயில் உள்ளது. மல்லிகார்ஜுனர் கோயில் எனப்படும் சைவக் கோயில் அது. சமண சமயம் அப்பகுதியில் எட்டிப் பார்க்கும் முன் அக்கோயிலுக்கு வேளாலீஸ்வரர் கோயில் என்று பெயர். அதற்கு அருகிலேயே ஒரு பெருமாள் கோயில் ஒன்றும் உள்ளது. வேளாலீஸ்வரர் கோயில் மல்லிகார்ஜுனர் கோயிலாக மாறியது கி.பி. பத்தாம் நூற்றாண்டு வாக்கில்.

சிவன் கோயிலும், பெருமாள் கோயிலும் அருகருகேதான் உள்ளன. பெருமாள், மடியிலே லட்சுமியை வைத்துக் கொண்டு அமர்ந்த கோலத்தில் இருக்கிறார். பரவாசு தேவர் பெருமாள் என்று பெயர்.

மல்லிகார்ஜுனர் கோயில் நுளம்பர் காலக் கட்டடக் கலையின் அற்புத அழகை வெளிப்படுத்துகிறது. இக்கோயிலில் அம்பாள் சந்நிதி நடுவிலும் இருபுறங்களிலும் வேளாலீஸ்வரர் சந்நிதியும், கோமேஸ்வரர் சந்நிதியும் உள்ளன.

இங்குள்ள நவரங்க மண்டபம் நூறு தூண்களைக் கொண்டது. அதிலே இரண்டு தூண்கள் கூரையைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன. எனினும் அவை தரையைத் தொடாமல் தொங்குகின்றன. தரைக்கும் தூணின் அடிப்பகுதிக்கும் இடையேயுள்ள இடைவெளியில் ஒரு குச்சியை நுழைத்து அடுத்த புறமாக எடுத்துவிடலாம். ஆனால் தூண் ஆடவோ அசையவோ இல்லை. இன்னொரு தூணின் இடைவெளியில், முக்கால் பகுதியை குப்பையோ மண்ணோ அடைத்துக் கொண்டுவிட்டது.

இந்த ஒவ்வொரு தூணும் ஏறக்குறைய இரண்டு முதல் மூன்று டன் எடையுடையது. தூணின் மேற்பகுதியில் மூன்றடி உயரத்திற்கு கழுமுனை மாதிரி செதுக்கி அதிலே போதிகையைக் கோர்த்திருக்கிறார்கள். கோர்த்த இடத்தைச் சுற்றி பாறாங்கற்களைப் பரப்பி மண்டபமாக்கியிருக்கிறார்கள். கோயிலின் ஒட்டு மொத்த பாரமும் இந்தத் தூண்கள் மீது இருப்பதுதான் விந்தை. இதே போல் அடி ஒட்டாத ஒரு தூண் அடுத்துள்ள காமாட்சி கோயிலிலும் உள்ளது.

கருவறையின் நுழைவாயிலின் இருபுறமும் இரு யானைகள் நீர் தெளிக்க – கஜலட்சுமி சிற்பம். ஒரு யானை நீர் தெளிக்க ஒரு யானை காத்திருக்கிறது. நவரங்க மண்டப வாயிலிலும் கஜ லட்சுமி – யானைகள். அங்கு இதற்கு எதிர்மாறாக நீர் சொரியும் யானைகள் காத்திருக்க இங்கே காத்திருந்த யானை அங்கே நீர் சொரிகிறது. கருவறையில் சிவலிங்கம். இதிலே ருத்ரபாகம் எனும் மேலே நீண்டுள்ள பாளத்தில் எதிரில் எந்தப் பொருள் இருந்தாலும் எதிரொளிக்கிறது. காலை வேளையில் கொடி மரம் முதற்கொண்டு இதிலே பிரதிபலிக்கிறது.

அடுத்து காமாட்சி அம்மன் கோயில் பாதிக் கோயில் கீழே புதைந்துள்ளது. தாமரை மலரில் ஆலயம் அமைந்திருப்பது போல் கட்டுமானம். ❖

("நம்மவர் செய்த விந்தைகள்" என்ற நூலிலிருந்து....)



# விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகங்களைப் போற்றும் வகையில் மணிமண்டபங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் உத்தரவு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவித்தபடி, திரு.ரெட்டைமலை சீனிவாசன், பசும்பொன் திரு. முத்துராமலிங்கத் தேவர், திரு. வெள்ளையத்தேவன், திரு. சுந்தரலிங்கனார் மற்றும் மொழிஞாயிறு திரு. தேவநேயப் பாவாணர் ஆகியோரின் புகழைப் போற்றும் வகையில் நினைவு மண்டபங்களை உடனடியாக அமைக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 9.3.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திரு.ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு மணிமண்டபம் மற்றும் முழு உருவச்சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி, சென்னை கோயம்பேட்டில் 19.5 இலட்சம் ரூபாய் மதிப்பில் திரு.ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு மணிமண்டபம் மற்றும் முழு உருவச்சிலை அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மதுரை மாவட்டம் திருநகரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்த இல்லம் அரசு நினைவிடமாக அமைக்கப்படும் என்று மண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 10.3.2005 அன்று அறிவித்திருந்தார்கள். அதன்படி, மதுரை திருநகரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்த இல்லத்தை 22.59 இலட்சம் ரூபாய் மதிப்பில் அரசு சார்பில் நினைவிடம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்கள்.

வீரபாண்டிய கட்டபொம்மனின் போர்ப்படைத் தளபதியாக இருந்த திரு.வெள்ளையத் தேவன் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 12.4.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதன்படி தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில், வல்லநாடு கிராமத்தில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் நினைவு மண்டபம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில்,12.4.2005 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் திரு. சுந்தரலிங்கனார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன்படி, தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் வட்டத்தில், பாஞ்சாலங்குறிச்சியில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் சுதந்திரப் போராட்ட வீரர் சுந்தரலிங்கனார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் மொழி ஞாயிறு திரு. தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்படும் என்று 12.4.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அவர், திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் பிறந்திருந்த போதிலும், அவர் இயற்கை எய்தியது தமிழ்ச் சங்கம் தோன்றிய மதுரை மாநகர் என்பதால், மதுரை மாநகரில் மணிமண்டபம் அமைவதே சிறப்பாக இருக்கும் என்று அவருடைய மகன் திரு.தே.மணி அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தார். அவரது வேண்டுகோளினை ஏற்று, மதுரை மாநகரில் 33 இலட்சம் ரூபாய் மதிப்பில் மொழி ஞாயிறு திரு.தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த மணிமண்டபங்கள் அமைக்கும் பணிகள் அனைத்தையும் உடனடியாகத் தொடங்கி, அப்பணிகளை சிறப்பாக விரைவில் முடிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

* * *




# தமிழக காவல் துறை மாநில குற்ற ஆவணக் காப்பகத்திற்கென புதிய கட்டடங்கள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2.15 கோடி ரூபாய் செலவில் தமிழக காவல்துறையின் மாநில குற்ற ஆவணக் காப்பகத்திற்கென கட்டப்பட்டுள்ள புதியக் கட்டடத்தை 25.5.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து, ஒருங்கிணைத்து, ஆராய்ந்து அவற்றை விசாரணை அலுவலர்களுக்குத் தேவையான அளவில் தகவல்களாகவும், புள்ளி விவரங்களாகவும் தருவது மற்றும் குற்றம் புரிவோருக்கு உள்ள தொடர்புகள் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கூறுவது ஆகிய பணிகளைத் தமிழ்நாடு மாநில குற்ற ஆவணக் காப்பகம் மேற்கொண்டு வருகிறது. மாநில குற்ற ஆவணக் காப்பகத்தின் அங்கங்களாகக் குற்றச் செயல்முறை விளக்கப் பிரிவு, கைரேகைப் பதிவுப் பிரிவு மற்றும் குற்றம் மற்றும் குற்றவாளிகளைப் பற்றிய தகவல் முறை (Crime and Criminal Information System) அடங்கிய மாநில அளவிலான குற்றப் பதிவுகளைப் பராமரிக்கும் கணினிப் பிரிவு ஆகிய பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த அனைத்துப் பிரிவுகளும் போதிய இடவசதி பெறும் வகையில், அனைத்து அடிப்படை வசதிகளுடனும், மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்போடும், எழிலார்ந்த முறையில் மூன்று தளங்களுடன், ஒட்டுமொத்தமாக 20,147 சதுர அடி பரப்பு கொண்டதாக மாநில குற்ற ஆவணக் காப்பகத்தின் புதிய கட்டடம் 2.15 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள இக்கட்டடத்தில் 50 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய, அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு நவீன கூட்ட அரங்கம், ஒரு சிறிய கூட்ட அரங்கம் மற்றும் பயிற்சி அறை ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.5.2005 அன்று ரிப்பன் வெட்டியும், குத்துவிளக்கு ஏற்றியும் இந்தப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள். தொடர்ந்து, தரைத் தளத்தில் அமைந்துள்ள அலுவலகப் பிரிவுகளைப் பார்வையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முதல் தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கத்தையும் பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், உள்துறை முதன்மைச் செயலாளர் திரு.பவன்ரெய்னா, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.ஏ.எக்ஸ்.அலெக்சாண்டர், இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் தலைவரும், மேலாண்மை இயக்குநருமான திரு.ஐ.கே.கோவிந்த், இ.கா.ப., குற்றப் புலனாய்வுத்துறை குற்றப் பிரிவு கூடுதல் இயக்குநர் திரு. அமித்வர்மா, இ.கா.ப., ஆகியோர் கலந்துகொண்டனர். ★



# பாதிப்புக்குள்ளான மீனவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது முயற்சியின் காரணமாக, வங்காளதேச சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட, சென்னை காசிமேட்டைச் சேர்ந்த குப்பன், சதீஷ், ராஜேஷ், சுரேஷ், தேசப்பன் மற்றும் செந்தில் ஆகிய 6 மீனவர்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 8.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். அப்போது மீனவர்கள் நலமுடன் தமிழகம் திரும்பியதற்கு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பாதிக்கப்பட்ட இம்மீனவர்களுக்கு செலவிடும் வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

26.7.2004 அன்று கடலில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போன சென்னை காசிமேடு பகுதியைச் சேர்ந்த குப்பன், சதீஷ், ராஜேஷ், சுரேஷ், தேசப்பன் மற்றும் செந்தில் ஆகிய 6 மீனவர்கள் இந்திய எல்லையைத் தாண்டி வங்காளதேச கடல் எல்லைக்குள் நுழைந்தனர் என்ற அடிப்படையில் வங்காள தேச அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த மீனவர்களை உடனடியாக விடுவித்துத் தாயகம் திரும்பிட ஆவன அனைத்தும் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 21.3.2005 அன்று கடிதம் எழுதினார்கள். இதன் பயனாக, வங்காளதேச அரசால் சிறைபிடிக்கப்பட்டிருந்த தமிழகத்தைச் சேர்ந்த 6 மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர். 27.5.2005 அன்று திரிபுரா மாநிலத்தில் உள்ள இந்திய எல்லையில் வங்கதேச அதிகாரிகளால் விடுவிக்கப்பட்ட இவர்களைத் தமிழக அரசின் வேண்டுகோளை ஏற்று திரிபுரா மாநில அரசு பத்திரமாகக் கொல்கத்தாவுக்கு அனுப்பி வைத்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, தமிழக மீன்வளத் துறை உயர் அதிகாரிகள் கொல்கத்தாவுக்குச் சென்று விமானம் மூலமாக அந்த 6 மீனவர்களையும் சென்னைக்கு திரும்ப அழைத்து வந்தனர். 30.5.2005 அன்று சென்னை திரும்பிய இவர்களை மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் விமான நிலையத்திற்குச் சென்று வரவேற்றார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தனிப்பட்ட அக்கறையாலும், தமிழக அரசின் தொடர்ந்த முயற்சியாலும் வங்கதேச சிறையிலிருந்து மீண்டு தங்களது குடும்பத்தினருடன் இணைந்த காசிமேடு பகுதியைச் சேர்ந்த குப்பன், சதீஷ், ராஜேஷ், சுரேஷ், தேசப்பன் மற்றும் செந்தில் ஆகிய 6 மீனவர்களும், 8.6.2005 அன்று தலைமைச்செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்துக் கண்ணீர் மல்க தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அப்போது மீனவர்கள் நலமுடன் தமிழகம் திரும்பியதற்கு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டதுடன் பாதிப்புக்குள்ளான இம்மீனவர்களுக்கு உதவிடும் வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

வங்காளதேச சிறையில் வாடிக்கொண்டிருந்த தங்களை மீட்டதுடன் பாதிப்புக்குள்ளான தங்களுக்கு மேலும் உதவிடும் வகையில் தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கியமைக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு இம்மீனவர்கள் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

* * *



# பெருநகர காவல் நவீனமயமாக்கல் திட்டம்

பெருகி வரும் நகரமயமாக்கலின் விளைவாக, காவல் துறையில் எழுந்துள்ள புதிய சவால்களை எதிர்கொள்ளத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும்; மனித ஆற்றல் தேவைகளை நிறைவு செய்யவும் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில், பெருநகர காவல் நவீனமயமாக்கல் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 15.4.2005 அன்று புதுடெல்லியில் பாரதப் பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம்–ஒழுங்குப் பராமரிப்பு குறித்த மாநாட்டில் விடுத்த வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில், 2005–2006ஆம் ஆண்டுக்கான காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், ஒரு துணைத் திட்டமாக சென்னைப் பெருநகர காவல் திட்டத்தைச் சேர்த்துக் கருத்துரு அனுப்ப தமிழக அரசைக் கேட்டுக் கொண்டதுடன், இந்தக் கருத்துரு குறித்து விரிவாக விவாதிப்பதற்காக புதுடெல்லியில் ஒரு சிறப்புக் கூட்டத்தை 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் திங்களில் நடத்திடவும் மத்திய உள்துறை அமைச்சகம் முடிவெடுத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், தமிழக காவல் துறை, காவல் பணி ஆற்றுவதில், நாட்டிலேயே சிறந்த காவல் துறை எனும் பெயர் பெற்றுள்ளது. சட்டம்–ஒழுங்கைப் பராமரிப்பதில் தமிழகக் காவல் துறை மிகுந்த முன்னுரிமை அளித்துச் செயல்படுவதன் காரணமாக தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. அமைதியும், பாதுகாப்பும் மாநிலத்தின் முழுமையான வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது என்பதால், காவல் கடமையாற்றுவதில் புதுமையான உத்திகளைக் கையாண்டு நகரை ஒட்டியுள்ள பகுதிகளில் நகரத்துக்கு ஈடான காவல் பணி வழங்குவதில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது தலைமையிலான தமிழக அரசு உறுதியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில் செங்கை கிழக்கு காவல் மாவட்டத்தில் அமைந்திருந்த 41 சட்டம்–ஒழுங்கு காவல் நிலையங்களையும், 7 அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும் சென்னை மாநகர காவல் துறை அதிகார வரம்பின் கீழ் இணைத்து, சென்னைப் பெருநகர காவல்

ஆணையரகத்தை உருவாக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

பொது அமைதி காப்பதிலும், மக்களுக்கு நிம்மதியான சூழ்நிலையை உருவாக்கித் தருவதிலும் மிகுந்த முனைப்புக் காட்டுகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னோடித் திட்டங்களில் ஒன்றாக அமைந்துள்ள இத்திட்டத்தில், காவல் மாவட்ட எல்லைகளை இணைப்பதோடு மட்டுமன்றி, காவல்துறை நிருவாகத்தின் அதிகார வரம்புகள் மற்றும் நிருவாக அமைப்புகளை மறுசீரமைத்தல் மற்றும் மாற்றி அமைத்தல் ஆகியனவும் அடங்கும். 3 புதிய காவல் மாவட்டங்கள், ஒரு புதிய போக்குவரத்து மாவட்டம் மற்றும் தாம்பரத்தைத் தலைமை யிடமாகக் கொண்டு ஒரு புதிய காவல் உட்கோட்டம் ஆகியவை இதில் உள்ளடங்கியுள்ளன. இத்திட்டத்தை செயலாக்கிட தமிழக அரசு ரூ. 22.40 கோடி செலவினத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், புதிதாக உருவாக்கி ஆணையிட்டுள்ள சென்னைப் பெருநகர காவல் ஆணையரகத்தில் 34 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை உள்ளடக்கி மொத்தம் 155 காவல் நிலையங்கள் உள்ளன. மேலும், தாம்பரம் உட்கோட்டத்திற்கென தனியே ஒரு புதிய அனைத்து மகளிர் காவல் நிலையம் விரைவில் செயல்படத் துவங்கும்.

15.4.2005 அன்று புதுடெல்லியில் பாரதப் பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு குறித்த மாநாட்டில் பங்கேற்று பேசிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த புதிய முயற்சியின் சிறப்பம்சங்கள் பற்றிய விளக்கத்தை தனது உரையில் விரிவாக எடுத்துரைத்தார்கள். சென்னைப்பெருநகர ஆணையரக உருவாக்கம் தனித்துவம் வாய்ந்தது என்றும், சென்னைப் பெருநகர காவல் ஆணையரகத்தை புதியதாக உருவாக்கியதன் மூலம் இந்தியாவில் உள்ள மிகப்பெரிய பெருநகர காவல் ஆணையரகங்களில் ஒன்று என்ற தனிச்சிறப்பைத் தமிழகத்தின் சென்னைப் பெருநகர காவல் பெற்றுள்ளது என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தனது உரையில் குறிப்பிட்டார்கள். பெருநகர காவல் பணிகளின் சிறப்புத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அவற்றுக்குத் தனித்த முக்கியத்துவம் அளித்தல் மற்றும் அவற்றைச் சிறப்புடன் கையாளுதல் ஆகியவை இன்றியமையாதன என்பதையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அப்போது வலியுறுத்தினார்கள். பெருகி வரும் நகரமயமாக்கலின் விளைவாக எழுந்துள்ள புதிய சவால்களை எதிர்கொள்ளத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், மனித ஆற்றல் தேவைகளை நிறைவு செய்யவும் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில், பெருநகர காவல் நவீனமயமாக்கல் என்ற தனியான ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற குறிப்பான வேண்டுகோளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அந்த மாநாட்டில் மத்திய அரசின் முன்வைத்தார்கள்.

பெருநகரங்களின் காவல் பணி தொடர்பான பிரச்சினைகளை சமாளிப்பதற்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், குறிப்பாகத் தெரிவித்த இந்த ஆலோசனையை மத்திய அரசு தற்போது ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில், மத்திய உள்துறை அமைச்சகம் 13.5.2005 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக, 2005–2006ஆம் ஆண்டுக்கான காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், ஒரு துணைத் திட்டமாகச் சென்னைப் பெருநகர காவல் திட்டத்தைச் சேர்த்து கருத்துரு அனுப்புமாறு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும், மாநில அரசின் இந்த முயற்சி புதுமையானது என்பதால் இந்த கருத்துரு குறித்து விரிவாக விவாதிப்பதற்காக புதுடெல்லியில் ஒரு சிறப்புக் கூட்டத்தை இந்த ஆண்டு ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் திங்களில் நடத்திடவும் மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தெரிவித்த ஆலோசனையை மத்திய அரசு ஏற்று, அதன் அடிப்படையில் பெரு நகர காவல் பணிகள் குறித்த சிறப்புப் பிரச்சினைகளை சமாளிக்க துணைத் திட்டம் ஒன்றினைத் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கும், புதுமை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற முனைப்பான சிந்தனைக்கும் கிடைத்த வெற்றி ஆகும். மக்கள் மேம்பாட்டுக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் புதிய திட்டங்களை வகுத்து அதில் புதுமைகளைப் புகுத்தி புதிய முயற்சிகளை மேற்கொள்வதில் தமிழகமே முன்னோடி மாநிலம் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் இது அமைந்துள்ளது.

❖ ❖ ❖

# ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ - மாணவியருக்கு 100 விடுதிகள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 10.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ – மாணவியரின் பயன்பாட்டுக்கென




ரூ.31.50 கோடி செலவில் 26 மாவட்டங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 100 விடுதிகளை திறந்து வைத்தார்கள். மேலும், ரூ.19.18 கோடி மதிப்பீட்டில் 17 மாவட்டங்களில் புதிதாகக் கட்டப்படவுள்ள 66 விடுதிகள் மற்றும் பள்ளி கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அடிக்கல் நாட்டினார்கள். மேலும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிர் நிலம் வாங்கும் திட்டத்தின் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பெண் பயனாளிகளுக்கு நிலப் பத்திரங்களை வழங்கினார்கள். தொடர்ந்து, இவ்வாண்டு 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ–மாணவியருக்கு ஊக்கப் பரிசுகளை நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

---

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

திறந்து வைத்தார்

---

**விடுதி மற்றும் பள்ளிக் கட்டடங்களுக்கு அடிக்கல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2001ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப் பேற்றதும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ–மாணவியரின் நலன் கருதி, தனியார் கட்டடங்களில் இயங்கி வந்த அனைத்து விடுதி களுக்கும் அனைத்து அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுடனும், போதிய இடவசதிகளுடனும் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்ட உத்தரவிட்டார்கள். இதன்படி, தாட்கோ நிறுவனம் மூலம் ரூ.155.30 கோடி செலவில் 493 விடுதிகளைக் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இவற்றில், கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.83.47 கோடி மதிப்பீட்டில் 265 ஆதிதிராவிட மாணவ – மாணவியர் விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 26 மாவட்டங்களில் ரூ.31.50 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 100 விடுதிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 10.6.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், இதே நிகழ்வில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ரூ.19.18 கோடி மதிப்பீட்டில் 17 மாவட்டங்களில் புதிதாகக் கட்டப்படவுள்ள 66 விடுதிகள் மற்றும் பள்ளிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால், அடிக்கல் நாட்டப்பட்டுள்ள இந்த விடுதி மற்றும் பள்ளிக் கட்டடங்கள் 9 மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு, இந்தக் கல்வி ஆண்டு இறுதிக்குள் மாணவ – மாணவியர்கள் பயன்படுத்திக் கொள்ள இயலும்.

### ஆதிதிராவிட மகளிர் சொந்த நிலம் வாங்க உதவி

கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழுகின்ற நிலமற்ற மற்றும் சிறு/குறு விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிர் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையும் வகையிலும், அவர்களை நிலச் சொந்தக்காரர்கள் ஆக்கும் நோக்கிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆதிதிராவிட மகளிர் நிலம் வாங்கும் திட்டத்தினை தாட்கோ மூலம் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

இத்திட்டத்தின் கீழ்,ஒவ்வொரு பயனாளியும் 2.50 ஏக்கர் நன்செய் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் வாங்க, அதிகபட்சமாக ரூ.1 இலட்சம் நிதியுதவியும், நில அபிவிருத்தி, பாசன வசதி மற்றும் கால்நடைப் பராமரிப்பு ஆகியவற்றுக்கு அதிகபட்சமாக ரூ.1 இலட்சம் நிதியுதவியும் வழங்கப்படுகிறது. இதில், 50 சதவிகிதம் மானியமாகவும், 50 சதவிகிதம் வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது.



இத்திட்டத்தின் கீழ், பயனாளிகள் நிலம் வாங்குதல் தவிர நில அபிவிருத்தி, பாசன வசதி மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றிற்கு மொத்தமாகவும் அல்லது அவரவர் தேவைக்குத் தக்க வகையிலும் உதவி பெறலாம். இத்திட்டத்தில், பயனாளிகள் தாங்கள் வாங்க விரும்பும் நிலத்தினை தாங்களே தேர்வு செய்யலாம். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் 75 சதவிகிதம் விலக்கு அளிக்கப்படுகிறது. மீதமுள்ள 25/ சதவிகித கட்டணமும் கடனில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. மேலும், இப்பயனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவசமாக மின் இணைப்பும் உடனடியாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை 8,829 விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு 1,233 இனங்களுக்கு ரூ.7.25 கோடி மானியமாகவும் ரூ.8.5 கோடி வங்கிக் கடனாகவும் ஆக மொத்தம் ரூ.15.75 கோடி நிதியுதவி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு தக்க ஆணைகள் பிறப்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்,10.6.2005 அன்று தலைமைச்செயலகத்தில், 25 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பெண் பயனாளிகளுக்கு நிலப் பத்திரங்களையும், நிதி உதவியையும் வழங்கி தமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்கள்.

### ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ–மாணவியருக்கு ஊக்கப் பரிசுகள்

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது தலைமையிலான அரசு பல சலுகைகளையும், பொருளாதார உதவிகளையும் செய்து வருகிறது. ஆதிதிராவிடர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் 1,049 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளையும், பழங்குடியினர் வாழும் மலைப்பகுகளில் 280 உண்டு உறைவிடப் பள்ளிகளையும் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் தமிழக அரசு நடத்தி வருகிறது. இந்த ஆண்டு, அதாவது 2005ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் இத்துறை பள்ளிகளில் முறையே 61% மற்றும் 69% மாணவ – மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

12ஆம் வகுப்புத் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி வீதம் மொத்தம் 6 பேருக்கு தலா ரூ.25,000 மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றிலும் ஒரு



மாணவர் மற்றும் ஒரு மாணவி வீதம் மொத்தம் 6 பேருக்கு தலா ரூ.10,000 வீதம் ஊக்கப் பரிசாக தமிழ்நாடு அரசு வழங்குகிறது.

இத்திட்டத்தின்படி 12ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற செல்வன். வி.சக்திவேல் (1173/1200), செல்வி. எஸ்.கிருத்திகாராஜ் (1172/1200), செல்வன்.மைக்கேல் ஆண்டோ (1149/1200), செல்வி ஜெ.ரோஸ்மேரி (1142/1200) ஆகியோருக்கு தலா 25,000 ரூபாய் வீதமும் , 10ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற செல்வி. என்.சிந்து (488/500), செல்வன் ஜெ.ஜோ. பிரவின்குமார் (483/500), செல்வன்.எஸ்.சரவணன் (481/500), செல்வி. ஆர்.பிரபா (481/500), செல்வன் பி.பால்ராஜ் (476/500), செல்வி.வி.ஆண்டோ மரிய ஜெரால்டின் (475/500) ஆகியோருக்குத் தலா 10,000 ரூபாய் வீதமும் ஊக்கப் பரிசுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 10.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

இந்த விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு.சொ.கருப்பசாமி, தலைமைச் செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் திருமதி.வி.சரோஜா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஜெ.மா.பாலமுருகன் இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

* * *

## தெரிந்து கொள்வோம்

அண்டார்டிகா பிரதேசத்தில் சூரியன், பல மாதங்கள் இருபத்து நான்கு மணி நேரம் தொடர்ந்து பிரகாசித்து, அங்கு இரவே உருவாக முடியாதபடி செய்து விடுகிறது. இந்தப் பிரதேசத்தில் இருக்கும் சராசரி வெப்பநிலை –37°c. சில சமயங்களில், இங்கு வெப்பநிலை –88°c அளவுக்கு தாழ்ந்துவிடுகிறது. இங்கு சில சமயங்களில் காற்று வேகமாக வீசி விரைவாக ஓடிச் செல்லும் இரயில் வண்டியைப் போன்று சப்தத்தை உருவாக்குகிறது. இங்கு 3 கிலோ மீட்டர் ஆழத்துக்கு பனி உறைந்து கிடக்கிறது. 14 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள இந்தப் பிரதேசத்தில் உறைந்திருக்கும் பனி உலகிலே இருக்கும் பனியின் அளவில் 95 சதவிகிதம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

பொனிலியா (Bonellia) என்ற கடல் புழு இனத்தில், பெண் புழு ஆறு அங்குல நீளத்தைக் கொண்டதாக இருக்கிறது. ஆண் புழுவின் நீளம் 1/16 அங்குலம் தான். பெண் புழு ஆண் புழுவைவிட பல மடங்குகள் பருத்து காணப்படுகின்றது. ஆண் புழுவை விட பெண் புழு நூறு மடங்குகள் அதிக எடை கொண்டதாக உள்ளது.

**பெண் வண்ணத்துப் பூச்சி**

ஆண் வண்ணத்துப் பூச்சியைவிட பதினைந்து மடங்கு நீளமாகவும், பத்து மடங்கு அதிக எடை கொண்டதாகவும் இருக்கிறது.

# பழம்பெரும் திரைப்பட நடிகைக்கு உதவித் தொகை

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரில் வழங்கினார்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வறிய நிலையில் வாடிவரும் பழம்பெரும் திரைப்பட நடிகையும், கர்நாடக குரல் இசையில் புலமை பெற்றவருமான திருமதி எஸ். வரலட்சுமி அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்காக முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் நிதிஉதவி வழங்கிடவும், அதனை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் (Tamil Nadu Power Finance and Infrastructure Development Corporation) சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் பெயரில் வைப்பு நிதியாகச் செலுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையை, மாதந்தோறும் அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கிடவும் உத்தரவிட்டு, அதற்கான ஆணையினை 6.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்கள்.

திருமதி எஸ். வரலட்சுமி அவர்கள், 50 ஆண்டு காலமாகத் திரைப் படங்களில் நடித்துவரும் பழம்பெரும் நடிகை ஆவார். 300 திரைப்படங்களுக்கு மேல் நடித்து புகழ்பெற்றவரும், கர்நாடக குரலிசையில் புலமை பெற்றவருமான திருமதி எஸ். வரலட்சுமி அவர்கள், சக்கரவர்த்தித் திருமகள், மாட்டுக்கார வேலன், நீதிக்கு தலைவணங்கு போன்ற பல படங்களில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடனும், வீரபாண்டிய கட்ட பொம்மன், பூவா தலையா, பணமா பாசமா முதலான பல்வேறு வெற்றிப் படங்களிலும் நடித்தவர் ஆவார். திருமதி எஸ். வரலட்சுமி அவர்கள், தற்சமயம் மிகவும் வறிய சூழ்நிலையில் உள்ளதாகத் தெரிவித்து, தான் தொடர்ந்து வாழ்க்கை நடத்த உதவிட வேண்டும் என்று கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை மனு கொடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கை மனுவைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வறிய நிலையில் வாடும் இவர் வாழ்க்கை நடத்துவதற்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, ரூ. 10 இலட்சம் நிதி உதவி வழங்க ஆணையிட்டார்கள். மேலும், இந்த உதவித் தொகை ரூபாய் 10 இலட்சத்தையும் சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் பெயரில், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்புத் தொகையாகச் செலுத்துமாறும், அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையான 5,833/– ரூபாயை அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கிடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.



இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இதற்கான அரசாணையை திருமதி எஸ். வரலட்சுமி அவர்களிடம் 6.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்கள்.

இதன் மூலம், திருமதி எஸ். வரலட்சுமி அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.5,833 உதவித் தொகையாக கிடைக்கும். இந்த உதவித் தொகை, சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக மாதந்தோறும் திருமதி எஸ். வரலட்சுமி அவர்களுக்கு அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து இதற்கான ஆணையைப் பெற்றுக் கொண்ட பழம்பெரும் நடிகை திருமதி எஸ். வரலட்சுமி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ❖

# நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ மகளிர் தயாரிக்கும் நவீன தொழில்நுட்ப ஓடுகள்



26.12.2004 அன்று தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமி எனும் இயற்கைச் சீற்றத்தினால், தமிழகத்தின் கடற்கரையோர கிராமங்கள் அனைத்தும் பாதிக்கப் பட்டன. அதில் நாகப்பட்டினம் மாவட்டம் சுனாமியால் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு, மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகினர்.

நாகப்பட்டினத்தில் உள்ள அக்கரைப்பேட்டை, கீச்சாங்குப்பம் போன்ற மீனவ கிராமங்கள் பெரும் பாதிப்படைந்து இந்தக் கிராமங்களைச் சார்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான நபர்களை சுனாமி பலி வாங்கியது.

எதிர்கால வாழ்க்கையே கேள்விகுறியாகி விட்ட நிலையில் தங்களது அன்றாட வாழ்க்கைக்கு என்ன செய்யப்போகிறோம் என கலங்கி இருந்த மக்களுக்கு மாற்றுத் தொழில்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட நிருவாகத்தின் சார்பில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் அக்கரைப்பேட்டை கிராமத்தில் உள்ள வங்கக்கடல் மற்றும் கடல்கன்னி மகளிர் சுயஉதவிக் குழுவின் 26 உறுப்பினர்களுக்கு நவீன தொழில் நுட்பத்தில் கான்கிரிட் கூரை ஓடுகள் தயாரித்தல் குறித்து ஒரு மாத பயிற்சி அளிக்கப்பட்டது. மீன்பிடி சார்ந்த தொழில் புரிந்துவந்த மற்றும் வேறு தொழில் செய்யாத பெண்களுக்கு இது ஒரு புதுமையான அனுபவம்.

யாருமே எதிர்பார்த்திடாத வகையில், அப்பெண்கள், இப்பயிற்சியில் முழு மனதுடன் ஈடுபட்டனர். இத் தொழில் குறித்த அனைத்து தொழில்நுட்பங்களையும் கவனமுடன் கற்றுக்கொண்டதுடன் இல்லாமல், அவர்கள் தொழில் தொடங்கி விட்டனர். பெண்களால் தொடங்கப்பட்ட எந்த ஒரு செயலும் சிறப்பானதாக அமையும். அதுமட்டும் அன்று, இச்செயல் ஒரு முன் மாதிரியாக அமைந்துள்ளது. தற்போது இப்பெண்கள் மேற்கொண்டு வந்த மீன்பிடித் தொழிலை மட்டும் நம்பியிருக்கவில்லை. நாள்தோறும் இப்பெண்களால் 200 முதல் 220 ஓடுகள் தயாரிக்கப்படுகின்றன.

ஒரு ஒட்டினைத் தயாரிக்க ரூ.5 செலவாகிறது. ஒரு ஓடு ரூ.6.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு மாதத்திற்கு 6,000 ஓடுகள் வரை உற்பத்தி செய்தால் அதன் மூலம் ரூ.9,000 வரை இலாபம் கிடைக்கும்.

நவீன தொழில்நுட்ப ஓடுகள் தயாரிப்பதற்கு உற்பத்திக் கூடம் ரூ.9.91 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி விரைவில் முடிக்கப்படும். ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. இதுதவிர அக்கரைப்பேட்டையில் உற்பத்திக்கூடம் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.



எஸ்.ஜி.ஆர்.ஒய் திட்டத்தின் கீழ், ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் மானியத்துடன் கூடிய கடன் ரூ.2 இலட்சம் வங்கிக்கடன் பெற தகுந்த தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவப் பெண்கள் முன்னேற்றம் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

– பொ.முத்தையா,
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகப்பட்டினம்.

* * *

# விடுதலைப் போராட்ட வீராங்கனைக்கு நிதியுதவி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 20.6.2005 அன்றுதலைமைச் செயலகத்தில், இந்திய தேசிய ராணுவத்தில் பங்கேற்று சேவையாற்றிய விடுதலைப் போராட்ட வீராங்கனை சரஸ்வதி என்கிற ராஜாமணி அவர்களின் தியாகத்திற்கு கௌரவம் அளித்து, வறுமை நிலையில் வாடுகின்ற இவர் வாழ்க்கை நடத்துவதற்கு ஏதுவாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் நிதி உதவி வழங்கிடவும், இதனை சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் பெயரில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாடு நிறுவனத்தில் வைப்புத் தொகையாக செலுத்தி அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையான 2,917 ரூபாயை அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கிடவும், மேலும் அவர் தனது வாழ்நாள் முழுவதும் இலவசமாகத் தங்கிடும் வகையில் அரசு அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றை அவருக்கு வழங்கிடவும் ஏற்கெனவே உத்தரவிட்டவாறு, அதற்கான ஆணைகளை நேரில் வழங்கினார்கள்.

இந்திய தேசிய ராணுவத்தில் முன்னணி வீராங்கனையாகப் பணியாற்றிய 83 வயது நிரம்பிய விடுதலைப் போராட்ட வீராங்கனை சரஸ்வதி என்கிற ராஜாமணி அவர்கள், தற்போது தங்குவதற்குப் போதிய இடவசதி அற்ற சிறிய வாடகை வீட்டில் தங்கியிருப்பதாகவும், விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் மட்டுமே பெற்று வருவதாகவும், வேறு எந்த ஆதரவும் இல்லாத நிலையில் மிகவும் வறிய சூழ்நிலையில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்து தொடர்ந்து வாழ்க்கை நடத்த தனக்கு உதவிட வேண்டும் என்று கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனு அளித்திருந்தார்.

இந்தக் கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், விடுதலைப் போராட்ட வீராங்கனை சரஸ்வதி என்கிற ராஜாமணி அவர்களின் தியாகத்திற்கு கௌரவம் அளிக்கும் வகையிலும், வறுமை நிலையில் வாடுகின்ற இவர் வாழ்க்கை நடத்த ஏதுவாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5 இலட்சம் நிதியுதவி வழங்கிடவும், இதனை சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் பெயரில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்புத் தொகையாகச் செலுத்தி அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையான 2,917 ரூபாயை அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கிடவும் உத்தரவிட்டிருந்தார்கள். மேலும், இடவசதியற்ற சிறிய வாடகை வீட்டில் இவர் தங்கி இருப்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவரது வாழ்நாள் முழுவதும் இலவசமாகத் தங்கிடும் வகையில் அரசு அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றை வழங்கிடவும் ஆணையிட்டிருந்தார்கள்.

இதன்படி, இந்த உதவிகளுக்கான ஆணைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 20.6.2005 அன்று தலைமைச்செயலகத்தில், விடுதலைப் போராட்ட வீராங்கனை சரஸ்வதி என்கிற ராஜாமணி அவர்களிடம் நேரில் வழங்கினார்கள்.

இந்த ஆணைகளைப் பெற்றுக்கொண்ட விடுதலைப் போராட்ட வீராங்கனை சரஸ்வதி என்கிற ராஜாமணி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார். ✶



# பள்ளிகளில் பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்திட வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 8.6.2005

இந்நாட்டின் எதிர்காலமாகத் திகழும் குழந்தைகள், கல்வி பயிலும் காலத்தில் ஒரு நாளின் பெரும் பகுதி நேரத்தைச் செலவிடும் இடமாகிய பள்ளிகளில், பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்திட உயர் முன்னுரிமை அளிக்க வேண்டியது அவசியம் ஆகும். தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில், அரசு உதவிபெறும் தனியார் பள்ளி ஒன்றில் 16.7.2004 அன்று நிகழ்ந்த ஒரு கோர தீ விபத்தை அடுத்து, என்னுடைய அரசு, இம்மாநிலத்தில் பள்ளிகளின் செயல்பாட்டை முறைப்படுத்துவதற்காகச் சில கூடுதல் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதன்படி, பள்ளிக் கட்டடங்களின் கட்டுமான உறுதித் தன்மை, பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு சில வரையறைகளை நிர்ணயித்துள்ளது.

16.7.2004 அன்று கும்பகோணத்தில் நடைபெற்ற சோகச் சம்பவத்தை அடுத்து, உடனடியாக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தங்களது அதிகார வரம்பிற்கு உட்பட்ட அனைத்துப் பள்ளிகளையும், மிகுந்த கவனத்துடன் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நான் உத்தரவிட்டேன். முதல் நடவடிக்கையாக கீற்றுக் கூரைகள் கொண்ட பள்ளிகளின் பட்டியல் ஒன்றைத் தயாரித்திடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டது. இவ்வாறு கீற்றுக் கூரைகளைக் கொண்டுள்ள அனைத்துப் பள்ளிகளும் அவற்றை உடனடியாக அகற்றி, தீப்பிடிக்காத பொருட்களால் ஆன கூரைகளை அமைக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர், முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் பெற்றோர் – ஆசிரியர் கழகத்தைச் சேர்ந்த 2 உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு, சம்பந்தப்பட்ட பள்ளிகள் அனைத்தையும் முழுமையாக ஆய்வு செய்து, கீற்றுக் கூரைகள் அனைத்தும் மாற்றப்பட்டு அவற்றுக்குப் பதிலாக தீப்பிடிக்காத பொருட்களால் ஆன கூரைகள் அமைக்கப்படுவதை உறுதி செய்தது.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையின் அடுத்த கட்டமாக, 11 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளின் கட்டுமான உறுதித் தன்மையையும், குழந்தைகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த சிறப்பு நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது ஆகிறது. இப்பள்ளிகளில், ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் பயிலும் எல்.கே.ஜி., யு.கே.ஜி., போன்ற மழலையர் வகுப்புகளும் உள்ளன. பல்வேறு அபாயங்களுக்கு, குறிப்பாக, தீயினால் ஏற்படும் அபாயங்களுக்கு உள்ளாகும் வாய்ப்பு உள்ள குழந்தைகள் பயிலுகின்ற இப்பள்ளிகள் கட்டட உறுதித் தன்மை மற்றும் பாதுகாப்பு குறித்த கட்டாயத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டியது இரட்டிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. இந்த இன்றியமையாத் தேவைகளில் சமரசத்துக்கு இடமே இல்லை.

அனைத்து மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளும், கட்டுமான உறுதித் தன்மை மற்றும் பாதுகாப்புத் தேவைகளைக் கண்டிப்பாக நிறைவு செய்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து ஒப்புதல் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக எனது அரசு 2004–ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இருந்து ஒரு தீவிர நடவடிக்கையை மேற்கொண்டது. அனைத்து மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளும் இந்தப் பாதுகாப்புத் தேவைகளை நிறைவு செய்ய ஏதுவாக வழக்கமான கோடை விடுமுறை காலத்தையும் சேர்த்துப் போதிய அவகாசம் அளிக்கப்பட்டது. இப்பாதுகாப்புத் தேவைகளைக் கண்டிப்பாக நிறைவு செய்து, பள்ளிகள் மீண்டும் திறக்கப்படுவதற்கு முன்னதாக, தேவையான ஒப்புதலைப் பெற வேண்டுமென இப்பள்ளி நிருவாகங்களுக்கு மீண்டும் இவ்வாண்டு ஏப்ரல் திங்களில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு, போதிய அறிவிப்புக் கொடுத்தும் பல மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள், கட்டடங்களின் கட்டுமான உறுதித் தன்மையையும், குழந்தைகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்து வதற்கு வரையறுக்கப்பட்ட விதிமுறைகளை நிறைவு செய்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து ஒப்புதலைப் பெறத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஒப்புதல் பெறுவதற்கான விண்ணப்பங்களைக் கூட சில மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் தாக்கல் செய்யவில்லை. இது, கட்டடங்களின் கட்டுமான உறுதித் தன்மை, குழந்தைகளின் பாதுகாப்பு ஆகியவை குறித்த விதிமுறைகளை நிறைவு செய்வதில் அவற்றின் அக்கறையற்ற அலட்சியப் போக்கையே காட்டுகிறது. இவ்வாறு விதிமுறை களை அலட்சியப்படுத்துவதானது இப்பள்ளிகளில் சேர்ந்து பயிலும் குழந்தைகளின் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தும். இதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

கோடை விடுமுறைக்குப் பிறகு குழந்தைகள், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கு மீண்டும் செல்லத் தொடங்கி இருக்கிறார்கள். கட்டடத்தின் கட்டுமான உறுதித் தன்மை, குழந்தைகளின் பாதுகாப்பு ஆகியவை குறித்த விதிமுறைகளை நிறைவு செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பெரும்பாலான கல்வி நிறுவனங்கள் தற்போது உணர்ந்து அவற்றை நிறைவு செய்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஒப்புதலைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இத்தகைய நிலைமையில் குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் ஏற்படக் கூடிய இடர்பாடுகளையும், இடப்பெயர்வுகளையும் தவிர்ப்பதற்காக, இக்கல்வி நிறுவனங்களின் நிருவாகங்கள், விதிமுறைகளை நிறைவு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து தேவையான ஒப்புதலைப் பெறுவதற்கு 31.8.2005 வரை மூன்று மாத கால அவகாசம் அளிப்பதென நான் முடிவு செய்துள்ளேன். இக்கால வரம்பிற்குள் விதிமுறைகளை நிறைவு செய்யாத பள்ளிகள் கடுமையான நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

பள்ளிக் குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து விதிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டியதன் கட்டாயத் தேவையையும், இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு, இப்பள்ளி நிருவாகத்தினர் தற்போது அளிக்கப் பட்டுள்ள கால நீட்டிப்பைப் பயன்படுத்திக் கொண்டு அதற்குள்ளாக வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் முழுமையாக நிறைவு செய்து ஒப்புதலைப் பெறுவார்கள் என நம்புகிறேன். ❖



# திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆணை

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூரில் அமைந்துள்ள அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயிலுக்கு மரத்தினால் ஆன ஒரு புதிய திருத்தேரை ரூ.20 இலட்சம் மதிப்பில் உருவாக்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூரில் அமைந்துள்ள அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், அருணகிரிநாதர், வள்ளலார், பாம்பன் சுவாமிகள் ஆகிய அருளாளர்களால் பாடப்பெற்ற சிறந்த பிரார்த்தனைத் தலமாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள். 16.5.2005 அன்று, இத்திருக்கோயிலுக்குச் சென்று முருகப்பெருமானைத் தரிசித்தார்கள். அப்பொழுது அந்தக் கோயில் நிருவாகத்தினரும், பக்தர்களும், அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயிலுக்கென தனியாக ஒரு மரத்தேர் இல்லை என்றும், தற்போது, திருக்கோயில் பிரம்மோற்சவத் தேர்த்திருவிழா ஒரு சிறிய சகடை, அதாவது சிறு சட்டத் தேரில் மட்டுமே கொண்டாடப்பட்டு வருவதாகவும், எனவே இத்திருக்கோயிலுக்கென புதியதாக மரத்தேர் ஒன்றினை உருவாக்கித் தர வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த வேண்டுகோளினை ஏற்று, இந்து சமய அறநிலையத்துறையின் மூலமாக, ரூ. 20 இலட்சம் மதிப்பில், திருப்போரூர் அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயிலுக்கு மரத்தினால் ஆன ஒரு புதிய திருத்தேரை உருவாக்கும் திருப்பணியைச் சிறப்புடன் மேற்கொண்டு, விரைவில் முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.

* * *



கவியரசு கண்ணதாசன் அவர்களின் 79ஆவது பிறந்தநாளையொட்டி 24-6-2005 அன்று, சென்னை தியாகராய நகர், ஜி.என்.செட்டி சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# புதுக்கோட்டை, வாராப்பூர் ஊராட்சியில்
# விறகு மூலம் மின்உற்பத்திச் சாதனை

குறைந்த செலவில் விறகுகள் மூலம் மின் உற்பத்தி செய்து சாதனைப் படைத்து வருகிறது, புதுக்கோட்டை மாவட்டம் வாராப்பூர் ஊராட்சி. ஊராட்சி மன்றத்தலைவர் திரு.எஸ்.ராமசாமி இதற்கான முயற்சியில் கடந்த 6 மாதங்களாக ஈடுபட்டு தற்போது வெற்றிக் கண்டுள்ளார்.

ரூ.3.15 இலட்சம் செலவில் இதற்கான ஜெனரேட்டர் குஜராத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

விறகுகள், குச்சிகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி அதனை எரித்து, அதனைக் கொண்டு ஜெனரேட்டர் மூலம் மின் உற்பத்திச் செய்யப்படுகிறது.

இத்திட்டம் பயோ-மாஸ் கேஸி பயர் என்று அழைக்கப்படுகிறது.

**மின்சாரத்திற்கும் பயோ-மாஸ் கேஸி பயர் மின்சாரத்திற்கும் உள்ள செலவின வித்தியாசம்**

| மின்வாரியம் | பயோ – மாஸ் கேஸி பயர் |
|---|---|
| ஒரு யூனிட்டுக்கு ரூ.3.5 | யூனிட்டுக்கு ஆகும் விறகின் மதிப்பு 75 காசுகள் |
| கூலி 0.46 காசு | கூலி 0.66 காசு |
| பராமரிப்பு 0.71 காசு | பராமரிப்பு 0.28 காசு |
| மொத்தச் செலவு ரூ.4.67 | மொத்தச் செலவு ரூ.1.69 |

இப்பகுதியில் தைலமரங்கள் உள்ளிட்ட மரங்கள் அதிகளவில் இருப்பதால் மின் உற்பத்தி செய்ய ஏதுவாக உள்ளது.





இந்தத் திட்டத்தின் மூலம் 1 மணி நேரத்தில் 10 கிலோ விறகினைப் பயன்படுத்தி 20 யூனிட் மின்சாரத்தை உற்பத்திச் செய்ய முடியும்.

பயோ-மாஸ் கேஸி ப்யர் மூலம் உற்பத்தியாகும் மின்சாரம் மின்வாரியத்திலிருந்து பெறும் மின்சாரத்தை விட குறைந்த விலையில் உற்பத்திச் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

மின்வாரியம் மூலம் பெறப்படும் மின்சாரம் ஒரு யூனிட்டுக்கு ஆகும் செலவு ரூ.4.67. பயோ-மாஸ் கேஸி பயர் மூலம் பெறும் மின்சாரம் ஒரு யூனிட்டுக்கு ஆகும் செலவு ரூ.1.69.

இதன் மூலம் ஒரு யூனிட் மின்சாரத்துக்கு ரூ.2.98 மிச்சமாகிறது.

தற்போது வாராப்பூரில் 4 ஹெச்பி (குதிரை சக்தி) திறன் கொண்ட மோட்டார் பம்புசெட்டுகள் 2 பயோ-மாஸ் கேஸி பயர் மின்சாரம் மூலம் இயக்கப்படுகிறது.

விரைவில் இதன் மூலம் ஊராட்சியில் 200 தெருவிளக்குகள் எரிய வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**துரை. தாமரைச்செல்வம்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை.

# மிளகாய் வற்றல் கொள்முதலைத் தீவிரப்படுத்த நடவடிக்கை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
(14-5-2005)

ஏற்றுமதிச் சந்தையின் பல்வேறுபட்ட காரணிகள் மற்றும் இந்த ஆண்டு பயிர் விளைச்சலில் ஏற்பட்ட உயர்வு ஆகியவற்றால், அங்காடியில் மிளகாய் வற்றலின் விலை சரிந்து, அதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர் என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பருவத்தில் விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டியதன் அவசியத்தை எதிர்நோக்கி, விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED), என்னுடைய உத்தரவுகளின் பேரில், 2005-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் நியாய விலையில் மிளகாய்வற்றல் நேரடிக் கொள்முதல் நடவடிக்கையை ஏற்கெனவே தொடங்கிவிட்டது. முதன்மைப் பருவத்தில் விவசாயிகள் பயன்பெறும் விதத்தில், மிளகாய் வற்றலுக்கு ஆதரவு விலை அளித்திட இந்த நடவடிக்கை பெரிதும் உதவியுள்ளது.

மிளகாய் பருவம் முடிவுறும் இந்தத் தருணத்தில், கடைசி காய்ப்பான நீளம் குறைந்த மிளகாய் பறிக்கும் பணி நடைபெற்று வந்தாலும், சந்தையில் விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகளிடம் ஏற்கெனவே பறித்த மிளகாய் வற்றல் இன்னும் இருப்பு உள்ளது என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. மிளகாய் மிகுதியாக விளையும் பகுதிகளான, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில், விவசாயிகளிடம் இருந்து மேலும் மிளகாய் வற்றலை உடனடியாகக் கொள்முதல் செய்யுமாறு நான் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு உத்தர விட்டுள்ளேன்.

இந்த மிளகாய்ப் பருவம் முடியும் வரை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், நியாய விலையில், அதாவது சம்பா (Chamba) ரகம், வகை I (நல்ல தரம்) வற்றலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,300 என்ற விலையிலும், வகை II (சராசரி தரம்) வற்றலை குவிண்டால் ஒன்றுக்கு 1,900 ரூபாய் என்ற விலையிலும் கொள்முதல் செய்யும். முண்டு (Mundu) ரக வற்றல், குவிண்டால் ஒன்றுக்கு 100 ரூபாய் குறைவாக, அதாவது, முறையே 2,200 ரூபாய் மற்றும் 1,800 ரூபாய் என்ற விலைகளில் கொள்முதல் செய்யப்படும். விவசாயிகளுக்குக் கிடைக்கும் அங்காடி விலை அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இல்லாத நிலையில், அவர்களிடமிருந்து மேலும் மிளகாய் வற்றலைக் கொள்முதல் செய்யும் இந்த நடவடிக்கையை அவர்கள் பெரிதும் வரவேற்பார்கள்.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்ற இந்த திட்டத்தை மத்திய அரசின் அங்காடித் தலையீட்டுத் திட்டத்தின் (Market Intervention Scheme) கீழ் சேர்க்க வேண்டும் என்று கோரி, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதி உள்ளேன். அங்காடித் தலையீட்டுத் திட்டத்தினால் ஏற்படும் இழப்பில் 50 சதவிகிதத்தை மட்டுமே மத்திய அரசு ஈடுசெய்கிறது. இதற்கு மாறாக, இழப்பு முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டுள்ளேன். அங்காடித் தலையீட்டுத் திட்டத்தின் இந்த வழிகாட்டிக் குறிப்புகள் திருத்தி அமைக்கப்படுவதை எதிர்நோக்கி தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த மிளகாய் வற்றல் கொள்முதலை அங்காடித் தலையீட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்க வேண்டுமென நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஆதரவு அளித்திடும் விதத்தில் மிளகாய் வற்றல் கொள்முதலைத் தீவிரப்படுத்துமாறு நான் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு உத்தரவிட்டுள்ளேன். ❖

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில்

# 13ஆவது அகில இந்திய மாங்கனிக் கண்காட்சி

**ப**தின்மூன்றாவது அகில இந்திய மாங்கனிக் கண்காட்சி 15.5.2005 முதல் 29.5.2005 வரை கிருஷ்ணகிரியில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கண்காட்சியில் பல்வேறு மாநிலங்களிலிருந்து வரப்பெற்ற தோத்தாபுரி, அல்போன்சா, ரஸ்புரி, செந்தூரா, நீலம் போன்ற பல்வேறு வகையான மாங்கனிகள், பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டன. மாம்பழச்சாறு மற்றும் உணவு பொருட்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. ‘மா’ போட்டி அரங்கில் பழங்களால் அமைக்கப்பட்டிருந்த கோபுரம், பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது.



15.5.2005 அன்று நடைபெற்ற தொடக்க விழாவில், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ. மில்லர் அவர்கள், மாவட்ட சுற்றுலாப் பொருட் காட்சியினைத் திறந்து வைத்தும், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள், பல்துறைப் பணிவிளக்கக் கண்காட்சியினைத் திறந்து வைத்தும், இணையதளத்தைத் தொடங்கி வைத்தும் சிறப்புரையாற்றினர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., அவர்கள், விழாவிற்குத் தலைமையேற்று தலைமையுரையாற்றினார்.

விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் பேசும்போது :–

கிருஷ்ணகிரி மாவட்டம் மேம்பட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தனிக் கவனம் செலுத்தி வருகிறார்கள். கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ரூ.25 கோடி செலவில் குடிநீர்த் திட்டப் பணிகளும், ரூ.5.20 கோடியில் சாலை மேம்பாட்டுப் பணிகளும், ரூ.77 இலட்சத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்திய அளவிலும் கிருஷ்ணகிரி மாவட்டம் தனி இடம் பெறும் என்பதில் நம்பிக்கையுடன் செயலாற்றி வருகின்றோம். மாங்கனிக் கண்காட்சியில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து உற்பத்தியாளர்கள் கொண்டு வந்திருந்த 100க்கும் மேற்பட்ட ரக மாங்கனிகள் போட்டி அரங்கில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப் பட்டன. இம்மாவட்டத்தைச் சார்ந்த விவசாயப் பெருமக்கள் அதிக அளவில் மாம்பழம் உற்பத்திச் செய்து வருகிறார்கள். மாம்பழச் சாறு தயாரிக்கும் நிறுவனங்கள் செயல்படுவதால் நூற்றுக்கணக்கானோர் வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள். கிருஷ்ணகிரி மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர், பல்வேறு திட்டங்களை மாவட்டத்திற்கு அறிவித்து அதற்கான நிதியையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். பெரிய நகரங்களில் உள்ளது போன்ற விளையாட்டரங்கம் தற்போது நிறுவப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளது. இது போன்ற பல்வேறு திட்டங்களைச்

செயல்படுத்த நிதி ஒதுக்கீடு வழங்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு மாவட்ட நிருவாகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்.

விழாவில், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:–

"கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 30,800 எக்டேரில் 40 சதவிகிதம் மா உற்பத்தியாகின்றது. இந்தக் கண்காட்சியினால் மா விவசாயிகள் பயன்பெறுவர். தமிழ்நாட்டை இந்தியாவில் முதல் மாநிலமாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள். நீர்ப்பாசனத்திற்கு ரூ.20 கோடி, சாலை மேம்பாட்டிற்கு ரூ.30 கோடி, கெலவரப்பள்ளி அணைக்கு ரூ.1.75 கோடி, மருத்துவமனை மேம்பாட்டிற்கு ரூ.12.50 கோடி, ஸ்வர்ண ஜெயந்தி திட்டத்திற்கு ரூ.11 கோடி, சுற்றுலாத்துறைக்கு ரூ.77 இலட்சம் என நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறக் குடிநீர்த் திட்டத்துக்கு ரூ.1,740 கோடி, நகர்புறக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்துக்கு ரூ.822 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்ட ரூ.10 கோடி, பேருந்து நிலையம் கட்ட ரூ.6.50 கோடி என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், நிதி ஒதுக்கியுள்ளார்கள். அனைத்து மாணவ, மாணவிகளும் பயன்பெறும் வகையில் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், ஆய்வகம், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது".

விழாவில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றியபோது கூறியதாவது:–

"வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மாங்கனிக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர்தான், சுற்றுலாத்துறை தனியாகப் பிரிக்கப்பட்டு அதற்குத் தனி அமைச்சர் நியமனம் செய்யப்பட்டார். சுற்றுலாத்துறைக்குத் தனிக் கவனம் செலுத்திப் பல்வேறுத் திட்டங்களை அறிவித்துள்ளார். அவதானப்பட்டி ஏரியில் சிறுவர் பூங்கா மற்றும் படகு குளம் அமைக்க ரூ.60 இலட்சமும், தேன்கனிக்கோட்டை தேவர்பேட்ட கோயிலைப் புதுப்பிக்க ரூ.69 இலட்சமும், தருமபுரி மாவட்டம் தீர்த்தமலைக் கோயிலைப் புதுப்பிக்க ரூ.50 இலட்சமும், ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தை மேம்படுத்த ரூ.1.50 கோடியும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. கடந்த 2002–இல் ரூ.17 கோடியும், 2003–இல் ரூ.32 கோடியும், 2004–இல் ரூ.27 கோடியும், நடப்பாண்டில் ரூ.32 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுச் சுற்றுலாத்துறை மேம்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மாமல்லபுரத்தில் நாட்டிய விழா அரசால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இதில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் கலந்து கொள்கிறார்கள். கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் விழா ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் நடத்தப்பட்டது. இருப்பினும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்கி இருந்து விழாவைப் பார்த்துவிட்டுச் சென்றனர்.

அரசுக்கு அன்னிய செலாவணியை ஈட்டித் தருவதில் ஜவுளி ஆபரணங்களுக்கு அடுத்தபடியாக சுற்றுலாத் துறை மூன்றாவது இடத்தில் உள்ளது. எனவே, சுற்றுலாத்தலங்களை மேம்படுத்துவதில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிறப்பானத் திட்டங்களை அறிவித்துள்ளார்".

29.5.2005 அன்று மாங்கனிக் கண்காட்சியில் இடம் பெற்ற சிறந்த அரங்குகளுக்கும், மா சாகுபடியாளர்களுக்கும், மா கண்காட்சி அரங்குகளுக்கும் பரிசளிப்பு விழா நடைபெற்றது. விழாவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். சிறந்த விவசாயிகளுக்கும், காட்சி அரங்கத்திற்கும் பரிசுகளை வழங்கி மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்கள் பேசியதாவது:–

தமிழகம் உணவு உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. சோளம், கம்பு, நிலக்கடலை, கரும்பு, எண்ணெய் வித்துத் தானியங்கள், மரவள்ளிக் கிழங்கு, முட்டைகோஸ், மஞ்சள் ஆகிய உணவு உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. தேங்காய், அரிசி, வாழையில் இரண்டாம் இடத்திலும், பருத்தியில் மூன்றாம் இடத்திலும் உள்ளது. இரண்டாம் இடத்தில் உள்ள உணவு உற்பத்தியை முதலிடத்திற்குக் கொண்டு வர தமிழக அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளாய் வறட்சியால் பாதிக்கப்பட்ட போது கூட உணவு உற்பத்தியில் தமிழகம் முன்னேற்றம் அடைந்துள்ளது. கடந்த ஆண்டு 90 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்திச் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 55 இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்ய வேண்டும் என இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 158.11 இலட்சம் மெட்ரிக் டன் உணவு

உற்பத்தியை எட்ட வேண்டும் என இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் மா விளைச்சலுக்கு ஏற்ற விலை கிடைக்கவில்லை என இங்கு பேசிய பலரும் சுட்டிக் காட்டினர்.

மாம்பழத்திற்கு பல மருத்துவக் குணங்கள் உள்ளன. மருத்துவக் குணங்கள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினால் மாம்பழ விளைச்சலுக்கு ஏற்ற விலையினை விவசாயிகள் எளிதில் பெற முடியும். இந்தியாவில் மா உற்பத்தியில் தமிழகம் ஆறாம் இடத்தில் உள்ளது. தமிழகத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. கிருஷ்ணகிரியில் 150 ஏக்கரில் ரூ.50 கோடி செலவில் மா ஏற்றுமதி மண்டலம் அமைக்க மாவட்ட நிருவாகத்தின் மூலம் அரசுக்குத் திட்டம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அடுத்தாண்டுக்குள் கிருஷ்ணகிரியில் மா ஏற்றுமதி மண்டலம் அமைக்க அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும். தேனியில் ரூ.27.06 கோடியில் மா ஏற்றுமதி மண்டலம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடலூரில் முந்திரிக்கு ரூ.10.36 கோடியில் புனரமைப்புத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. திருச்சியில் ரூ.10 கோடியில் வாழைக்கு ஏற்றுமதி மையமும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 400 ஏக்கர் நிலப்பரப்பில், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தவுள்ளோம். இதில் அதிக அளவில் மாங்கன்றுகளை நடவும், ஒரு எக்டேருக்கு ரூ.8 ஆயிரம் வரையில் மானியம் வழங்கவும் அரசு திட்டமிட்டுள்ளது – இவ்வாறு மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாநிலங்களவை உறுப்பினர் திரு. சி. பெருமாள், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மு. தம்பிதுரை, திரு. கோவிந்தராஜ், திரு. கே.பி. முனுசாமி, திரு. கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மை விற்பனைக் குழுத் தலைவர் திரு. ஆர். விஜயன், அறங்காவலர் குழுத் தலைவர் திரு. கோ. அர்ச்சுனன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி. ஆர். அம்சவேணி, நகராட்சித் தலைவர் திரு. ஏ.எஸ். சத்தியமூர்த்தி, மாவட்ட ஊராட்சித் துணை தலைவர் திரு. கோ. ரவிச்சந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர் திரு. செ. பெருமாள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. மு. அசோக்குமார், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ட்டி. சுந்தரம், திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை



திரு. ஆர். சக்திவேல், கோட்டாட்சியர் திருமதி. ஆர். சுந்தர வல்லி, மண்டல உதவி இயக்குநர், கலை பண்பாட்டுத் துறை திரு. இரா. குணசேகரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு. சிவப்பிரகாசம், உதவி இயக்குநர் (வேளாண்மை) திரு.லோகநாதன், வேளாண்மை அலுவலர் திரு.பச்சையப்பன், மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு. அ. இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை, ஊரக வளர்ச்சித் முகமை, சிறுசேமிப்புத்துறை, காவல்துறை, சுகாதாரத் துறை, ஆவின், சமூகநலத்துறை, சுற்றுலாத்துறை, வேளாண்மைத்துறை, கல்வித்துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை, வனத்துறை ஆகிய துறைகளின் சார்பில் அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களைப் பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் அரங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

– **மு.விஜயகுமார்**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
கிருஷ்ணகிரி.

* * *

# ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்ற பெற்றோர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியுதவி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 21.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்ற திருநெல்வேலி மாவட்டம் தென்காசியைச் சேர்ந்த திருமதி. சிக்கந்தர் பேகம் – முகம்மது அஜீஸ் குடும்பத்திற்கும், ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்ற தேனி மாவட்டம் அல்லி நகரத்தைச் சேர்ந்த திருமதி. நாகஜோதி – ராஜமாணிக்கம் குடும்பத்திற்கும், அந்தக் குழந்தைகளின் நலன் கருதி ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாயும், ஒவ்வொரு ஆண் குழந்தைக்கும் தலா 50 ஆயிரம் ரூபாயும் நிதியுதவியாக வழங்கிடவும், அத்தொகையை, குழந்தைகளின் பெயரில் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் வைப்புநிதியாக முதலீடு செய்து, மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையை, குழந்தைகளின் வளர்ச்சிக்கும் பராமரிப்புக்கும் பயன்படுத்திக் கொள்ளவும் உத்தரவிட்டு, இதற்கான ஆணைகளை அந்தக் குழந்தைகளின் தாய் தந்தையரிடம் நேரில் வழங்கினார்கள்.

ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகளைப் பெற்ற திருநெல்வேலி மாவட்டம் தென்காசியைச் சேர்ந்த திருமதி. சிக்கந்தர் பேகம் அவர்கள், தனது கணவர் மருந்துக் கடையில் பணிபுரிவதாகவும், அவரது சொற்ப வருமானத்தில் இக்குழந்தைகளைக் காப்பாற்றுவதில் மிகவும் சிரமப் படுவதாகவும், மிகவும் வறுமையான, சூழ்நிலையில் உள்ள தங்களுக்கு இந்தக் குழந்தைகளை நன்கு வளர்க்க உதவி புரிந்திட வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை ஏற்று, இந்தக் குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்காகத் தற்போது பிறந்துள்ள 3 பெண் குழந்தைகளுக்கும், ஒரு பெண் குழந்தைக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 3 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிட



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஏற்கெனவே ஆணையிட்டிருந்தார்கள்.

அதேபோல, ஒரே பிரசவத்தில் இரண்டு ஆண் குழந்தைகள் மற்றும் ஒரு பெண் குழந்தை ஆக மூன்று குழந்தைகளைப் பெற்ற தேனி மாவட்டம் அல்லி நகரத்தைச் சேர்ந்த திருமதி நாகஜோதி என்பவர், தனது கணவர் தச்சு வேலை செய்வதாகவும் தனது குடும்பம் மிகவும் வறுமையான சூழ்நிலையில் உள்ளதாகவும் தெரிவித்து, இந்தக் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க, தங்களுக்கு

உதவி புரிந்திட வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை ஏற்று, இந்த இரண்டு ஆண் குழந்தைகளுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் மற்றும் ஒரு பெண் குழந்தைக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஆக மொத்தம் 2 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.

இவ்வாறு வழங்கப்படும் நிதியை அந்தந்த குழந்தைகளின் பெயரில் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் வைப்புநிதியாக முதலீடு செய்யவும், அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையை, குழந்தைகளின் வளர்ச்சிக்கும், பராமரிப்புக்கும், பயன் படுத்திக் கொள்ளவும் ஆணையிட்டவாறு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 21.6.2005 அன்று தலைமைச்செயலகத்தில், சிக்கந்தர் பேகம் – முகம்மது அஜீஸ் குடும்பத்திற்கு மொத்தம் 3 இலட்சம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணையையும், நாகஜோதி – ராஜமாணிக்கம் குடும்பத்திற்கு 2 இலட்சம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணையையும் அவர்களிடத்தில் நேரில் வழங்கினார்கள்.

இதன்மூலம், திருநெல்வேலி மாவட்டம் தென்காசியைச் சேர்ந்த திருமதி. சிக்கந்தர் பேகம் – முகம்மது அஜீஸ் குடும்பத்திற்கு மாதந்தோறும் 1,750 ரூபாயும், தேனி மாவட்டம் அல்லி நகரத்தைச் சேர்ந்த நாகஜோதி – ராஜமாணிக்கம் குடும்பத்திற்கு மாதந்தோறும் 1,167 ரூபாயும் நிதியுதவியாகக் கிடைக்கும். மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, இந்தக் குழந்தைகள் 18 வயது நிறைவடையும்போது, உயர்கல்வி பயிலவோ அல்லது சொந்தத் தொழில் தொடங்கவோ, பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இந்த வைப்பீட்டுத் தொகை அவர்களுக்கு வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து ஆணைகளைப் பெற்றுக் கொண்ட குழந்தைகளின் பெற்றோர் தங்களது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டனர்.

✶

# வியப்பூட்டும் உண்மைகள்



***ஜெ**ர்மனியைச் சேர்ந்த புகழ்பெற்ற கவிஞர் ஹான்ஸ் விலேம். இவருக்கு தான் பிறந்த கிராமத்தில் உள்ள ஒரு ஓக் மரத்தின் மீது அவருக்கு அளவு கடந்த ஆசை. சிறு வயது முதலே அவருக்கும் அந்த மரத்திற்கும் இடையே ஒரு நட்பு உருவாகிவிட்டது. தான் இறந்தபின் தன் உடலை அந்த மரத்திலேயே அடக்கம் செய்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார். அவர் இறந்தபின், அவரது விருப்பப்படி மரத்தின் நடுவில் பெரிதாகக் குடைந்து 1824ஆம் ஆண்டு மார்ச் முதல் தேதி நின்ற நிலையில் அவரது உடல் அதில் அடக்கம் செய்யப்பட்டது.*

◆ ◆ ◆



***பி**ளாக் பேர்ட் என்பவர் ஒமாகா இந்தியர்களின் தலைவர். அவருக்குத் தனது குதிரைமேல் பிரியம். எப்போதும் அதன்மேல் ஏறி அமர்ந்த வண்ணம் சுற்றிக் கொண்டிருப்பார். தான் இறந்தவுடன் தன் உடலைக் குதிரையில் அமர்ந்தபடியே புதைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதன்படியே அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.*

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களை,
7-6-2005 அன்று தலைமைச்செயலகத்தில்,
ஆஸ்திரேலியா நாட்டின்
வெளியுறவு விவகாரத்துறை அமைச்சர்
திரு.அலெக்சாண்டர் டோனர் அவர்கள்
மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
8-6-2005 அன்று தலைமைச்செயலகத்தில்,
ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகளைப் பெற்ற
மதுரை வேட்டையன்பட்டி செல்வம்-சுரஸ்வதி
குடும்பத்திற்கு அந்தக் குழந்தைகளின்
நலன் கருதி ஒரு பெண் குழந்தைக்கு
ரூ.1 இலட்சமும், 2 ஆண்
குழந்தைகளுக்குத் தலா ரூ.50,000-மும்
நிதியுதவியாக வழங்கினார்கள்.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
8-6-2005 அன்று
தலைமைச்செயலகத்தில்,ஒரே பிரசவத்தில்
4 குழந்தைகளைப் பெற்ற
கடலூர் மாவட்டம், பாதிரிக் குப்பம்
தமிழ்ச்செல்வன் - கலைமணி
குடும்பத்திற்கு அந்தக் குழந்தைகளின்
நலன் கருதி ஒரு பெண் குழந்தைக்கு
ரூ.1 இலட்சமும், 3 ஆண்
குழந்தைகளுக்குத் தலா ரூ.50,000-மும்
நிதியுதவியாக வழங்கினார்கள்.



# உயிரிழந்த காவலர் குடும்பத்திற்குக் கருணைத்தொகை

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 23.5.2005 அன்று தலைமைச் செயலகத்தில், காட்டுக் கொள்ளையன் வீரப்பனின் கூட்டாளிகளால் 1991ஆம் ஆண்டில் தாக்கப்பட்டு மரணம் அடைந்த காவலர் திரு.நாகராஜ் அவர்களின் குடும்பத்திற்குக் கருணைத் தொகையாக 8 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை அவரது மனைவி திருமதி மாதேஸ்வரி அவர்களிடம் வழங்கினார்.

காட்டுக் கொள்ளையன் வீரப்பனையும், அவனது கும்பலையும் ஒழித்துக்கட்டி, தமிழகம் மற்றும் கர்நாடக மக்கள் அமைதியுடன் வாழ வழியமைத்துக் கொடுத்த தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படையினரைக் கௌரவிக்கும் வகையில், அவர்கள் அனைவருக்கும் ஒரு படி பதவி உயர்வு, தலா 3 இலட்சம் ரொக்கம் மற்றும் வீட்டுமனைகள் ஆகியவற்றைப் பரிசாக வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சிறப்புக் காவல் பதக்கங்களையும் வழங்கினார்கள். அத்துடன் வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகளுடன் முன்னர் நடந்த மோதல்களில், தங்களது இன்னுயிரை இழந்தவர்கள் மற்றும் காயம் அடைந்தவர்களின் தியாகத்தை மறந்துவிடாமல், அவர்களுக்குத் தகுந்த கௌரவம் அளிக்கப்படும் என்றும் அறிவித்தார்கள். இதன் அடிப்படையில், முன்னதாக 4.7.1991 அன்று மரணம் அடைந்த காவலர் திரு.நாகராஜ் அவர்களின் குடும்பத்திற்குத் தற்போதுள்ள நடைமுறைப்படி வழங்கப்படும் கருணைத் தொகையான 10 இலட்சம் ரூபாய் வழங்கிடவும், இதில் ஏற்கெனவே அளிக்கப்பட்ட 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் போக, மீதமுள்ள 8 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ரொக்கமாக அவரது மனைவி திருமதி மாதேஸ்வரி அவர்களிடம் வழங்கிடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 28.10.2004 அன்று ஆணையிட்டார்கள்.

30.10.2004 அன்று சிறப்பான விழா ஒன்றை நடத்தி, அதிரடிப்படை வீரர்களுக்கான பரிசுகளையும், உதவிகளையும் வழங்கியபோது திருமதி மாதேஸ்வரி அவர்கள் இவ்விழாவில் பங்கேற்க இயலாத நிலையில் இருந்த காரணத்தால், இந்த ரொக்க உதவிக்கான காசோலையைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வழங்கும்படி ஆணையிட்ட இந்தக் கருணைத் தொகையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது கரங்களிலிருந்து நேரில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று திருமதி மாதேஸ்வரி அவர்கள் விருப்பம் தெரிவித்ததையடுத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திருமதி மாதேஸ்வரி அவர்களை 23.5.2005 அன்று சென்னை தலைமைச் செயலகத்திற்கு வரவழைத்து 8 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை நேரில் வழங்கினார்கள்.

நிதி உதவியைப் பெற்றுக்கொண்ட திருமதி மாதேஸ்வரி, கண்ணீர் மல்க தனது நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் தெரிவித்துக்கொண்டார். ❖

# வறட்சியைத் தாங்கி வளரும் சோற்றுக் கற்றாழை

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், குன்னூர் கிராமத்தில் விவசாயிகள் ஒப்பந்த முறையில் கற்றாழை பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளதை, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு.இன்பத்தமிழன் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அ.முகமது அஸ்லம், இ.ஆ.ப., அவர்களும், நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.



சோற்றுக்கற்றாழைப் பயிர் பல மருத்துவக் குணங்கள் கொண்ட மூலிகைப் பயிராகும். இப்பயிரிலிருந்து கிடைக்கும் திரவத்தின் மூலம் பல்வேறு மருந்துப் பொருட்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு உள்நாட்டுப் பயன்பாடு மற்றும் ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. சோற்றுக் கற்றாழைப் பயிர் தரம் குறைந்த மண்ணிலும் வறட்சியைத் தாங்கி வளரக் கூடியதாகும். சோற்றுக் கற்றாழைப் பயிர்களைப் பதப்படுத்தி, அதன் மூலம் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் தற்போது துவக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒப்பந்தமுறை விவசாயமாக சோற்றுக் கற்றாழைப் பயிர்களைப் பயிரிட விவசாயிகள் முன்வந்துள்ளனர். இதன் அடிப்படையில் சோற்றுக் கற்றாழைப் பயிர்களை முன்மாதிரியாக விருதுநகர் மாவட்டம் கிருஷ்ணன் கோவில் அருகில் உள்ள குன்னூர் கிராமத்தில் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். சரளைக் கற்கள் மிகுந்த மண்பாங்கில் சோற்றுக் கற்றாழைப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து இருப்பதால், கிணற்றில் இருக்கும் பாசன நீரை சொட்டு நீர்ப் பாசனம் (இன்லைன் தொழில்நுட்பம் மூலம்) அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. சொட்டுநீர்ப் பாசன அமைப்பு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அமைக்கப்பட்டு 25 சதவிகித அரசு மானியமாக ரூபாய் 55 ஆயிரம் வழங்கப் பட்டுள்ளது.

ஒரு வருடத்திற்கு ஒரு ஏக்கருக்கு சுமார் 40 டன் உற்பத்தி செய்யலாம். ஒரு டன்னுக்கு ரூபாய் 2 ஆயிரத்து 500 வீதம் ரூபாய் ஒரு இலட்சம் தொகைக்கு ஒப்பந்தமுறை மூலம் தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒப்பந்தமுறை விவசாயத்தால் விவசாயிகளுக்கு நல்ல இலாபம் கிடைக்கிறது.

சோற்றுக் கற்றாழைப் பயிர்களுக்குச் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துள்ளதால் விளைச்சல் அதிகரிப்பதுடன், பயிர்கள் தரமாகக் காணப்படுகிறது. கிடைக்கின்ற பாசன நீரில் அதிகப் பரப்பளவில் விவசாயம் செய்ய இயலுகிறது. வறட்சி மிகுந்த இப்பகுதியில் சோற்றுக் கற்றாழை நல்ல இலாபம் ஈட்டும் மாற்றுப் பயிராக விளங்குகிறது.

**– சி.கண்ணதாசன்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
விருதுநகர்.

* * *



# விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆணை

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்குபெற்று, சுதந்திரம் அடைவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களான தங்களுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனு கொடுத்திருந்த சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 6 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை யிட்டுள்ளார்கள்.

**சென்னை மாவட்டம் :** கொருக்குப்பேட்டை பாரதி நகரைச் சேர்ந்த திரு.என்.முகமது கனி, **கோயம்புத்தூர் மாவட்டம் :** காரமடை கிராமம், மகாத்மா காந்தி சாலையைச் சேர்ந்த திரு.டி.பி. கனகராஜன், **மதுரை மாவட்டம் :** பேரையூர், சுப்பிரமணிய சுவாமி கோயில் தெருவைச் சேர்ந்த திரு.கே.ஆர்.கே.திருப்பதி ஆறுமுகம், பேரையூர் வட்டம் பாப்பையாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு.சு. குருசாமி ரெட்டியார், திருநகர், நெல்லையப்பபுரத்தைச் சேர்ந்த திரு. கே. ஏ.அண்ணாமலை, பழங்காநத்தம், ஆர்.சி. தெருவைச் சேர்ந்த திரு.ஜி.பாப்பையா ஆகிய விடுதலைப் போராட்ட வீரர்கள், தாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி, சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்ததாகவும், அதனடிப்படையில் தங்களுக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனவும் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

இந்த மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவர்களது தியாகத்தைப் போற்றி மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தை உடனடியாக வழங்கி ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, இவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியமாக, மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப்படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு மதிப்பளித்து கௌரவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வழங்கிட ஆணையிட்டுள்ள இந்த ஓய்வூதியத்திற்கான அரசு ஆணைகளை, விடுதலைப் போராட்ட வீரர்கள் சார்ந்துள்ள மாவட்டங்களைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் நேரில் வழங்குவார்கள்.

❖ ❖ ❖



# குற்றவாளிக்கு விரைந்து தண்டனை பெற்றுத் தந்த காவல்துறைக்குப் பாராட்டு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 26.6.2005

தமிழகத்தில் குற்ற எண்ணிக்கையைக் குறைத்து, குற்றங்களைக் கண்டுபிடிக்கும் சதவிகிதத்தை உயர்த்தி, குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி, அவர்களுக்கு உரிய தண்டனையை விரைந்து பெற்றுத் தருவதில் தமிழ்நாடு அரசின் காவல்துறை தொடர்ந்து சாதனை படைத்து வருகிறது.

ஒரு கொலை வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த 44 நாட்களிலேயே குற்றவாளிகளுக்கு விரைவு நீதிமன்றத்தின் மூலம் தண்டனை பெற்றுத் தந்து 16.12.2004 அன்று சாதனை நிகழ்த்தியது. இதனை அடுத்து, 7.2.2005 அன்று பதிவு செய்யப்பட்ட ஒரு கொலை வழக்கில், 8.3.2005 அன்று அதாவது 29 நாட்களிலேயே குற்றவாளிக்குத் தண்டனை பெற்றுத் தந்தது. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் பேசும் போது இந்த சாதனைகள் குறித்து நான் பெருமையுடன் தெரிவித்து, தமிழ்நாடு காவல்துறைக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டேன். இதனை அடுத்து இந்த சாதனைகளை மிஞ்சும் வகையில், வழக்குப் பதிவு செய்யப்பட்ட 17 நாட்களுக்குள் ஒரு கொலை வழக்கிலும், 16 நாட்களுக்குள் மற்றொரு கொலை வழக்கிலும், கடந்த மே திங்களில் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை பெற்றுத் தந்து தமிழக காவல் துறை மேலும் சாதனை படைத்தது. தற்போது இந்தச் சாதனைகளை எல்லாம் மிஞ்சும் வகையில், சென்னை மயிலாப்பூர் செயின்ட் மேரிஸ் சாலையைச் சேர்ந்த திரு.வரதராஜன் என்பவர், தங்கராஜ் என்பவரை 17.6.2005 அன்று கொலை செய்த வழக்கில், சென்னை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 8 நாட்களில் அதாவது 24.6.2005 அன்று குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது.

கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்ட 8 நாட்களில் துரிதமாக விசாரணை மேற்கொண்டு, குற்றவாளிக்கு விரைந்து தண்டனை பெற்றுத் தந்து சாதனையை விஞ்சிய சாதனை நிகழ்த்திய தமிழக காவல்துறைக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய மனமுவந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ★

**எல்லோரா**

*எல்லோராவிலுள்ள 34 குடைவரைகளில், 17 இந்து மதக் கோயில்கள் எட்டாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரையான கால கட்டத்தில் ராஷ்டிரகூட மன்னர்களால் கட்டப்பட்டது. புராணக் கதைகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மிகப் பெரிய குகைக்கோயில் கைலாயக் கோயில். இதைக் கட்டியவர் முதலாம் கிருஷ்ணன் எனும் ராஷ்டிரகூட மன்னர் (757–783). ஒரு பெரிய குன்றையே, சிற்பியின் கைச் சிற்றுளி பெரிய கட்டுமானக் கோயில் போல் உருவாக்கியிருப்பது உலகம் வியக்கும் பெரும் விந்தை.*

# பதக்கம் வென்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகை

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்**



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8.6.2005 அன்று தலைமைச் செயலகத்தில், பாகிஸ்தான் நாட்டின் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்ற 9ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு, இந்திய அணியில் பங்கு பெற்று பதக்கம் வென்றுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 19 விளையாட்டு வீரர் களுக்கும், வீராங்கனைகளுக்கும் மற்றும் அவர்களுடைய பயிற்றுநர் களுக்கும் ஊக்கத் தொகையாக மொத்தம் ரூபாய் 7 இலட்சத்து 36 ஆயிரத்திற்கான காசோலைகளை வழங்கிப் பாராட்டினார்கள்.



இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், 20.3.2004 முதல் 7.4.2004 வரை பாகிஸ்தான் நாட்டின் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்றது. இந்தப் போட்டிகளில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் தனித்திறன் போட்டிகளிலும், குழுப் போட்டிகளிலும், தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர். இவர்கள் தடகளம் (பெண்கள்), நீச்சல் (ஆண்கள்), ஸ்குவாஷ் (பெண்கள்), மேசைப்பந்து (ஆண்கள்), கையுந்து பந்து (ஆண்கள்) ஆகிய போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்கள் வென்றுள்ளனர்.

9ஆவது தெற்காசிய விளை யாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்கள் வென்று தமிழகத் திற்குப் பெருமையும், புகழும் சேர்த்த இந்த 19 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அவர்களது பயிற்றுநர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஊக்கத் தொகையாக மொத்தம் ரூபாய் 7 இலட்சத்து 36 ஆயிரத்திற்கான காசோலைகளை நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

ஊக்கத் தொகையினைப் பெற்றுக்கொண்ட வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அவர்களது பயிற்றுநர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

❖ ❖ ❖




திருநெல்வேலி

தமிழரசு
R.N.I.No.21446/70
RGN No.TN/PMG (CCR) 836/03-05, WPP-518

